ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர்

சகாயம்.

[illegible]

(ம.கோ.சு)

சந்திர [illegible]

கூத்திப்பாறை என்னும் நல்லூர் மகாகவி

ஸ்ரீகிருஷ்ண ராமானுஜ தமிழ்ப்பண்டிதர் அவர்கள்

இயற்றிய சாற்றுக்கவி.

554
239

சதுமறைப் பொருளென் கோயான்
சான்மனுவி திகாசத்தின்
முது துறைப்பொருளென் கோயான்
முந்தையோர் மொழியுஞ் சேர்த்தி
நித்திகரமுகர்சாமி நிறைமதி வல்லோன் செய்த
எதிரில்சீர் பத்திரபோத
தீவாரணி யென்னு நூலே.

---

## அட்டவணை.

OFFICE OF THE REGISTRAR
25 OCT 1926
MADRAS

---

தேவசாராதனம்.

மனிதன் பாவியானது.

விக்கிரகாராதனை நிலைத்த காரணம்.

புராணங்களின் விஷயங்களும் தற்காலச்செய்கைகளும்.

வனவாசமென்ற மூலகிரந்த விஷயங்கள்.

கிறிஸ்துவின் கோரிக்கைகள். இடங்கொடு என்பது.

சீஷர்களை அழைத்தது.

புளால் இச்சை நீக்கல்.

பாவிகளைத் தன்னிடத்தில் அழைத்தல்.

கர்த்தர் பழமொழியாலே விளங்குகிறார்.

கர்த்தரை உறவுகொண்டாடினது.

கர்த்தர்பட்டயம் வேண்டுமென்றார்.

கர்த்தர் வாகனத்தைத் தெரிந்துகொண்டது.

பாவம் மரணமும்.

நீதி நூல்.

கடவுளை அறிவது.

ஞாபக சின்னங்களைப்பற்றிய கவனிப்பு.

குருக்களைப்பற்றியது.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 8 | 20 | செய்திருப்பதால் நான் பாவி | |
| 8 | 21 | யல்லவென்றுசொல்லி | செய்திருக்கிறேன் |
| 8 | 21 | தங்களை ஒப்புக் | தங்களை பாவிகளென்று ஒப்புக் |
| 8 | 24 | தங்கள்கடமை | கடமையாம் |
| 8 | 29 | பொன்னர் | பொற்கொல்லர் |
| 9 | 11 | பிறந்தாரென்பது | பிறந்தது |
| 9 | 21 | அகற்றி | தன்னி |
| 9 | 22 | தல் | தலே |
| 9 | 22 | கடன் | கடமை |
| 10 | 7 | அய்யாவர்களுக்கு | யாவர்களுக்கு |
| 11 | 30 | முனிவர்களையும் | முன்னவர்களையும் |
| 12 | 2 | மற்வர்களை | மற்றவர்களை |
| 12 | 23 | அவைகளை | அவைகளை |
| 12 | 30 | யுடைவிடமாகக் | புறாவிடமாகக் |
| 15 | 12 | என்பதையும் இதைப்பற்றி | (அடிப்பு) |
| 15 | 27 | அவர்கள் | அவர்களுக்கு |
| 18 | 11 | நிலைநிருத்தினதாக | நிலை நிறுத்தினதாக |
| 18 | 21 | ஆளுகைச் | ஆளுகைக் |
| 18 | 29 | பரிச்சேயர் | பரிசேயர் |
| 19 | 2 | நாங்கள் ஒரு காரியம் சித்தியாக | |
| | 4 | வேண்டுமென்றெண்ணி சில சிற்றரசரிடம்சென்று | நாங்.........று (அடிப்பு) |
| 22 | 18 | எவ்விடத்தில் | இவ்விடத்தில் |
| 22 | 29 | வஸ்த்திர | வஸ்திர |
| 22 | 31 | யஸ்த்திரங்களைச் | வஸ்திரங்களைச் |
| 23 | 28 | அந்தப்பாவை | அந்தப்பாவை |
| 24 | 14 | மூலமந்திர | மூலமிரந்த |
| 24 | 16 | சாஸ்த்திர | சாஸ்திர |
| 24 | 20 | தேவர்கள் தேவர்கள் | தேவர்கள் |
| 27 | 26 | க்தத்தில் | க்கத்தில் |
| 28 | 4 | டழ | பழ |
| 28 | 26 | பதிணெண் | பதினெண் |
| 30 | 1 | பொய்மையத்தள்ளி மெய்மையைத்தழுவு | "பொய்மையைத் தள்ளி மெய்மையைத் தழுவு" |
| 30 | 2 | சிறை | சிறை |
| 31 | 19 | மாவுறிதரித்து | மரவுரிதரித்து |
| 31 | 27 | அரபி | * அரபி |
| 31 | 32 | அரக்கர் | * அரக்கர் |
| 34 | 22 | மற்றயிடங்களிலும் | மற்றயிடங்களிலும் |
| 35 | 16 | சிக்குறந்தோனென்ற | சிக்குறந்தோனென்ற |
| 40 | 27 | அவனூரி | அவனூற |
| 40 | 28 | புரமத | புறமத |
| 40 | 29 | அவனூரு | அவனூற |



| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 42 | 25 | எங்னிருதயத்தைச் | எங்களிருதயத்தைச் |
| 44 | 4 | இந்தபரபரம | இந்தபரம |
| 45 | 6 | செல்லியிருக்கிறார் | சொல்லியிருக்கிறார் |
| 47 | 28 | ஒத்தேறுமுறு | ஒத்தேறுமுரு |
| 47 | 29 | எத்தேவராயினுமோர் | எத்தேவராயினுமோர் |
| 47 | 29 | மத்தேரி | மத்தேறி |
| 47 | 31 | யிதமுறைறத்தபோதையர்க்கும் | யிதமுளைத்தபேதையர்க்கும் |
| 49 | 8 | அந்தகாமான | அந்தரங்கமான |
| 49 | 21 | இளைப்பாருதல் | இளைப்பாறுதல் |
| 49 | 24 | பற்றிய்தைக்கவனிங்கள் | பற்றியதைக்கவனியுங்கள் |
| 49 | 27 | பொருக்காததினால் | பொறுக்காததினால் |
| 50 | 9 | பாருவார்கள் | பாறுவார்கள் |
| 51 | 11 | இளைப்பாருதல் | இளைப்பாறுதல் |
| 57 | 13 | ஆவியோடு | ஆவியோடே |
| 58 | 28 | வார் என்பதை | ...ர்கள் என்பதை |
| 59 | 3 | ஆசரியன் | ஆசாரியன் |
| 60 | 1 | வழைக்கிறக்கி | வழைக்கிறக்கி |
| 61 | 11 | எதிரேயிருக்கிற | எதிரேயிருக்கிற |
| 61 | 26 | எறியாத | எறியாத |
| 61 | 29 | ஒருக்தாலும் | ஒருக்காலும் |
| 62 | 14 | வாகனத்துடன் | வாகனத்துடன் |
| 62 | 16 | என்மதை | என்பதை |
| 62 | 29 | அதென்னதெனில் | அதென்னவெனில் |
| 62 | 29 | ஊரிவிருக்கிற | ஊரிவிருக்கிற |
| 63 | 10 | ரட்சகருக்கு வாகனமாகிறது | ரட்சகருக்கு அது வாகனமாகிறது. |
| 63 | 29 | நிறைவேலும்படி | நிறைவேறும்படி |
| 63 | 29 | என்று | (அடிப்பு) |
| 63 | 30 | 2, 4, 5, | 21: 4, 5. |
| 64 | 4 | தெரிந்துகொளவதால | தெரிந்துகொள்வதால் |
| 64 | 11 | மனது என்பது | மனமானது |
| 64 | 15 | இதற்குப்திலாக | இதற்குப்பதிலாக |
| 64 | 20 | குடிகொர்ண்ட | குடிகொண்ட |
| 64 | 21 | தேகமயானந்தமே | தேசோமயானந்தமே |
| 65 | 5 | கிறிஸ்தவர்களிடத்திலும் | கிறிஸ்தவர்களிடத்திலும் |
| 67 | 4 | நமது | (அடிப்பு) |
| 67 | 27 | கல்வழி | மூதுரை |
| 68 | 22 | மேலும் துன்பத்துக்கானாகி | மேலும்மேலும் துன்பத்துக்கானாகி |
| 71 | 4 | வேதவனிருப்பது | தேவனிருப்பது |
| 71 | 17 | யாவருன் | யாவரும் |
| 73 | 3 | ரிப | பரி |
| 73 | 10 | சரீரம் என்பது சரீரம் | சரீர |

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 73 | 13 | என்றை | என்றென்றை |
| 73 | 22 | மூப்பதாம. ண்டளிவில் | மூப்பதாமாண்டளவில் |
| 73 | 23 | மூன்றெருத்தொருபொருளை | மூன்றுத்தொருபொருளை |
| 73 | 27 | செப்புங்கிலையளவேயாகுமாம் | செப்புங்கலையளவேயாகுமாம் |
| 75 | 6 | கார்குலஞ்செல்லாதநல் | கார்குலஞ்செல்லாததால் |
| 75 | 11 | கணபதியானவன் | கணபதியானவர் |
| 75 | 13 | னென்றும் | ரென்றும் |
| 75 | 14 | ணீராப் | ணீராய் |
| 75 | 31 | வெபதி | (அடிப்பு) |
| 76 | 16 | சிரசுகளைமற் | சிரசுகாளைமற் |
| 77 | ௭ | சொல்லியிருக்கிராது | சொல்லியிருக்கிறது |
| 77 | 20 | கன்னிருகை | பன்னிருகை |
| 79 | 14 | திரிமதங்களுக்கதிபதி | திருமலங்களுக்கதிபதி |
| 79 | 21 | சொல்லப்பாட்டதால் | சொல்லப்பட்டதால் |
| 79 | 29 | காமதகன்மெற | காமதகனமென்ற |
| 79 | 82 | பொய்பாப்விட்டதால் | பொய்யாய்விட்டதால் |
| 80 | 13 | வியாசனல் | வியாசமுனியினல் |
| 80 | 13 | பாவுட்டாக்குள் | பாவுட்டாவுக்குள் |
| 80 | 28 | குவார | குமார |
| 80 | 28 | வேறல்லை | வேறில்லை |
| 80 | 31 | ஆனது | ஆனதுபற்றி கிறிஸ்நாதர் திருவசனம்பற்றியிருக்கிறதாவது வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் என்றார். ஆகையால் வாசிக்கிறவர்கள் வியாசமுனிவர் செய்தபுராணங்களை நம்பி பிரிக்கப்பட்ட ஞாபகசின்னங்களைத்தரித்து ஒருவர்க்கொருவர் வாக்குவாதங்களைப் பேசி சமாதானமில்லாமல்ஜீவித்துக்கொண்டே அவரால் பிரிக்கப்பட்டதைத்தரித்துஅவருக்கும் அவர்மரபில் தோன்றியசந்ததி |
| 83 | 25 | வீண்பெருமையொழிக்க | வீண்பெருமையை ஒழிக்க |
| 84 | 14 | 10 | 16 |
| 87 | 8 | காட்டுகின்ருர்கள் | காட்டுகின்றார்கள் |
| 87 | 26 | கிறிஸ்தேசுவாமி | கிறிஸ்தேசு சுவாமி |

# முகவுரை.

பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் ரோமா புரியாரைப்பற்றிச் சொல்லுகிற பின்வரும் சத்தியம் இந்து தேசத்தவருக்கும் பொருந்தும். "தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தி யிருக்கிறார். அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலு மிருந்து......அழிவில்லாத தேவனுடைய மகிமையை மனுஷர்கள் பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்"

மெய்த் தேவ வணக்கத்தைப்பற்றி பூர்வீக ராஜாக்கள் பக்தர்கள் மூலமாய் வெளிப்படுத்தல் பெற்று, தங்கள் ஆளுகைக்குட்பட்ட ராஜ்யங்களில் விளம்பரம் பண்ணியிருக்கிறார்கள். பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் விளம்பரமும் (தானி. 4:1-37) மேதிய ராஜாவாகிய 'தரியுவின் விளம்பரமும் (தானி. 6:25-27) இந்து தேசத்துக்கும் வந்தெட்டியது என்று நம்ப இடமுண்டு. உலக ரக்ஷகரும் மெய்யான ஒளியுமாகிய இயேசு கிறிஸ்து பெலஸ்தீனு தேசத்தில் திரு அவதாரஞ் செய்த காலத்தில் இந்து தேசத்தவரும் அவரைப் பார்க்கவும் அவரின் உபதேசங் கேட்கவும் போயிருந்தார்களென்பதற்கும், ரக்ஷகரின் சீஷர்களிலருவர் இத்தேசத்துக்கு ரக்ஷணிய சுப விசேஷத்தைக் கொண்டு வந்தார்களென்பதற்கும் பாரம்பரைச் சரித்திரங்களுண்டு.

இந்நூலின் நோக்கம் இந்து மார்க்கம் கிறிஸ்து மார்க்கத்தின் திரிபு என்று காட்டவும், கிறிஸ்து மார்க்கத்தின் மேலான சத்தியங்களில் சில, இந்து மார்க்க நூல்களில் சிதறியும், சில புதைந்தும் கிடக்கின்றன வென்று காட்டவுமே. வேத வியாசன், தான் வேத சத்தியத்தை அறிந்திருந்தும், அவைகளை மாறாய் போதித்து அதற் கிசைவாக நூல்களை யுண்டுபண்ணி இப்பரத கண்டத்தை மோசம் போக்கின விதமும் இதில் தெளிவாய்க் கண்டிருக்கிறது. அவனைப்போல பலர் செய்த மித்திரபேதம் இதில் நிவிர்த்தி செய்கிறபடியால், இந்நூல் 'மித்திர பேத நிவாரணி' எனும் பேர் பூண்டது.

இந்நூலாசிரியர் தேவ கிருபையைப் பெற்று தனக்களிக்கப்பட்ட தேவ ஞானத்தின்படி வேத வாக்கியங்களை வியாக்கியானப்படுத்தி, தனக்கிருக்கும் இந்து மார்க்க நூல்களின் ஆராய்ச்சியுடன் சம்மந்தப்படுத்திப் பேசியிருக்கிறார். இந்நூலை வாசிப்பவர்கள், மார்க்க விஷயமாய் சம்பாஷிக்க விரும்பினாலும், இன்னும் மேலான விஷயங்களை அறிய விரும்பினாலும் அப்படிப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ள இந்நூலாசிரியர் ஆயத்தமா யிருக்கிறார்.

இவர் அறிந்து விசுவாசித்து வழிபடும் அருமை ரக்ஷகரை, இதை வாசிக்கும் மற்றவர்களும் அறிந்து அவருக்கு அடியாராக அவர் தாமே அருள் புரிவாராக.

சாத்தூர்
11—11—1924.

S. பால் மாணிக்கம்,
C. M. S. பாஸ்ற்றர்.

## சாற்றுக் கவிகள்.

---

நல்லூர் மதுர கவி முத்துகிருஷ்ண ராமதாஸ தமிழ்ப் பண்டிதர்
அவர்கள் மாணாக்கரும்
மகா வித்துவான் சங்கரநாராயண ஆசாரியார் குமாரருமாகிய
கவி. வீர. நல்லானியற்றியது.

---

பொய்ப்போதப் பெரும்பாட்டைக் கதைபுனைந்த
பிணக்கர்கள் வாய்பூட்டுப் போலும்
மெய்ப்போதப் பொருள்தெரிய மனமிருளை
நீத்த சுடர்விடுதல் போலும்
ஒப்போதற்கரிய மித்ரபேத நிவாரணியென்னும்
உயர் வேதத்தை
எப்போதும் படித்தவர்க் கடைத்திறச்
சரியே மொழியற்றினனே.

---

ஹெட் மாஸ்டர் பிரம்மஸ்ரீ, ம. கவி. வீர. நல்லான் அவர்கள் குமாரர்
பாலகவி சின்னசாமி ஆசாரி அவர்களியற்றியது.

---

ஆரிய வில்லவேதத்திற் றமைந்த
சாவேமொன்றும்
பாரினில முன்னூல் கண்ணூர் பற்பல
வழுக்கேட
நீரிய மித்ரபேத நிவாரணியென்னச் செப்பும்
சீரிய கண்டனத்தால் நிலைபட நிகழ்த்தினனே.

---

கந்தியானை பென்னும் நல்லூர் மகா வித்வான்
பிரம்மஸ்ரீ மதுரகவி முத்துகிருஷ்ண தமிழ்ப்பண்டிதர் அவர்கள்
குமாரர் எதிராஜாசாரியார் அவர்கள் இயற்றியது.

---

மித்திரபேத நிவாரணியென்னு பெருநூலின இனிய
சத்திய ரூபத்தையிலா ருள்ளங்களினும் புறவியற்றினுள்
வித்தகிராட்டு வில்லபிராமமேற் ருவபோதகனுமிச்
சத்திய வேதத்தினைப்புனர் சாத்தர்
அவோம சம சாலவே.

---

## "மித்ரபேத நிவாரணி"

---

இந்நூலின் முக்கியநோக்கம் தென்னிந்திய தேசத்து பற்பல மதஸ்தர்கள் யாவரும் இதை அன்போடு வாசித்து மெய் மார்க்கம் எதுவென்று கண்டறிந்து இதிலடங்கிய படிப்பினையை ஏற்றுக்கொள்ள அவர்கள் கண் முன் வைப்பதே.

இதன் ஆசிரியர் வெகு காலமாக இந்து மார்க்கத்திலிருந்து பல நூல்களை ஆராய்ச்சி செய்து கடைசியில் சத்திய மார்க்கமே ஜீவ வேத மார்க்கமென்று தெளிந்து அதன் அடியாராகி அதைத்தன் ஸ்வஜனங்களுக்கும் மற்ற மார்க்கத்தார்களுக்கும் உணர்த்தும்படி இடைவிடாது தன் தொழிலையும் பொருட்படுத்தாது மிகுந்த வைராக்கியமோடு ஜாக்கிரதையோடும் ஆராய்ச்சி செய்து இவ்வருமை நூலை வெளியிட்டிருக்கிறார். இது தெளிவான நடையும் ருசிகரமான பழமொழிகளும் இனிமையான ஆழ்ந்த கருத்துள்ள சில கவிகளையும் கொண்டிருக்கிறது.

இந்நூலை நான் வெகு கருத்தோடு முழுமையும் படித்திருக்கிறேன். இதை வாசிக்க விரும்பும் எவரும் மெய்மனச் சாட்சியோடு இதிலுள்ளவைகளைத் தேடி கண்டு பிடிக்கும்போது இயேசுவே தேவகுமாரனென்றும் அவரது மார்க்கமே மெய் மார்க்கமென்றும் அறிந்து அவரை விசுவாசியாமற் போகார் என்பது நிச்சயம்.

மெய் வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

போர்டு பெண் பாடசாலை
சாத்தூர், 7-11-1924.

V. சிகாமணி,
தலைமை உபாத்தியாயர்.

# நூன்முகவுரை.

1. இவ்வுலகின்கண் வசிக்கக்கூடிய மனிதர்கள் தேசவேற்றுமையால் நிறபேதம், பாஷைபேதமாயிருப்பினும் கடவுளைப்பற்றிய பக்தி பொதுவான காரியம். சில தேசாச்சாரங்களின் பிரகாரம் மார்க்கம் என்பது தேவனைப்பற்றிய மெய்ச்சமாதானம். இந்தச் சமாதானத்தைக் கற்றறிந்த முன்னோர்கள் மெய்யாய்உலகத்தோற்ற முதல் கடவுளுடைய அனுக்கிரகத்தால் எழுதினார்கள். சென்ற காலமான [illegible]யில் இதற்கு விரோதமாய் அதிலுள்ள விஷயங்களை மாற்றி[illegible] ஜனங்களை எத்தி எவ்வளவேனும் ஒருமையில்லாமல் சுவர்க்க, நாலுவகை வருணாச்சிரமங்களை வகுத்து அதில் முதல் வருணாச்சிரமத்தாரை மற்ற மூவருக்கும் கடவுள் என்றும். அதைநம்பத்தக்க புராணங்களிலும், சித்தாந்தங்களிலும், அத்வேதங்களிலும், இதிகாசங்களிலும் தங்களை உயர்த்தி, மற்ற வகுப்பினர் அறியாமல் அவர்களுடைய மாயவலையிற் சிக்கி, விக்கிரகங்களை வணங்கி நாளுக்குநாள் பக்திபற்றவர்களாய் வாக்குவாதம் பேசி, சித்த சுவாதீனமும் இல்லாமற்போனார்கள்.

2. உதாரணமாக, நல்ல தித்திப்புள்ள மாமரத்தில் அதிக புளிப்புள்ள மாமரத்தின் கிளைகளை ஒட்டினால் அதன் புளிப்பானது மாறி நல்லகனியைத் தருகின்றது. அதைப்போல் புளிப்புள்ள மரத்தில் தித்திப்புள்ள கனியைக் கொடுக்கின்றது. இதைப்போலவே மனிதரின் குணங்களும் வேற்றுமையடைகிறது. இதை விளக்குவதற்கு எழுந்த பழமொழி "இயற்கை வாசனை செயற்கை வாசனை" என்பதுவே.

3. கல்விமான்களில் சிலர், தங்களுக்கு வேண்டிய உலகப் பொருளை நாக்கிரமத்தோடு தேடிக்கொண்டு [illegible]மே சொர்க்கம் மற்றவைகள் நரகம். இது சகடக்கால் போல மாறி மாறி வருவதுபற்றிப் பொருளைத் தேடவைத்துக்கொள்ள வேண்டுமென்று பேசியபடியே முடிந்தது. ஆனதுபற்றி உண்மை எதுவோ அதை யறிய முயற்சி செய்வதே கற்றோர் கடமை. மார்க்க ஆராய்ச்சி செய்வோர்கள் சைவசமயத்தையும் விஷ்ணுசமயத்தையும் பற்றி ஒன்றுமில்லையென்று வெறுமைப் பேச்சுக்கிடமில்லை [illegible] அதன் உண்-



மையை அறியவில்லை. அதை அறிந்தால் கிறிஸ்து மார்க்கத்தைக் காட்டும். அப்படியிருக்க உண்மை மதம் எம்மதமானாலும் சம்மதமென்னும் கிறிஸ்து மார்க்க ஆராய்ச்சி செய்தால் ஆத்ம ஈடேற்றமடையலாம்.

4. இம்மார்க்கம் மனதில் வேரூன்றினால் மற்ற மார்க்கத்திலுள்ள பொய், கபடபாவனை, சடங்காசார பிடிவாதங்கள் தங்களை விட்டு நீங்கிவிடும். ஆகையால் சத்தியவேதம் என்பது பிரமாணங்களுள்ள வேதம் என்னப்படும். இதிலுள்ள வாக்கியங்களைத் திருடி தசாவதாரங்களென்றும், சிவசமயங்களுக்குத் தக்கனவாகவும் வேறுபடுத்தியதை விவரிக்கப் புராணங்கள் சிலதை இப்புஸ்தகத்தில் தெரியப்படுத்தினேன். இன்னமும் மேலான கல்விமான்கள், ஞானிகள், ரிஷிகள் செய்த நூல்களிலுள்ள பிரபந்தங்கள், நாட்டுப் பழமொழிகள் இவைகளிலுள்ள சிறந்த பொருளை அறிந்த பெரியோர்களால் தெரிந்து தக்க பயனுள்ள தற்கால செய்கைகள், உலகத்தோற்றம் வஞ்சனையால் நிறைந்த பக்தி சூனியங்கள் செய்த மித்திர பேதங்கள் இவைகளைத் தெரிந்தும் இப்புஸ்தகத்தைக் கண்ணுற்று அங்கீகரித்து வாசிப்பீர்களென்று நம்புகிறேன்.

5. இப்பிரபஞ்சத்தில் மூவாசையால் உழலுகின்ற யான் சிற்றறிவால் அறிந்ததை, தேவானுகூலமென்று நம்பி அதைஎல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் என் சுயவர்க்கங்களானவர்களுடைய பிடிவாதங்களும் நீங்கிக் குணமடையும்பொருட்டும், கௌரவைப் விக்கிரகங்களைப் பூஜித்த அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானமடையவும் அக்கினிபோன்பமாய்ப் பழகிய இஷ்டர்களும் பிரயோஜனமடையவும் நோக்கமாய் எழுதினேன் இந் நூலை வாசிக்கும் கற்றோர்களாகிய பெரியோர் முதல் சிறியோர் வரை என்னைக் கேப்பமுத்த எண்ணங்கொள்ளாமல், இந்நூலின் ஆதாரம், சுவை, நன்று, நன்றல்லவென்பதைத் தாங்களே மனச் சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நிச்சயிக்கப் பரமேஸ்வரனுடைய கிருபையை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.
நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாதர் திருவுளம்பற்றியதைக் கவனிக்கவும் உலகத்துக்கு நீங்கள் உப்பாயிருங்கள் என்று உபதேசித்தார் உப்பை அன்னாதிகளில் கொஞ்சம் சேர்த்தால் அவை சுவையாகிற தல்லவா? அதைப்போலக் கொஞ்சங் கற்றாலும் சுவையுள்ளவர்களாவதே நலம். உலகத்துக்கு நீங்கள் வெளிச்சமாயிருங்கள் என்றும் உபதேசித்தார். வெளிச்சமானது இருளை நீக்குவதுபோல கற்றவரை அஞ்ஞானவிருள் விட்டகல வேண்டியதவசியமே.

6. ஆகையால் மானிடராய்ப் பிறப்பதரிது. பிறந்தகாலையில் கூன், குருடு, சப்பாணி, பேடு நீங்கிப் பிறப்பதரிது. அப்படிப் பிறந்தாலும் ஞானமும் கல்வியும் நயத்தலரிது. நயந்தகாலையிலும், தானமும், தவமும் தான் செயலரிது. தானமும் தவமும் தான் செய்வாராகில் வானவர் நாடு வழி திறந்திடுமே என்ன முன்னோர்கள் *கூறியிருக்கின்றார்கள். இதன்பிரகாரம் முன்மாதிரியாக நம் ஏசுபகவான் செய்துகாட்டியிருக்கிறார். ஆகையால் தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் மனுஷாவதாரமாக உலகத்தில் பிறந்தார் என்பதை நிச்சயப்படுத்துவதே வேதம் அது சத்திய மென்னப்படும்.

7. சத்தியமே சொரூபியாகிய கடவுளின் கிருபையை முன்னிட்டு மெய்ச் சமாதானத்தை அறிவது அசாத்திய மெனவும் புத்திக்கு எட்டாததுமான காரியமெனவும் எல்லா மதங்களும் மோட்சத்துக் கேற்ற பக்தியெனவும் சொல்லி எல்லாவற்றையும் அனுஷ்டித்து உலக ஆடம்பரத்துக்கேற்ற கற்பனைகளையும் காமவிகாரங்களையும் சேர்த்து கசல்நிலத்திலிருக்கக்கூடிய குளங்களிலுள்ள ஜலம் தெளியாமல் மண்டியாயிருப்பதுபோல மேற்கூறிய பக்தியானது விளங்குகிறது ஆகாயத்திலுள்ள ஜலம் தெளிவுள்ள துளிகளாக இருந்தாலும் மண்ணுடன் புழுதியும் சேர்ந்து மண்டியாகிறபடியால் அதைத் தெளிவுசெய்யாமல் புசித்



தால் ரோகத்தையுண்டாக்குகிற தல்லவா; ஆகையால் அதைத் தெளிவாக்கக்கூடிய தேற்றான் விதையால் தெளியச் செய்வதால் மண்சேறு ஜலம் வேறாகப் பிரிந்து நல்ல ஜலமாக இருப்பதுபோல் மார்க்க ஆராய்ச்சியானது பற்றி பலமதங்களிலுள்ள சடங்காசார மண்டியாலும் ஒருவர்க்கொருவர் வாக்குவாதத்தாலும் உண்டான பக்தி சூன்யம் என்னும் நோவைப் *பிரிக்கச் செய்வதே கிறிஸ்து மார்க்கம் தேற்றான் விதையானது வேறாக இருந்தாலும் நல்ல ஜலத்துடன் கலந்த மண்டியைக் கீழே நிறுத்தி மேலே நல்ல ஜலத்தைத் தருவதுபோல் கிறிஸ்து மார்க்கமும் நல்ல பக்தியைத் தந்து, பக்தி சூன்யநோயை அகற்றி குணப்படுத்துகின்றது. எல்லாம் ஒன்றுதானென்பது *வைராக்கியம் அதை அகற்றி அங்கீகரிப்பது விவேகம் என்னப்படும். ரக்ஷகர் கூறியிருப்பது ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டானென்று உபதேசித்தார். படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தன்னை வணங்க என்ற பிரகாரம் தேவ ஊழியத்துக்கு முக்கியமாக முயற்சிசெய்வது மனுஷர் கடமை. சிசுவாகப் பிறக்கும்போது யாதொரு அடையாள மின்றிப் பிறந்தான் அப்போது பெற்ற மாதாவுங்கூடத் தெரிவதில்லை. தேவனோடு விளையாடுகிறதென்று யாருஞ் சொல்வதுண்டு. அக்காலம் பாவமில்லாத ஜீவியம் பிற்பாடு பாவாத்துமாவாகி அடையாளங்கள் தரித்து ஒருவரைக்கண்டு வாவரப் பொல்லாங்குக்கு ஆளாகிப் போவதால், அதற்காக தேவனானவர் நல்மாதிரிகாட்ட மனுஷாவதாரமாக உலகத்திலே தோன்றினாரென்பது வேதம் இதைஅறிவது பாவ பட்சாதாபம், மெய்யுணர்ச்சி, மெஞ்ஞானம் என்பது.

உதாரணமாக, பஞ்சலோகங்க ளென்பவைகளில் சுவர்ணம் மேலானதென்பது நாம் அறிந்த விஷயம் அதனுடன் தாம்பிரம் வெள்ளி அல்லது மற்ற லோகங்கள் ஒன்றாகக்கூட இருந்தாலும் எப்படிச் சேர்வது? சேராது ஆனால் அதை அக்கினியில் தஹித்தால் ஒன்று சேர்ந்து மேலான சுவர்ணத்தைக் கெடுத்துவிடும், அதைப்போல மற்றசார்க்கங்களிலுள்ள பக்தி பலவகையானதால் ஒன்றான சுவர்ணம்போன்ற தேவ பக்தியைக்கெடுக்கின்றது. பல

வகைலோகமென்றாலும் அதில் சுவர்ணமுண்டு. இருந்தாலும் பல்வகை சேர்ந்தமையால் மூடபக்தி என்னப்படும், அது தேவமகிமைக்குக் குறைவு. ஆனதுபற்றிக் கெட்டுப்போனதைத் திரும்பவும் சுத்தமாக்க விசுவஞ்ஞரால் கூடும். உப்பும் காய்ந்த மண்ணும் சேர்த்து அக்கினியால் புடமிட்டால் பலவகையான லோகங்களெல்லாம் புகைந்து நல்ல சுவர்ணத்தைக்காணலாம் இதைப்போலவே கிறிஸ்துமார்க்கம் பக்தியானது பலவகை பக்தியைப் போக்கி நல்ல பக்தியையும் சமாதானத்தையும் கொடுக்கிறது, ஆனதால் அக்கினியால் சுத்தமாகவுங் கூடும். பக்தியும் விசுவாசமும் அப்படியே.

உலகத்தோற்றமெல்லாம் சிலுவையின் அடையாளமாகத் தோன்றுவதால், அதிலும்சில ஜீவஜெந்துக்கள் சிலுவையின் அடையாளமில்லாததால் சபிக்கப்பட்டவைகள். அவையாவன:- சர்ப்பம் காகப்பூச்சி, அட்டை, கிருமி, இன்னும் சிலபுழுக்கள் இவைகளுக்கு கால் செவி இருப்பதில்லை. ஆகையால் அவைகள் மறைந்து மண்ணுக்குள் கிடக்கும். அப்படிப் பட்டவைகளெல்லாம் சபிக்கப்பட்டவைகளென்பது.

மனுஷன் தன்னைப் பாவியென்றுணர்வது எவ்வாறு? அதைப் பற்றி விசாரிக்கும்போது விரதஞ் செலுத்தினேன், தானதர்மங்கள் கொடுத்தேன், கிணறு குளம் நந்தவனங்கள், தோப்பு இவைகளை உண்டுபண்ணினேன். இன்னமும் பல தருமங்களைச் செய்திருப்பதால் நான் பாவியல்லவென்று சொல்லி அநேகர் தங்களை ஒப்புக் கொள்வதில்லை ஆனாலோ, பூமியிலே சகலமனுஷருக்கும் சபிக்கப் பட்டகிருமி வயிற்றிலிருப்பதால் எல்லாரும் பாவியென்றே தங்களை ஒப்புக்கொள்ளவேண்டியதே தங்கள் கடமை,

ஆகையால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சுவாமிக்குக் கிருமி இல்லை, ஆனதால் அவரைத் தேவகுமாரன் என்பதற்கு சந்தேகமில்லை. ஏனென்றால் நமது தேகத்தில் கொஞ்சம் காயம்பட்டால் சீழ் உண்டாகி வேதனை அதிகரித்து ஔஷதத்தினால் குணமாகும்

விசுவஞ்ஞர்—பொன்னர். விசுவாசிகள் எனவும் பொருள்.



அதாவது நமது தேக முழுவதும் கிருமியினால் நிறைந்திருக்கிறதென்றாகிறது. ஆகையால் நாம் பாவியாயிருக்கிறோம். இரக்ஷகரிடத்தில் பாவமில்லாததால் கிருமியாகிய புழு இல்லை. இல்லாததினால் பாவமும் புழுவும் தம்மிடத்தில் இல்லையென்று ரூபிக்கும் பொருட்டு சிலுவையில் அறையுண்டார். காயப்பட்டார், காயத்துடன் உயிர்த்தெழுந்து சீழ்இரத்தமில்லாமல் சீஷர்களுக்கும்மற்றவர்களுக்கும் தம்மைக்காட்டி, தம் காயத்திலுண்டான துவாரத்தில் கைபோடச் சொன்னார். ஆகையால் நன்மையையே செய்யத்தக்க நீதிமான் உலகத்தில் ஒருவருமில்லை யென்பதாய் தேவன் கூறியிருக்கிறார். தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்த மனுஷாவதாரமாகப் பிறந்தாரென்பது, இயேசு பகவானேயல்லாது வேறொருவருமில்லை. மற்ற மதங்களில் சொல்லியதைக் கவனித்தால் தேவ அவதாரத்துக்கு ஒரு காரணம் சரியாயிருப்பினும், பின்னும் ஒரு காரணத்தால் சரிதப்பாகவே யாவதால் அந்த அவதாரங்கள் நிச்சயமில்லாதது.

இயேசுகிறிஸ்து நாதருடைய கிருபையை முன்னிட்டு உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. எனக்கு தேவன் வெளிப்படுத்தியதும், அனுபவத்திற்கு ஒத்ததும் வேதவாக்கியங்களில் உள்ளதையும் எழுதியிருக்கிறேன், என் வசனங்களில் குற்றங்கள் காணப்படுமாயின் அவற்றை அகற்றி குணமானவைகளை அநுசரித்தல் பெரியோர் கடன்.

இக்காலத்தில் கல்வி தேர்ச்சியால் கௌரவம், நாகரீகம், ஒற்றுமை, வேற்றுமையில்லாத சகோதரத்துவம் விருத்தியாகி வருவதால் உற்சாகமாய் இந்நூலின் கருத்தை நன்றாய் ஆராய்ந்து பிரதிவாதி, வாதியின் வழக்கை நகல் எடுத்துக்கொண்டு அதைப்பார்த்து ஜெயிக்கும் அல்லது ஜெயிக்காது என்பதைத் தெரிந்துகொள்வதுபோல இந்நூலுக்கு ஆதாரமாகிய சத்தியவேத புத்தகத்தை ஆதியோடந்தம் வரை கற்று மதவிஷயங்களைக் குறித்து அதிகமாய்த் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு அவர்களு

டைய அடியார்க் கடியாராயிருந்து அவர்களைச் சந்தித்து அவர்க ளோடுசம்பாஷிக்கஆசையாயிருக்கிறேன்.குறள்.43.3.அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு

இந்நூலை கருத்தோடு படித்து தன் அபிப்பிராயத்தை வெளி யிட்ட இவ்வூர் C. M. S. பாஸ்டர் கனம் ரெவ S. பால்மாணிக்கம் அய்யரவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியறிதலைக் கூறுகிறேன்.

இந்நூலை அச்சிடுவதற்கு அசல் பிரதியைப் நகல் படுத்திய இவ்வூர் தாலுகா போர்டு பெண்பாடசாலை தலைமை உபாத்தியாயர் கனம் வே. சிகாமணி அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் பாராட்டுகிறேன்.

இப்படிக்கு,

கோல்டுவெல்பித் சாத்தூர். 13–11–24.

கர்த்தருக்குள் விசுவாசியான,
ம. கோ. சி. சாலமோன் ஆசாரியார்.

---

# மித்திர பேத நிவாரணி.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புது பெலனடைவார்கள்.
ஏசா 40: 31.

தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந் தார் என்பதற்கு ஆதியாகமம் முதலாம் அதிகாரம் இரண்டாம் வாக்கியம். இதன் பொருள் அடியில் வருமாது:—இந்து சமய வாதிகளில் தலைமையான வியாச முனியினுடைய கருத்து "வேதத் தைத் திக்கறுத்தேன்" என்று கட்டுக் கதைகளாகச் செய்திருப்ப தால் கடவுளை நாராயணன் என்று சொல்லியிருக்கிறதால் நாரா யணன் என்பதற்கு ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருப்பவ ரென்பது பொருள்.



தேவன் அண்டாதி அண்டங்களையும் அவைகளின் சராசரங் கள் எல்லாவற்றையும் படைத்து, பின்பு புல், பூண்டு, செடி, கொடி, விருக்ஷங்கள் யாவற்றையும் சிருஷ்டித்து, அப்புறம் ஜலத் தில் நீந்தும் ஜீவ ஜெந்துக்களையும் படைத்தார். ஆதி 1:20, 21. வியாசமுனி இந்த வாக்கியத்துக்கு இணங்க நாராயணன் என்ற கடவுள் மச்சாவதாரம் எடுத்தாரென்று மச்ச புராணத்தில் கூறி பூமியிலே சில மனிதர்களைத் தனக்குச் சகோதரர்களாகச் சேர்த் துக்கொண்டார்.

பின்பு தேவன் சகல காட்டு மிருகங்களையும் ஊரும் பிராணி களையும் காட்டு மிருகங்களையும் படைத்தார். ஆதி 1:24, 25 வியாசமுனி நாராயணன் வராக அவதாரம் எடுத்தாரென்று, வராக புராணம் செய்து, மீதியான சிலரைத் தன் வசப்படுத்தி வேஷம் பூண்டு வர் வராகப் போய் ஆ.ப.ா. ஏமாற்றி, தாங்கள் இந்த விஷயங்களுக்குக் குருக்கள் என் ற தங்களை சொல்லிக் கொண் டது இந்த வாக்யத்தின் கருத்தாகும். ஜலத்தில் வாழும் அவ தாரங்கள் இரண்டு. காட்டுமிருகங்கள் அவதாரங்களும் இரண்டு. ஆக நான்கு அவதாரங்களுக்குப் பின்பு மனிதனை வாமன அவதார மென்று சொல்லுகிறது. புராண கற்பிதம்.

பின்பு தேவன் தமது சாயலாகவும் ரூபத்தின்படியேயும் மனுஷனைப் படைத்தார். ஆதி 1: 26, 27. இந்த வாக்கியத்தைக் கொண்டு வாமன, பலராம, பரசுராம, இராம, பௌத்த, கிருஷ்ண அவதாரங்களைக் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த விதமான ஒவ்வொன்றுக்கும் கதைகள், புராணங்கள், இதிகாசங்கள், மான்மியங்கள் உண்டுபண்ணி இவைகளினாலே சில

---

கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதவர்களும் வியாச முனிக்கு ஆதி யாகம விஷயம் தெரியாது என்பதாக எண்ணங் கொள்ளுகிறார்கள். அதை விளக்குவதற்கு தெய்வப் புலமை திருவள்ளுவர் செய்த குறளில் முதலா வது திருவள்ளுவர் சரித்திரம் என்னும் சேர்க்கை நூலில் உலகம் ஜலப் பிரளயத்தால் அழிவுண்டதையும் மேற்கூறிய முனி தன்னையும் தனக்கு முனிவர்களையும் வேதங்களுக் குரியவர்கள் என்பதாக சொல்லப்பட் டிருக்கிறது.)

ளைத் தன் வசப்படுத்தி வேஷங்கள் பூண்டு, கிராமங்கள் தோறும் போய் ஆடிப்பாடி யாசித்து மற்றவர்களை ஏமாற்றி தன்னைப் பார்க்க வந்தவர்களுக்கு நினைப்பூட்டு தனுக்கான பிரதிகள் எழுதிக் கொடுத்து மாய்கையால் தெய்விகத் தன்மையை மறந்துபோகும்படி செய்ததாகும்.

ஆதியாகமம் 3-ம் அதிகாரம் முதலாவது வாக்கியத்தில் சர்ப்பம் மகா தந்திர முள்ளது என்று சொல்லியிருக்கிறது. இதைக் கொண்டு வியாசமுனி இச்சர்ப்பம் மனிதருக்குத் தெரியாத காரியத்தைத் தெரிவித்தது என்று சிலருக்கு உபதேசம் செய்து, நீங்கள் நாகங்கள் உண்டுபண்ணி அரச மரத்தின்கீழ் வைத்து சேவித்து வாருங்கள் என்று தந்திரம் செய்து தேவனை மறந்து தன்னைப் பின்பற்றும்படியாக விக்கிரக வணக்கத்தை உண்டாக்கினார். இந்தக் காரணத்தினால் தான் இந்துக்கள் தங்களுக்கு ஒரு கோவில் கட்டினால் நாகசாமியும் செய்து அதில் வைப்பார்கள். இதற்கு சர்ப்ப சயன மென்றும் இது விசேஷமாக மாய்கை நிறைந்த பூமியைச் சுமக்கிற தென்றும் அதைத் தரிசித்தால் அது மோட்ச, வழி காட்டும் என்ற கற்பிதம்.

இன்னுமோர் விஷயம். ஆதியாகமம் இரண்டாம் அதிகாரம் ஏழாவது வாக்கியம், தேவனாகிய கர்த்தர் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். இந்த வாக்கியத்தின் கருத்து. வேத வியாசமுனி இந்த வாக்கியம் தனக்குத் தெரிந்தும் சிவன் என்றும் பரமன் என்றும் பெயர் வகித்து அவைகளைக் காட்டும் சிவ புராணங்களையும் உண்டு பண்ணியிருக்கிறார்.* சிவன் என்பதைச் சிவன் என்று சொன்னார். பரம பிதாவானவர் சுவாசத்தை ஊதினதினால் பரமன் என்றான். ஆதி 2: 16, 17 ம் வாக்கியங்கள் கர்த்தர் மனுஷனைக் குறித்து கட்டளை கொடுத்திருந்த காலத்தில்

வடசிவ்ஷி வார்த்தை திருமலைக்கொழுந்து கவிராயர் தமிழில் மொழிபெயர்த்த உதயண கதா பீட விலம்பகம் முதற்றாக்கத்தில் நாரும்பனை என்னும் பதம் சிவா புடைவிடமாகக் கொண்டவன்-என்று சொல்லப்பட்டது.



மனுஷன் பாவமில்லாதிருந்தான். அப்போது மனுஷன் தனிமையாயிருந்தான். தேவனைத் தவிர வேறு துணையில்லை. அவர் வெளியின் மிருகங்களையும் சகலவித ஆகாயத்துப் பறவைகளையும் காட்டு மிருகங்களையும் மண்ணினால் உருவாக்கி மனுஷனிடத்தில் கொண்டு வந்து இதற்கு நீ பெயரிடு என்றார். பெயரிட்டதினாலே அவனை ஆதாம் என்று அழைத்தார்.

ஆதி 2: 18, 21-ம் வாக்கியம் வரை. கருத்து. வியாசமுனி ஆதாம் என்பதற்கு ஈஸ்பரன் என்று பெயர் வகித்தார். மனுஷனுக்குத் துணையில்லை யென்று முன் சொல்லியபடியே மனுஷனுக்கு அயர்ந்த நித்திரையை உண்டு பண்ணி மனுஷனின் விலா எலும்பொன்றை எடுத்து பெண்ணாக உருவாக்கி அவனிடத்தில் கொண்டு வந்தார். அவன் அவளுக்கு மனுஷி என்று பேரிட்டான்.

ஆதி 2: 23. வியாசமுனி இந்த வாக்கியத்தின் பொருளாக தேவனால் பெயரிடக் கட்டளை பெற்ற ஆதாம் ஏவாள் என்பவர்களை ஈஸ்வரன் ஈஸ்பரி, பரமேஸ்பரன் பரமேஸ்பரி என்று தழுவியது.

இவர்களுக்கு சர்ப்பம்செய்த வஞ்சனை நல்லதென்று எண்ணி அதைத்தலையிலேயும் கழுத்திலேயும் சுமந்திருந்தார்கள். அதைப் பற்றி ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டார்களென்று சில புராணங்கள் முறையிடுகின்றன. வேதவியாசமுனி இவ்விதமாக வேஷம்பூண்டு கிராமங்கள்தோறும் சுற்றித்திரிந்து தேவன் இவ்விதமாய்த்தான் இருக்கிறாரென்று அநேகரை ஏமாற்றி களிமண்ணால் இவ்வித விக்கிரகம்செய்து காண்பித்து அதைவணங்கும்படியாகவும் வேடம்பூண்ட தன்னை வணங்கும்படியாகவும் நியமித்துக்கொண்ட

ஈஸ்பரன் என்னும் பதம்—பரமேசுரன் என்பது,
பரமேசுரன்—பரமேஸ்பரி என்பது தன்னுடைய சித்தாந்தம்.
ஈஸ்பரன்—இயேசுபரன் என்பது பொருள் தேவகுமாரன் எனவும்.
சொல்லப்படும் பழைய ஆதாம் என்பது வேறு.

உதயண கதா பீட விலம்பகம் பெருங்கதையில் இரண்டாம் தாக்கத்தில் சிவன்-என்பது-ஆண்-பெண்-என்று சொல்லப்பட்டிருக்கிறது.

படியால் புதிதாய்த்தெரிவித்த மார்க்கங்களுக்கு தான் குருவாக வும் ஏற்பட்டதால் இதை நம்பி இன்னும் அநேகர் பரமபிதாவை அறியாதிருக்கிறார்கள். தானும் அந்த சர்ப்பத்தைப்போல ஜனங் களை ஏமாற்றி தன்னைச்சேர்ந்த சகோதரர்களையும் தன்னையும்வணங் கும்படியாகவும் காணிக்கைகள் கொடுக்கும்படியாகவும் அநேகரை வஞ்சித்து இன்றைபத்தினம்வரைக்கும் நடத்திவருகின்றது. தான் இதை ஏற்படுத்தினதினாலேதான் தன்னைபிரபமாவென்றும் தன் மரபில்தோன்றியவர்கள் பிரம்மஜாதி என்றும் வகுத்து தனக்குக் கீழ்ப்பட்டு தன்உபதேசம் பெற்றவர்களை சூத்திரன் என்றும். இதைவிளக்க பின்வரும் ஸ்லோகம் சொல்லியிருக்கிறது:—

ஸ்லோகம். ஜகத்சர்வம் தெய்வாதீனம்
தெய்வம் மந்திராதீனம் தன்மந்த்ரோ
பிராமணோதீனம் பிராம்மணோமோதேவதா.

என்று தன்னைப்பிரம்மம் என்றும் பிரம்மத்திற்கு பாரிபாள் சால்வதி என்றும் பேர்வகித்து தான்தன் இனத்தவர்களுக்கு மூல மந்திரம் வேறு இருக்கிறது என்றும் அதை வெளியிடக்கூடாதென் றும் அதை இந்த சூத்திரர்கள் கேட்கப்படாதென்றும் அது வேதம் என்றும் வேதத்தை எழுதக்கூடாதென்றும இப்படியாக ஆதிவேத மாகிய சத்தியவேதத்தை தானேவைத்துக்கொண்டு பாவனையுங் கெடுத்து ஆதிபரமபிதாவாகிய தேவனைவணங்காமல் ஒழித்துவிட்ட தால், இதில் இன்னும் ஓர்கருத்து நாராயணர் மகாவிஷ்ணு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்தான் அவதாரப்புருஷன் என்றும் அவர்பாவசங்கார கர்த்தா என்றும் சொல்லியிருக்கிறது. அந்த விஷ்ணுதான் தெய்வமென்று சில இடங்களில் சபைசேர்த்துவணங் கும்படியாகச்செய்து அதேகோட்பாடாகவும் ஏற்படுத்தினார் சில இடங்களில் இதற்குப்பதிலாக சிவனைத்தவிர வேறுவேறு தேவ னில்லை. இவர் சிருஷ்டிகர்த்தா இந்த உலகம் இவருடைய அம்சம் சகலசொரூபங்களுக்கும் காரணர் இவர் இல்லாதவிஷயத்தில் ஜீவன் இல்லையென்றும் இதேகோட்பாடாக ஏற்படுத்தி இருக்கிறது. சிவசமய

உதயண தாபீட பெருங்கதையில் வாருணி சரித்திரத்தில் கூத்தைப்பற்றி யும் அபிநயத்தைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.



மென்றும் திருவிளையாடல் என்றும் ஏற்கனவே இவருக்கு அநேக குமாரர்களிருக்கிறார்களென்றும் அவர்களில் சிறந்தவர்கள் கணபதி என்றும், குமரன் என்றும்கூறி சிலகுமாரருக்கு மாடன், இருளன் வயிரவன் வீரபுத்திரன், ஐயனார் இப்படிப்புத்திரர் இருக்கிறார்க ளென்றும் இவர்கள் எல்லாம் தெய்வங்களென்றும் சொல்லிவந்தார். சிலசூத்திரர்கள் தன் இஷ்டப்படி மதுபானம், பலி இவைகளைப் படைத்து வணங்கலாமென்று உபதேசம்செய்து அவர்களிடத்தி லும் காணிக்கைகள்வாங்கி அவைகள் குருக்கள் காணிக்கைஎன்றும் இந்தப்படி அவரவர்கள் மனதின் விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய ஆதிசர்ப்பத்தின் இருநாக்குகளையும் உடையவனுயிருந்தான்.

இன்னுமோர்கருத்து ஆதி 3.34 கர்த்தர் சர்ப்பத்தோடேபேசி யிருக்கிறார் அதினாலே இதைக்கொண்டு என்பதை இதைப்பற்றி வியாசமுனி எல்லாவிஷயத்துக்கும் சர்ப்பத்தை விசேஷமாகச் சொல்லியிருக்கிறது இதெப்படியென்றால் மகாவிஷ்ணுவுக்கு சர்ப்ப சயனமென்றும் ஆதிசேடனென்றும் ஆதாம் ஏவாள் இவர்களை நன்மையினால் வஞ்சித்த விஷயத்தைப்பற்றி தேவனால் மண்ணைத் தின்பாய் என்றும் சிவனுக்கு ஆபரணமென்றும் சாஸ்திரிகள் மந் திரவாதிகள் முதலானவர்களாலே பிணிதீர்க்க நாகர் சாந்தி விசேஷ மென்றும் அதிலும் தன் இனத்தார் செய்வது அதிக விசேஷமென் றும் கட்டுவாக்கியங்கள் செய்தபடியால் அந்த சர்ப்பமானது வாயில் விஷம் உடையதாயிருப்பதுபோல வியாச முனியைச்சேர்ந்த இனத் தவர்களுக்கு எவ்வளவு காணிக்கை கொடுத்தாலும் மற்ற வகுப் பினரை சூத்திரர்களென்று சொல்வார்களே தவிர தனக்குச்சமம் என்றாவது தன்னுடன் சேர்ந்து புசிக்கலாமென்றாவது சொல்லவே மாட்டார்கள். ஏனெனில் சர்ப்பமானது தந்திரமுள்ளது.

ஏதேன் தோட்டத்திலிருக்கும்போது மனிதர்களுக்கு தேவன் அமர்கள் இன்ன விதமாய்ப் பலுகிப் பெருகுவீர்களென்று கட்டளை கொடுக்கவில்லை. மனிதர்களுக்கு இலேசாகவும் கர்ப்ப வேதனை இல்லாமலும் கடவுள் கட்டளை நியமிப்பது நோக்கம். அதற்கு முன்னமே சர்ப்பமானது இவர்களை வஞ்சித்தது. அதினால் மரத்

தின் கனியைப் புசித்தார்கள். அழகில்லாதவனும் நீண்ட உருவமாக இருப்பவனுமாக ஆக்கப்பட்ட சர்ப்பமானது தன்னைப்போல் அதர்மத்தினால் அவர்களையும் கெடுத்துவிட வேண்டுமென்று இப்படிச்செய்தது. தேவன் ஸ்திரீயை நோக்கி, நீ சர்பத்தின் வார்த்தையைக் கேட்டபடியால் உன் கர்ப்பத்தின் வேதனையைப் பெருகப் பண்ணுவேன் என்றார். ஆதி 3: 16. சர்ப்பமானது ஆதி மனுஷனையும் மனுஷியையும் வஞ்சித்ததுபோல வியாச முனியும் மனிதர்களை வஞ்சித்து சாத்தான் எனப்பெயர் பெற்றுக்கொண்டான். அவர்கள் மரத்தின் கனியைப் புசித்ததுபோல உலகத்தின் ஜனங்களும் விக்கிரஹ ஆராதனையைப் பின்பற்றி மோசம்போனார்கள். ஆகையால் ஜனங்களுக்கு சத்திய மார்க்கத்தின் பிரகாரம் தெய்வத்தை வழிபட்டு தேவ கற்பனையைக் கைக்கொண்டு நீதியோடும் நியாயத்தோடும் உபதேசிக்கிற உபதேசம் மனிதர்களுக்கு வேம்பினும் கொடிய கசப்பாகத் தோன்றும். ஏனெனில் அந்த மரத்தின் கனியைப் புசிக்க எவ்வளவு இன்பமாக இருந்ததோ அப்படியே விக்கிரஹ ஆராதனையும் இருக்கிறது.

பிரியமானவர்களே மனிதராய்ப் பிறந்தவர்கள் கற்றுணர்ந்து நல்வினை தீவினை என்று தெரிந்த பெரிய சாஸ்திரிகளும் சாத்தானுக்கடிமையாகி விக்கிரஹ வணக்கத்தை ஏற்படுத்தி இது முன்னோர்களுடைய முறை. இதை விடமாட்டோமென்று சாதித்து நடத்தி வருகின்றார்கள். அப்படியிராமல் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் "நன்மை கடைப்பிடி" என்ற வாக்கியத்தின் பிரகாரம் நடந்து கொள்ள முயலுவது அத்தியந்த அவசியமே.

பிரியமானவர்களே விக்கிரஹ ஆராதனை நிலைத்ததற்குத் திருஷ்டாந்தம் ஏதுவெனில் தற்காலத்தில் டிராமா என்ற நாடகம் ஏற்படுத்தினதால் அது விளங்குகிறது. அதில் ஆக்ட் செய்பவன் ஏதாவது சிற்றின்ப விஷயமாக ஒரு கவியைச் சொல்வானாகில் காலையெழுந்திருந்து அநேகர் அதே மாதிரியாக எந்நேரமும் சொல்லிக்கொண்டிருப்பார்கள், அதைக் கேட்ட சிறுவர்களும் அதே பாட்டாகப் படிப்பார்கள். அதைக்கேட்ட பெரிய பெண்களும் சிறிய பெண்



களும் சொல்ல அந்த ஊர், அடுத்த ஊர் எல்லா ஊராரும் அதை வியந்து பேசுவார்கள். இப்படியே பேசி கிராமங்களில் சில வாலிபர்கள் தாங்களும் அதேமாதிரியாக ஆக்ட் செய்து பாடி கெட்டிக்காரராகவேண்டுமென்ற கருத்துடன் அதற்கு வேண்டிய சாமான்கள் சேகரித்து முடித்து சந்தோஷப்படுகிறார்கள். அப்படியே பூமியெங்கும் நடந்து பரவி வருகிறதுபோலு விக்கிரஹ ஆராதனையும் இதே தன்மையாய் உண்டானதென்று தெரியவருகிறது. நாடகத்தைப் பின்பற்றினவர்களிடத்திலிருந்து உண்டான துர்க்குணங்கள் யாவையெனில், விபசாரம், குடி, சாதுக்களை இகழ்தல், பரிகாசம் முதலான அறிவுதான் உண்டாகிறதே ஒழிய வேறில்லை. இத்தன்மையாய் விக்ரஹ ஆராதனையிலிருந்துஉண்டான துர்க்குணம்என்னவெனில் பட்டணம், கிராமம் முதலிய இடங்களில் ஒரு ஆலயத்தைக்கட்டி அதில் நியமிக்கப்பட்ட விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்து உடனே குருக்களைச்சேர்ந்த ஒருவனை பூசாரியாக நியமித்து கொள்வதுண்டு. அவன் மூலமாய்ப் பஞ்சாட்சரம் தீர்த்தம் வாங்கிக்கொள்வது வழக்கம். இவைகளை முதலில் அடையப்பெற்றவர்கள் உயர்ந்த ஜாதி என்பதாக ஒருவர்க்கொருவர் அடிபிடி சண்டைகள் செய்து பழி பாவங்களுக்கு ஆளாகின்றனர். சில ஜாதியார்களை ஆலயத்துக்குள் நுழையக்கூடாதென்று துரத்துவதும் உண்டு சில ஜாதிகள் இரண்டாங்கட்டு வரைக்கும் போகலாமென்று சொல்லித் தடுத்து அடித்து அவர்களை அவமானத்திற்கு உள்ளாக்குகின்றனர். இதைச் செய்து முடித்த சிற்பியுங்கூட அந்தவேலை முடிந்தபிற்பாடு போனால் நீ ஜாதியில் உயர்ந்தவனல்ல மூலஸ்தானத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதென்று தடுத்துவிடுவது இயற்கையாம் இப்படிச்செய்வதால் அநேகர் உள்ளேபோக எண்ணி அடிபிடி சண்டைகளாகி பழிகொலைகளுண்டாகி துர்க்குணங்களை மேலும் மேலும் பெருக்கி வர்மம் சாதித்துவந்தார்களே ஒழிய இதனால் யாதொரு பலனையும் அடையவில்லை. இதுதான் விக்ரக ஆராதனையினுண்டான பலன். விக்ரக ஆராதனைமனதில் சமாதானத்தைக் கொடுப்பதில்லை. தனக்கு அருவருப்பை உண்டாக்கும். ஏனென்றால், மனுஷர்கள் வேலையே அல்லாது தெய்வத்தாலுண்டானதல்ல. ஔவைசொன்ன வாக்குரைப்படி ஆலயந்தொழுவது சாலவுநன்று

விக்ரகம் வைக்காமல் சகலரும் ஆலயத்துக்குப்போய் முழுமனத்தோடும் முழு இருதயத்தோடும் கடவுளைநினைத்து தியானம்செய்து

சமர்தானத்தோடு ஜீவிக்கவேண்டியது அவசியம். இப்பேர்ப்பட்ட நல்விஷயங்கள் சில பாமரர்களுக்குத்தெரியாவிட்டாலும் பண்டிதர்களுக்குத்தெரியும். யாவரும் துர்க்குணமுள்ளோராய் இராமல் நற்குணமுள்ளோராயிருக்கவேண்டும்.

இன்னும் ஓர் காரியம் புராணங்கள் இதிகாசங்கள் வேதங்கள், இவைகளின் கருத்து என்னவென்றால் வியாசமுனி நான்குயுகங்களிலும் இருந்ததாகவும், தான் நாராயணனாகவும், காசிபராகவும், வியாஸராகவும் தோன்றி ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு அற்புதம்செய்து பூமியை நிலைநிறுத்தினதாக புராணங் கற்பிக்கிறது. இராமாயணத்தின் முக்கியகருத்து என்னவென்றால் அயோத்தியில் அரசாண்ட தசரதகுமாரனாகிய ராமர் அரசாட்சிசெய்த காலத்தில் நடந்தவிஷயங்கள் திரிலோகங்களை அரசபுரிந்த இலங்காதிபதியாகிய இராவணன் திரிகண்டத்தை ஆண்டுவந்தான். அப்படி ஆளுகிறகாலத்தில் மனுநீதி வழுவாமல் மனிதர்மேல் பற்றுதலையுடையவனாகவும் வேதசாஸ்திரங்களைநன்றாய்க்கற்றுத்தெளிந்தவனும் விக்ரக ஆராதனை செய்யாதவனும் தேவன் ஒருவரே சர்வவல்லவரென்று நிச்சயமாய்த்தெரிந்தவனும் சங்கீதவாத்தியங்களில் சிறந்தவனும் ஞானத்திலும் அறிவிலும் விசேஷித்தவனும் சகலபொருளுமுடையவனாகவுமிருந்தான். அப்போது அவன் ஆளுகைக்குட்பட்டவர்களில் சிறந்தகீர்த்தியுடையவர் ஸ்ரீராமர் இவர் குருகுலமன்னர் இவர் இராவணனுக்குத் திறைசெலுத்திவருவது வழக்கம் இராமருக்குத் திறைசெலுத்தும் சிற்றரசரும் உண்டு இவர்கள் கொடுக்கும் திறையெல்லாம் வர்க்கமொத்தமாய் இராவணனுக்குச் செலுத்துவார் இவ்விதம் நடந்துவரும் காலத்தில் காட்டுக்கிராமங்களில் ஒருவிதபெரிய ஞானிகள்போல் வேடந்தரித்து பாசித்துவந்த வசிஷ்டமுனியைச்சேர்ந்த சிலர் முன்சொல்லிய விக்ரகவணக்கத்தை

வியாசரைச்சேர்ந்தவர்கள் என்பது—பரிச்சேயர் என்னப்படும்.



பின்பற்றும்படியாய்ப் போதனை செய்தார்கள் பின்பு காரியம் சித்தியாகவேண்டுமென்றெண்ணி சில சிற்றரசரிடம் சென்று நாங்கள் ஒருகாரியம் சித்தியாகவேண்டுமென்றெண்ணி சில சிற்றரசரிடம் சென்று நாங்கள் ஒருகாரியம் நியமிக்கவேண்டியதிருக்கிறது. நீங்கள் அதற்கு உதவிசெய்யவேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் அவையாவையென இவர்கள் பிரதியுத்தரமாக உங்கள் முன்னோர்கள் மரித்துப்போன அவர்கள்மாதிரி விக்ரகம்செய்து ஆலயங்கட்டி பிரதிஷ்டைசெய்து நாங்கள் பூஜைசெய்துகொண்டுவருகிறோம். உங்கள் ஆளுகைக்குட்பட்ட ஜனங்கள் எங்களை வணங்கும்படியாக உத்தரவுசெய்யவேண்டுமென்று கேட்டார்கள். அப்படியே அவர்கள் உத்தரவிட்டார்கள் உத்தரவிட்டதுமன்றி சம்மதித்து கையொப்பங்கொடுத்துவிட்டார்கள். இந்தக் கையொப்பத்தைக்கொண்டு ராமரிடம் சென்றார்கள் அவரும் கையொப்பம்பண்ணினார் இக்கூட்டத்திற்குத் தலைமையானவசிஷ்டன் ராமருக்கு ஒருகையொப்பஞ் செய்தான். அதாவது தாங்கள் சிறந்த மகிமையுடையவரானபடியால் தாங்கள் மரித்தபின்பு தங்களையும் அப்படியேசெய்து வணங்குகிறோம் என்பதுதான் அது அவருக்கு நலமாகத்தோன்றிற்று அப்படியேசெய்யுங்களென்று வாக்களித்து தன்தேசத்தார் இவர்களை வணங்கும்படி உத்தரவுசெய்தார். இந்த உத்தரவை பெற்றுக்கொண்டு இராவணனையும் இதேமாதிரியாக ஏமாற்றி கையொப்பம் வாங்கிக்கொண்டால் சகலலோகத்தாரும் தங்களையும் தங்கள் இனத்தில் தோன்றிவருகிற பின் சந்ததிகளையும் தலைமுறை தலைமுறையாக இந்த விஷயத்தில் நிலைநிறுத்திக்கொள்ளலாமென்றெண்ணி இராவணனிடத்திற்குப்போனார்கள். அங்கேபோய் ராஜாவாகிய ராவணனைக்காண்பதற்கு வெகுநாட்கள் காத்திருந்து சமயம்பார்த்து தங்களுடைய திருப்பங்களையும் ராமருடைய கையொப்பத்தையும் கொடுத்தார்கள் அவன் அதை வாங்கிப்பார்க்கும்படியாக தன்னுடைய வேலைக்காரனுக்கு கட்டளையிட்டான். அவன் அதைவாசித்தபோது இராவணன் இவர்கள் எண்ணத்தையும் யாவரும் தங்களை வணங்கவேண்டுமென்று இவர்கள்கொண்ட ஆசையையுந் தெரிந்துகொண்டு இது ஒருஏமாற்றம் என்று நிச்சயித்து இதற்கு தண்டனையாகச் சிறையில்வைத்தான். குறிக்கப்பட்டகாலம்வரைக்குஞ்சிறை

ச்சாலவாசம் கழித்து மீண்டும் தங்கள் இருப்பிடம்வந்துசேர்ந்தார்கள் இந்தச்செய்தியைச் சிற்றரசர்களிடம் சொல்லக்கூடாதென்று மறைத்து இனிகொஞ்சகாலம் பொறுத்து உத்தரவுவரும் என்று வீண்போக்குகள்சொல்லி அதை உறுதிப்படுத்திக்கொண்டார்கள்

இப்படியிருக்கிறகாலத்தில் இராவணனுடைய சகோதரர்கள் வேறுகண்டங்களிலிருந்துவந்த இரண்டு ராஜாக்களைச்சேர்த்துக்கொண்டு கட்டுப்பாடுபண்ணி இராவணனுக்கு விரோதமாய் எழும்பி யுத்தம்பண்ணி அவனையும் அவன் குமாரரையும்கொன்று அவன்ஸ்தானத்தில் அவனுடைய சகோதரனை இராஜாவாக்கித் தங்களுக்கு கீழ்ப்படுத்திக்கொண்டார்கள். இதுதான் நடந்தவிஷயம் கருத்து:—

இப்படியுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது இந்த விப்பிரர் ஏகமாய்க்கூடி சிற்றரசர்களிடம்போய் அவர்களை அழைத்துக்கொண்டு இராமரிடத்திற்சென்று ஒரு ஆலோசனை சொன்னார்கள் நம்முடைய திரவியம் என்று சொல்லப்பட்ட லட்சுமியை நம்மிடத்திலிருந்து கொள்ளையடித்துக் கொண்டுபோகிறான் இந்தராவணனைக் கொள்ளைக்காரனென்று எண்ணவேண்டுமேதவிர வேறில்லை இப்போது யுத்தகாலமானதால் யுத்தம் எப்படியாகிறதோ தெரியவில்லை நாம் செலுத்தவேண்டிய திரவியத்தை சுயமாகவைத்து சுய அரசாட்சி செய்வோமென்று தடுத்து நிறுத்திவிட்டார்கள். ஏனெனில் முன் அடைந்த கஷ்டத்தை நினைத்து வெளியிடாமல் இப்படிச்செய்தார்கள் சிலகாலம் சென்றபிறகு சீக்கிரமாக இராமாயணம் என்ற கட்டுவாக்கியங்களை சொந்தத்தில் உண்டுபண்ணினார்கள். இராவண

1. இராமாயணத்தில் தங்களை சிறையில் வைத்திருக்க தேவர்களை சிறையில் வைத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

உதயண கதாபீட பெருங்கதையில் நந்தராஜன் சரித்திரத்தில் விப்பிரர்கள் பொருளாசையுடையவர்களென்பதைத் தெரியலாம்—மேல்படி கதையில் (தக்க ராஜன் சரித்திரத்தில்) நம்பிகள் சோர்குண்டனிகளென்பதை அறியலாம்.



னுடைய செய்தியை நன்றாய் அறிந்தபின் மூலபலம் என்ற யுத்தத்தில் நன்றாய்த்தெளிவாகின்றது. சீதை இலங்கையில் பிறந்தாளென்றும் அரசனுடைய பூஜைபொக்கிஷத்தில் உற்பத்தியானதால் சீதையினாலே இலங்கை அழியுமென்று தெரிந்த அரசன் சீதையை ஒரு பேழையில்வைத்து சமுத்திரத்தில்போட்டு விட்டானென்றும் ஜனகர், ஜனுந்தனர், அபுவனசர், பிரித்யூநசர், சுபர்நசர் என்ற அரசர்கள் சீதையை அன்போடு தங்களுக்குக் குமாரத்தியாகப்பாவித்து வளர்த்தார்கள் என்றும் பின்பு ராமருக்கு விவாகம்செய்து கொடுத்தார்களென்றும் சொல்லியிருக்கிறது. இது நிற்க இராமருடைய உற்பத்தி என்னவெனில் இவர் மகாவிஷ்ணுவென்றும் சீதை மகாலக்ஷ்மியென்றும் இவர்களாலே பூமிபாரம் தீர்க்கும் அவதார புருஷர் என்றும் இராவணன் ஓர் இராட்சதன் என்றும் அவர்கள் செய்திருந்த சொந்த சுலோகங்களை எடுத்துப்பார்க்கும்போது மர்மம் தெரியவருகிறது. இதன் கருத்தின் தெளிவு என்னவெனில்.

சீதை என்ற மகாலட்சுமி என்பது தங்கம், வெள்ளி முதலிய நாணய ஐசுவரியப்பொருள். இவைகளை ராவணனுடைய பொக்கிஷத்திலிருந்து எடுத்துப் பேழை என்ற மாக்கலத்தில் தங்கப்பாளங்களாகவும் வெள்ளிப்பாளங்களாகவும் கணக்குப்படி பாரம்ஏற்றி முத்திரையிட்டு சமுத்திரமார்க்கமாக நாணயம் உண்டாக்குகின்ற மிதுலாபுரி பட்டணத்தில் முன்சொல்லிய ஐந்து அதிகாரிகள் வசம் அனுப்பி நாணயங்களாக முத்திரையிட்டு சரிபார்த்து இராமரிடம் அனுப்பும்படியாக இராவணனாகிய சக்கிரவர்த்திஉத்தரவுசெய்வான் உத்தரவுப்பிரகாரம் அவைகள் இராமரிடம் வந்துசேரும். அவைகளைப் பலவகைப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தன்சொந்த உபயோகத்திற்கும் தினசரிகட்டளைகளுக்கும் தனக்குக் கப்பங்கட்டுகிற சிற்றரசர்களுக்கும் அவரவர்களுக்குக் கிரமப்படி ஏற்பட்டிருக்கும் நாணயங்களைக்கொடுத்துமீதியானதைத் தன் பொக்கிஷத்தில் சேர்த்துவைப்பான் பின்பு சக்கரவர்த்தி தனக்குவற்றகாலத்தில் இராமனுக்கு நிருபங்கொண்டுபோகக்கூடிய சாரணர்கள் என்ற தூதர்களை அனுப்பி ஏற்பட்டிருக்கும் லட்சுமி என்ற திரவியத்தை வாங்கிக்கொண்டு இலங்கைக்குப்போகும் மாக்கலங்க

ளின் மூலமாகச்சென்று சக்கிரவர்த்தியிடம் ஒப்புக்கொடுப்பார்கள் இப்படி அநேக சிற்றரசரும் குருநிலமன்னரும் அனுப்பிக்கொண்டேயிருப்பார்கள் இராஜ்யம் இவ்வாறு நடந்துகொண்டேவரும் காலத்தில் யுத்தம் உண்டானது யுத்தம் நடக்கிற வருஷங்களிலும் யுத்தத்திற்குவேண்டிய திரவியத்தை முன்சொல்லிய திரவியத்தோடு அதிகமாய்ச்சேர்த்து அதிகாரிவசமாய் அனுப்பும்படி உத்தரவுகொடுத்து தூதர்களை அனுப்ப செய்தி ராமரிடம் வந்தது ராமனும் முன்னே தன் பொக்கிஷத்தில் வைத்திருந்த திரவியமென்ற லட்சுமியையும் தனக்குத்தகுந்தபடியாய்க் கொடுத்ததுமன்றி சக்கிரவர்த்திக்கு நலம்புரியும்படியாக வசந்தன் என்ற ஒருசேனையையும் அனுப்பினான்.

இதுதான் சீதையை சிறைஎடுத்துக்கொண்டு போனவிஷயம். (ஆரண்யகாண்டமுடிவு) சுந்தரகாண்டம்.

பிற்பாடு அநுமானைத் தூது அனுப்ப சீதையைக்கண்டுதிரும்பி இலங்கையைத் தீக்கொளுத்திய விபரம் என்னவென்றால்முன்சொல்லிய விப்பிரர்கள் ஏகமாய்க்கூட்டங்கூடி ராமரிடம்மனஉற்சாகமாய்ச் சொல்லிய விஷயமாவது இராவணன் நம்மிடத்திலுள்ள பலவகைச் செல்வமாகிய மகாலட்சுமியை எவ்விடத்தில் அதிகமாய்க்கொண்டு போகிறான் என்றால் நம்முடைய தேசத்தின் விளைச்சலாகிய பஞ்சைக்கொண்டுபோய் நூலாக்கி ஆடைகள்நெய்து ஒன்றுக்கு இருபத்தைந்தாக வாங்கிக்கொள்ளுகிறான் இது பெரியமோசம் நம்முடைய தேசத்திலேயே அந்தவேலையை முடித்து அளவில்லாத திரவியம் சேர்க்கலாம் அதுவுமன்றி அவன் அன்னியதேசத்தான் அவனுடைய ஆடைகளைச் சுட்டு எரித்துவிடவேண்டுமென்று மித்ரபேதம் செய்து சகலகுடிகளுக்கும் சிற்றரசர்களுக்கும் உபதேசம் செய்து உபாயம் செய்தார்கள். அதைக்கேட்டு அநேகர் தங்கள் வஸ்திரங்கள் எல்லாவற்றையும் தீயிற்போட்டு எரித்துவிட்டார்கள் அக்காலத்திலிருந்து இக்காலம்வரைக்கும் இரண்டு மூன்று ஜாதியார் வஸ்திர ஹீனராய் ராமா ராமா என்று இன்னமும் திரிகிறார்கள். இவ்வாறு நடந்திருக்க விபரீதமாக அநுமான் வாலில் இலங்கையிலுள்ள ஸ்திரீ புருஷர்களின் வஸ்திரங்களைச்சுற்றச்சுற்றவால்



நீண்டதாகவும் எல்லாம்சுற்றி முடிந்தபிறகும் வாலில்சற்று இடமிருந்ததாகவும் இனிவேறு வஸ்திரமில்லை சீதைவஸ்திரந்தான் பாக்கி என்று சொல்ல வால்சுருங்கிக்கொண்டதாகவும் சொல்லியிருக்கிறது இதுபுராணக்கருத்து.

உட்கருத்து என்னவென்னில் இராவணன் தங்களை சகலதேசத்தாரும் வணங்க உத்தரவு கொடுக்கவில்லை என்ற ஆத்திரத்தை மனதில் நினைத்து இப்படியெல்லாம் கலகத்தை ஏற்படுத்தினார்கள் இக்காலத்திலும் அதேமாதிரியாக ஜனங்களைக்கெடுத்து ராஜதுரோகிகளாக்கி அன்னியதேசத்து ஆடைகளைச் சுட்டுவிடவேண்டுமென்றும் அநேகர் ஊர்வலமாய்ச்சென்று உபந்நியாசம் புரிந்தும் அப்படி நடத்தியும் வருகின்றார்கள் இவையெல்லாம் விப்பிரர்முன்னேசெய்த மூலகிரந்த சுலோகங்களை இப்போதுள்ள விப்பிரர்கள் கண்டுபிடித்ததினால் இப்படித்தான் நடத்தவேண்டுமென்று அபேட்சையினால் நடத்துகிறார்கள் இவர்கள் பொருளாசைபிடித்தவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இதுதான் இலங்கையை எரித்தவிஷயம்.

தற்காலத்தில் இவர்களுடைய கருத்தை யோசிக்கும்போது சக்கிரவர்த்தியால் உத்தியோகம்பெற்று நாலாவகையிலும் திரவியம் சம்பாதித்து தானும் தன்பெண்டுபிள்ளைகளும் நன்றாய் உண்டு சுகித்து நஞ்செய் புன்செய், வீடுகள், மாடிகள், உயர்ந்ததினுசு பட்டாடைகள் தங்கநகைகள் விலையுயர்ந்த நவரத்தினங்கள் அபரிமிதமாய்ச் சேர்த்துக்கொண்டதால் சக்கிரவர்த்தியை நிந்தித்து அவர்களுக்கு யுத்தம் ஏற்படசமயம் இதுதானென்றும் சுய ஆட்சிபெறவேண்டுமென்றும் அவரை அந்நியரென்றும் அவர்கள் தேசத்து ஆடைகளை எரித்துவிடவேண்டுமென்றும் தேசத்துப்பிரஜைகளைக் கெடுத்து கலகத்தையுண்டாக்கி மற்றவர்கள் மெல்லியவஸ்திரந்தரித்திருப்பதைக்கண்ட பொறாமையும் தன்னைப்போல் மற்ற ஜாதியாரும் ராஜபாஷையைப் படிக்கிறார்கள் என்ற கருத்தும் இவர்களுக்கிருப்பதால் அந்தப்பாஷை அன்னியபாஷை என்றும் அதைப்படிக்கவும் படிப்பிக்கவுங் கூடாதென்றும் பிரசங்கம்செய்து மற்றவர்களுக்கு மனது வெறுப்புண்டாக்கவும் முயர்ச்சித்து அதற்குத்தலைமையாக காந்தி என்ற ஒருமனிதனையும் ஏற்படுத்தி இவைகளை

நடத்திக்கொண்டும் வருகிறார்கள் இதைநம்பி முன்செய்தவர்கள் போல எரித்துவிட்டால் முன்னெரித்துவிட்ட சிலர்வம்ச பரம்பரையாய் ராமா ராமா என்பதுபோல இப்போது எரிக்கிறவர்கள் சாந்தி சாந்தி என்று கதறி காலங்கழிக்கவேண்டியதே தவிர மற்றொரு நன்மையையும் காணமாட்டார்களென்பது நிச்சயம். இவர்கள் இப்படிநடத்துகிறகாரணம் யாதெனில் தங்களுக்கு சுய ஆட்சியும் எல்லாரும் தங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டுமென்ற கருத்தும் தாங்கள் தரிக்கும் ஆடையை மற்றவர்கள் தரிக்கக்கூடாதென்ற பொறாமை இந்த விஷயத்தை சக்கிரவர்த்தி ஏற்படுத்தவில்லையென்ற ஆத்திரமும் இவர்களுக்கிருப்பதால் இப்படி நடத்திக்கொண்டு கலகமேசெய்துவருகிறார்கள். இவர்களை ராஜதுரோகிகளே என்று சொல்லவேண்டுமே யொழிய வேறில்லை. எக்காலத்திலும் இது தானே இவர்கள் வழக்கம். இந்த விஷயத்தை இன்னுமொருவிதமாய்ச் சொல்லிய மூலமந்திர சுலோகத்தின் கருத்து என்னவெனில் திரிபுரதகனம் என்று சொல்லப்பட்டது திரிபுரத்தை அரசாண்ட சக்கிரவர்த்திகள் சாஸ்திரவல்லவரும்யுத்தத்தில் சிறந்தவர்களுமாயிருந்தபடியால் தங்கள் பட்டணங்களைப் பெயர்த்து ஆகாசமார்க்கமாய்ப்பறந்துபோய்த் தங்கள் பகைஞர் பட்டணங்கள்மேல் வைத்து அழித்துவிடுவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களை ஜெயிக்க ஒருவராலும் கூடாதென்றும் தேவர்கள் தேவர்கள் என்று சொல்லப்பட்ட விப்பிரர்களுக்கு மிகுந்த கஷ்டங்களைப்பொறுக்கமாட்டாமல் திரிமூர்த்திகளிடம் முறையிட்டார்களென்றும் அப்படி முறையிட்டதால் சிவன், நாராயணன், பிரமா முதலானவர்கள் திரிபுராதிகளிடம் யுத்தம் செய்யச்சென்றார்கள் அப்படிச்செல்லும்போது இவர்களுக்கு பூமியே ரதமாகவும் வேதமே நான்கு புரவிகளாகவும் சந்திரசூரியரே இரண்டு சகடங்களாகவும் பிரமாவே சாரதியாகவும் மகாமேருவே வில்லாகவும் வாசுகியே நாணாகவும் நாராயணனே அஸ்திரமாகவும் உபயோகித்து யுத்தம்செய்தும் முடியாமல் கோபாக்கினியால் சிவன் சிரித்தான் என்றும் திரிபுராதிகள் எரிந்து சாம்பலாயினர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் சக்கிரவர்த்திகள் தனக்கிஷ்டமானபடிசெய்து பூசையை நிறைவேற்றவில்லை என்ற கருத்துடன் இவர்களே தங்கள் ஆடைகளைத் தீக்கொ



ளுத்தி எரித்துவிட்டதை இந்நாளிலும் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இப்பவும் 1921-ம் வருஷம் 9-ம் மாதம் 30-ம் தேதியில் நடத்தின யாகத்தின் மூலமாய்வந்த நோட்டீஸில் தாங்களே தங்கள் முன்னோர்கள் நடத்தினமாதிரி காட்டுகிறோம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் இவர்களைப் பரம்பரையாய்த் தீக்கொளுத்திகளென்றே சொல்லவேண்டும் கோபாக்கினியால் சிவன் சிரித்தான் என்று சொல்வதின் பொருள்யாதெனில் விப்பிராகிய இவர்கள் தன்னினத்தாரல்லாதவர்களை தங்கள் வாய்ச்சாதுரியத்தால் வசப்படுத்தி இலேசாக அவர்கள் ஆடைகளை வாங்கி தங்கள் வஸ்திரங்களை பத்திரப்படுத்திநாங்களும்எங்கள்வஸ்திரங்களை இதோபோடுகிறோமென்று இதற்கென்று சேர்த்துவைத்திருந்தபழைய வஸ்திரங்களை எல்லாம் சேர்த்து எரித்து தங்களிடம் தோன்றிய கிளேசினால் மற்ற சூத்திரர்களை ஏமாற்றப் புதுவஸ்திரங்களைத் தீயிலெரித்துவிட்டோம் என்ற எண்ணத்தினால் புன்னகையுண்டாகச் சிரித்து ஆடிப்பாடி ஆர்ப்பரிப்புடன் நிற்கும்போது தீக்கொளுத்தப்பட்ட வஸ்திரங்களெல்லாம் வெந்து சாம்பலாய்ப்போய்விட்டது. திரிபுரதகனம் என்பது இதுதான் சிவன் சிரித்தானென்பது தங்கள் ஜீவனைக்கொண்டு சிரித்தார்கள் என்பதாம்.

அநுமான் வாலில் கொஞ்சபாகத்திற்கு வஸ்திரமில்லை சிதை வஸ்திரம் ஒன்றுதான் பாக்கி என்று சொல்லவும் வால் சுருங்கிக் கொண்டதென்று சொல்லப்பட்ட கருத்தென்னவெனில் தங்கள் பெண்டு பிள்ளைகளின் புடவைகளைக் கொளுத்தாததினால் வால் சுருங்கிக்கொண்டதென்று மூலகிரந்த வாக்கியத்தின் பொருள். தங்களுக்கு மூலகிரந்த வாக்கியத்தின் ஸ்லோகம் வேறுளனச் சொல்லுவார்கள் அது மூலமந்திரம் என்று சொல்லப்பட்டது.

இன்னுமோர் தகனம் சொல்லப்பட்டது. அது என்னவென்றால் காமதகனம் இதின் தெளிவு ஆடவர்களுடைய ஆடையைத்தீக் கொளுத்தியதுபோல மூலகிரந்த சுலோக உட்கருத்து வெளிகிரந்த ஸ்லோகத்தில் கேளிக்கா உற்சவம் என்ற காமதகனம்.

இது சிற்சில பிரியமானவர்களே இன்னும் சில தகவல்கள் சொல்லப்பட்டது. அது பின்வருகிறபடி பாரதகிரந்தத்தில் கூறியிருக்கிறது. மகாபலிபுரத்தை அரசுசெலுத்திய மாபலிச்சக்ரவர்த்தி மனுநீதிவழுவாமல் யாவருக்கும் நீதியைத்தெரிவித்து சத்திய மார்க்கத்தைப் போதித்துத் தன்னுடைய அரசாட்சியைப் பிரகாசிக்கிற ஒளியைப்போல் பாலசெய்து தானதருமம் இயற்றிப் பிரஜைகளும் நலம்புரிந்து பக்தர்களாகி தட்டுங்கள் திறக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள் கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற வாக்கியங்கள் தன்னிடம் பலிக்க அரசுபுரிந்துவரும் காலத்தில் தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட யாவரும் மரியாதை, மன்னிப்பு, தயவு தாட்சண்யம், தாழ்மை, இரக்கம் முதலிய நற்குணங்கள் பொருந்தியவர்களாயுமிருந்தார்கள் விப்பிர வகுப்பினரான சிலர் மனிதர்களை ஏமாற்றி பலித்து வந்தார்கள். இவர்களில் தலைமையானவன் வாமனன். இவன் மாய்மையுள்ளவனும் வார்த்தையில் சாதுரியவானும் வல்லவனுமாயிருந்தான். இவன் மாபலிசக்கிரவர்த்தியிடம் சென்று விக்ரகவணக்கத்தை ஏற்படுத்துகிற வழக்கத்தை வெளியிடாமல் தனக்கு பூமியிலே கொஞ்சம் நிலம்வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். சக்ரவர்த்தி கொடுத்தேன் என்று வாக்களித்தார் வாமனன் உமது தலைமைநகரமாகிய மாபலிபுரத்தில் தனக்குத் தரவேண்டுமென்று கேட்டான் அவர் அப்படியே அதுவும் தந்தேன் என்று உறுதிமொழிகூறி உமது இஷ்டப்படிசெய்து உமது ஆசையை நிறைவேற்றுமென்று ஓர் இடத்தைக்காண்பித்து அதைக்கொடுத்துவிட்டார். பின் வாமனன் தன் இனத்தவரையெல்லாம் வரவழைத்து ஒரு ஆலயம் கட்டி அதில் வாமனன் என்ற ஒரு விக்ரகத்தை பின்னால் செய்துவைத்தான் இந்தச்செய்தி சக்கிரவர்த்திக்குத் தெரியவே அவர் மிகவும் கவலைப்பட்டு ஆகாரம்புசியாமல் நித்திரையாய்விட்டார். சக்கிரவர்த்தி காலஞ்சென்றபின் சிறிது நாட்களில் [illegible] மகாபலிபுரம் அழிந்துவிட்டது இதைக்கண்ட [illegible] இந்த விஷயத்தை மாபலிசக்கிரவர்த்தி தன் ஆளுகைக்குட்பட்ட தேசமெங்கிலும் [illegible] உண்டாக்கத் [illegible] என்னை உண்டாக்கி பூமியெங்கும்



இரவைப்பகலாக்கும் விளக்குகள் வைத்துக்கொள்ளும்படியாய் உத்தரவுசெய்ததால் அப்படியே குடிகள் எல்லோரும் செய்தார்களென்றும் அப்படிச்செய்ததால் கீழோர் மேலோர் எவ்வகைஜாதியாரும் மோட்சத்துக்குப்போகிறதினால் சுவர்க்கத்தில் இடமில்லாமல் நிறைந்துவிட்டதென்றும் தேவர்கள் தங்களுக்கும் இடமில்லாதது கண்டு நீரை உறைவிடமாகக்கொண்ட மகாவிஷ்ணு என்று சொல்லப்பட்ட நாராயணனிடத்தில் சென்று முறையிட்டதாகவும் மகாவிஷ்ணு அவர்களுக்கு அபயங்கொடுத்துச் சொன்னதாவது இதற்கு வழிகாட்டியாயிருந்த மாபலியிடத்தில் நான்சென்று மூன்றடிமண்கேட்டு அவனைப்பாதாளத்தில்தாழ்த்தி அழித்துவிடுகிறேன் என்று திருவாய்மலர்ந்து தேவர்களை அனுப்பிவிட்டு திருமால் உடனே வாமன அவதாரமெடுத்து மாபலியிடம்வந்து என் காலடிக்கு மூன்றடி பூமிவேண்டுமென்றுகேட்க அப்படியே அவன் கொடுக்க அவன் பூமியெல்லாம் ஓரடியாகவும் மேல்அண்டத்தை ஓரடியாகவும் அளந்து இன்னும் ஓர் அடிக்கு இடங்கொடு என்று கேட்க அவன் தன்னுடைய சிரசைக்காட்டியதாகவும் அவன் சிரசைத்தன் பாதத்தினால் மிதித்து பாதாளத்தில் புகச்செய்தாரென்றும் திரும்ப அவன் வேண்டிக்கொண்டதால் உன்னுடைய பூமியை வருஷத்துக்கொருமுறை பார்த்துக்கொள்ளென்று திருவாய் மலர்ந்தருளினாரென்றும் அவ்விதம் பூமியின் சொக்கப்பதி திருநாளென்றும் நடத்தி அச்சமயம் மாபலியைப்பாதாளத்தைவிட்டு வெளியேகொண்டுவந்து உன்னுடைய சொந்தபூமியை பார்த்துக்கொள்ளென்று காட்டி திரும்பவும் சிறையில் வைத்துவிடுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது, இதன் தெளிவு.

நன்மைச்செய்த மாபலியை ராட்சதன் என்றும் இவனால் சுவர்க்கத்தில் இடமில்லாமல் தேவர்களுக்குத்தீங்கு நேரிட்டதால் இவன் சகிக்கப்படாத குற்றவாளியென்றும் தன் தலைமைநகரில் வசிக்க இடங்கொடுத்தும் அவர்கள் உண்டாக்கிய வாமனசொரூபத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் விக்ரகவணக்கத்தை ஒப்புக்கொண்டு விப்பிரர்மூலமாகத் துளசிதீர்த்தம் வாங்கிப்பருகவில்லையென்றும், தங்களை எல்லாரும் வணங்கும்படி உத்தரவுகொடுக்கவில்லையென்

றும் தங்களுக்குப்போதுமான பொருளுதவி செய்யவில்லை என்ற கருத்துடன் தங்களுக்கு நிலங்கொடுத்த சக்கிரவர்த்தியின் நன்மையை இகழ்ந்து சிறையில்வைத்தது புராணத்திலுடைய கருத்தாகும். இதை யோசிக்குமிடத்து நாட்டு வசனத்தைச்சுலோகம் அல்லது பழமொழியென்றே காக்கைத்தீக்காய் வெளியே சொந்தமாய்ப்பூ என்பதுபோலாயிற்று இந்த விப்பிரர்களுக்குச் சக்கிரவர்த்திகளாயிருக்கிறவர்களும் குறுநிலமன்னர்களும் எவர்களாயிருந்தாலும் சரி, நன்மைசெய்த மாபலி சக்கிரவர்த்தியையுங்கூட இகழ்ந்தார்கள். இவர்கள் மனம்போல் நடந்துகொண்ட இராமனையும் இகழ்ந்திருக்கிறார்கள். அவனுடைய பத்தினியைச் சிறையில்வைத்தாகச்சொல்லி மிகவும் பயங்கரச்செய்கையில் அகப்பட்டுக்கொண்டதாக இகழ்ந்து பரிகாசத்துக்கு இடமேதவிர புகழ்ச்சிக்கல்ல முன் சொல்லியபடி சர்ப்பத்துக்கு எவ்வளவு பால்வார்த்துவந்தாலும் விஷத்தைக் கொடுக்குமே தவிர அமிர்தத்தைக்கொடாது இதுபோல விப்ர குணிவர்களைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு நன்மைசெய்தாலும் இவர்களால் மற்றவர்களுக்கு யாதொரு நன்மையுமுண்டாயதில்லை.

சீதையைச் சிறையெடுத்துக்கொண்டுபோன விதத்தையோசிக்குமிடத்து இராவணன் ஓர் ராட்சதனென்றும் அவனுக்குப்பத்து சிரசும் இருபது கரங்களும் உண்டென்றும் அவனுடைய உயரம் நாற்பதுமுழமென்றும் சொல்லப்பட்டதால் இவ்வித திடகாத்ர தேகம் உடையவனுக்கு நான்குமுழ உயரமும் சிறிய அவயவங்களுமுள்ள சீதை எம்மாத்திரம்? இவளைப்பார்த்தால் அவனுடைய கண்ணுக்கு ஒரு இந்திரவர்ணபூச்சியைப்போலிருந்திருப்பாள் எவ்வளவு அழகாய்த்தோன்றினாலும் இச்சிப்பதற்கு இடமில்லாத சரீர வளமை குன்றினவளும் எவ்வகைக்கும் ஏற்றதில்லாதவளுமாயிருக்

இந்தியாவில் குருக்களாக ஏற்பட்டவர்கள் செய்த பதினெண் புராணங்களில் மனிதருக்கு சிரசுகள் மூன்று ஐந்து பத்தென்று நூறு கணக்கிட்டிருப்பது இந்த சமயத்தார்தான் ஒப்புக்கொள்வார்கள் இந்தியாவில் இருக்கிற [illegible] ஒப்புக்கொள்ளவில்லை. [illegible] வேறேயே சத்திய வேதத்தில் ஜலப்பிரளயத்திற்கு முன் இராட்சதர் இருந்தார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது அவர்களுடைய சிரசுகளைப்பற்றி [illegible] ஒன்றும் சொல்லப்படவில்லை [illegible] சிரசுகள் [illegible] நாடு.



ற சீதையை எவ்வாறு சிறை எடுத்திருக்கக்கூடும்? சிறை எடுக்க வேண்டியதில்லை. இராவணனுடைய கைகளையும் சிரசுகளையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஒருசிரசுக்குப் பத்துசிரசுகளிருந்தால் சுற்றிவட்டமாக இருந்ததோ அல்லது படத்தில் நாம்காண்கிறவிதமாயிருந்ததோ அல்லது ஒன்றின்மேல் ஒன்றாய் இருந்ததோ தெரியவில்லை. இனி கைகளை யோசிக்கிற விதத்தைப்பார்ப்போம் அது வரிசையாக வலப்புறம் பத்தும் இடப்புறம் பத்துமாக புயத்தில் ஒட்டிக்கொண்டிருக்க இருந்த வலதுகையும் இடதுகையும் இணை இணையாக ஒருவேலைசெய்யும்போது எல்லாம் சேர்ந்துகொள்ளுமோ அல்லது இரண்டு கைகள்மாத்திரம் வேலைசெய்ய மற்றவைகளொட்டும் சும்மாயிருக்குமோ தெரியவில்லை. மேலும் ராமாயணம் சுந்தரகாண்டத்தில் சிகரங்குமிடுவைரை என்ற செய்யுளில்பார்க்கும்போது மலைகளைப்போல் வரிசையாக அவனுடைய குடுமியின் முடிப்பின்திரள் இருந்ததாகத்தெரிகிறது. இப்படியிருப்பதால் இராவணன் சிரசுகள் படத்தில் எழுதுவதுபோல் இருப்பதாகப் பார்க்கிறோம். அவனுடைய உயரத்துக்குத்தக்கபடி தேக அகலம் பத்துமுழம் உள்ளதாயிருக்கவேண்டும் சாப்பிடுவது ஒருவாயோ அல்லது பத்துவாய்களுமோ வலதுபக்கத்துக்கைகள்யாவும் ஒன்றுபோலெடுத்து அன்னம் ஊட்டுவது எவ்விதம்? யோசிக்கவேண்டியதவசியம் இப்படியிருக்கதாகமானால் ஜலம்பருகுவது ஒருவாயினாலோ அல்லது பத்துவாயினாலோ அல்லது பேசுவதும் அப்படித்தானோ இப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசமும் விகற்பமுமாய்த்தோன்றுவதால் அவனுடைய தேகத்தின் எலும்புகள் பெரியதூண்கள் உத்திரங்கள் இவைகள் ஒரு விருக்ஷத்தில் அறுக்கப்பட்டகனம் உயரம் எவ்வளவோ அவ்வளவு பருமன் இருக்கவேண்டும் இவைகளை நம்பினாலும் அவனுடைய கனம் எவ்வளவுபெரிதாகயிருக்கவேண்டும். இவையெல்லாம் யோசித்து மெய்பொய் என்பதைத்தெரிந்து நிச்சயித்துக்கொள்ளட்டுமென்று மூலசிரந்த சுலோகத்தின் சூட்சுமத்தையறியாமல் அநேகர் இராமாயணம் மேன்மையான பெருங்காவியம் இராமர்தான் அந்த நாராயணன் சீதைதான் மகாலட்சுமி என்று கொண்டாடுகின்றார்கள் அதின் உட்கருத்தை யோசியாமல் வெகுகாலமாய் விப்ரரைச் சேர்ந்த இனத்தாரிலே நடந்துவருகி

றது அந்தரங்கவிஷயம் பொய்யைத்தள்ளி மெய்யைத்தழுவு என்ற பிரகாரம், இராவணன் இராட்சதனுமல்ல சீதையை சிறையெடுத்துக்கொண்டுபோகவுமில்லை கோடாரியானது மரங்களின் வேருக்கே வைக்கப்பட்டிருக்கிறது என்று முன்னோர்களால் கூறப்பட்டிருக்கிறது அவர்கள் செய்த நூல்களைக்கொண்டே வித்தியாசத்தை அந்த இடத்தே காட்டுகின்றன. கோடரியானது தனிமையாயிருந்தால் அதுவெட்டாது அதற்கு மரத்தின்கிளைபோட்டால் வெட்டும். அதேமாதிரியாய் மூலவிருத்தவாக்கியங்களாலும் அல்லது கவிகளாலும் தெரிந்துகொள்ளலாம் இது சிறந்த சீதை, ராம லட்சுமணர் இவர்கள் வனவாசத்தைப் பற்றிக்கவனிக்கவும்.

வனவாசம் என்ற மூலவிருத்த சுலோகத்திலுண்டான மாறுதல் என்னவெனில் வசிட்டரைச்சேர்ந்தவர்கள்கூடி ஓர் ஆலோசனை செய்தார்கள் அதென்னவென்றால் முன்சொன்ன விக்ரகவணக்கத்தையும் தங்களை வணங்கும் தன்மையையும் இராமனால் நடந்துவருகிறதால் இன்னமும் நன்மையினால் ராமனை ஏமாற்றி அதற்குத் தகுந்த விஷயத்தை வினயமாபூசித்து நடத்தவேண்டுமென்றும் நிச்சயித்துக்கொண்டார்கள் அது என்னவெனில் தேவர்களால் உண்டான அபிற்பாகத்தினால் முடியுமெனக்கருதி இராமனிடம்போனார்கள். அங்கே இராமனைக்கண்டு ஆசீர்வதித்தார்கள் இராமனும் இவர்களை வரவேற்றுக்கொண்டான் அதன்பின் சிலவருஷங்களாய் தாங்கள் எண்ணியிருந்த எண்ணத்தை நிறைவேற்றும்படியாய் ராமனிடத்தில் பேசத்துடங்கினார்கள் அதெப்படியெனில் உம்முடைய பிரதாபத்தையும் அவதாரமகிமையுங் குறித்து எங்கேளும் ஸ்தவுத்தியஞ்செய்துவந்தோம் அப்படிசிலகாலம் செய்துவந்ததால் ஒருநாள் எங்களுக்கு உம்முடைய பூர்வீகமானம் தோன்றி இந்த அபிற்பாகமூலிகையை அக்கினிமூலமாய்ப் பருகக்கொடுக்கவென்று திருவாய்மலர்ந்து சொன்னதாவது நீங்கள் இப்போது கண்டமாதிரியாய்ப் படம்வரைந்து காட்டியபின்னர் இந்த அபிற்பாகம் கொடுக்கவென்று மறைந்தார் இதுதான் அபிற்பாகமூலிகையென்று காட்டினார்கள். பின்பு தாங்கள் வைத்திருந்த நாராயணன் என்றுசொல்லப்பட்ட மகாவிஷ்ணுவினுடைய உருவம்



வரைந்திருந்த படத்தையும் விக்ரகத்தையுங்காட்டினார்கள், ராமன் இதைப்பார்க்கவே தற்புகழ்ச்சியாகி நம்முடைய அவதாரம் உங்களுக்குத்தோன்றியதுபோல் எனக்கும் தோன்றுமா என வினவினார் இந்த அபிற்பாகத்தின்மூலமாகத் தோன்றுமென்று கோரக்கர்மூலிகையை கோரக்கனென்ற முனிவன் பக்குவஞ்செய்து தன்னுடைய கமண்டலத்தில் பருகும்படியாய்க்கொடுத்தான் அப்படியே பருகிப் புகையானது உள்ளேபிரவேசிக்கவே தனக்கு மனம்மாறுதலடைந்து தான் கண்ட படம்போலவும் விக்ரகம்போலவும் தோற்றமாகி பரலோகம் பூலோகம் பாதாளலோகமாகிய எல்லாலோகங்களும்தோற்றமாகி அப்படியே எல்லாம் ஒரு மாய்கையைப்போல் மாறிமறைந்துவிட்டது. பின்பு ராமனுக்கு மறுநாள் சுபாவக்குணம்வந்து சபாமண்டபஞ்சென்று சகல அதிபதிகளும் பிரஜைகளும் முனிவர்களென்று சொல்லப்பட்ட விப்பிரர்களும் நிறைந்தசபையில் தான்கண்ட தரிசனம் யாவையுஞ் சொல்லி இவர்களை குருவென்று ஏற்று நீங்கள் எதைக்கேட்டாலும் அதைச் செய்யத் தடையில்லையென வாக்களித்தான். உடனே இவர்கள் ஒரு காரியத்தைத் தங்களுக்குத் தடை செய்யாமல் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதென்னவெனில் நீங்களிப்போது மாவுரிதரித்து சீதாலக்ஷ்மணர் சகிதமாய்ப் புறப்பட்டு எங்களாச்ரமங்களுக்குவந்து எங்களையும் மற்றுமுங்கள் குடிகளாகிய வனத்துசமுசாரிகள் வைத்துப்பயிராக்கும் விளைச்சலைக் கெடுக்கக்கூடிய மிருகங்களைச்சங்கரித்து எங்களிடத்தில் சிலகாலந் தங்கித்தங்களுக்கு சில காட்சிகளைத் தெரிவிக்கக்கூடிய பெரிய தவசிரேஷ்டர்களிருக்கிறார்களென்று இனியவசனத்தினால் சொன்னார்கள். இதுவுந்தவிர நீங்கள் இளமையாயிருக்கும்போது உங்கள் பாரம்பரியாய்ச் சத்தியமார்க்காநுசாரியாயிருந்த விஸ்வாமித்ரருக்கு உதவியாகப்போய்த்தாடகை என்ற அரபிக்கூட்டத்தைவென்று அப்படியே மிதுலாபுரிபோய் அவருக்குகுருவாயிருந்த ஜனகருடைய குமாரத்தியைப் பரிசுத்தவிவாகம் நடத்தினதுபோல இப்போது எங்கள் கூடவே எழுந்தருளவேண்டுமென்று வார்த்தை சாதுரியத்தாலும் பசுவின் இளங்கன்றைப்போல் மருகித்தியங்கினார்கள்.

---

அரக்கர் கூட்டம்.

இவையெல்லாம்கண்ட ராமன் சீதாலக்ஷ்மணர் சஹிதமாய் உடனே புறப்பட்டு பாலில்பழம்நழுவி விழுந்தாற்போல வனமென்ற காட்டுப் பிராயங்களுக்குப் போனார்கள் தன்னுடைய இரதத்தைகங்கைக் கரையோரமாக நந்திக்கிராமத்தில் தனக்குத்திறைசெலுத்தக்கூடிய குகனென்ற ஒருசிற்றரசனிடத்தில் நிறுத்திவிட்டு அவனுடைய தோணியிலேறி அப்புறம்போனார்கள். பிற்பாடு தங்கள் ஆசிரமங்களென்று சொல்லப்பட்ட கிராமங்களை நன்றாய் அலங்காரஞ்செய்து விடுதிகளேற்படுத்தி நல்லருசிகரமான பழவகைகளும் இன்னுஞ்சில சிற்றுண்டிகளும் மேலானபோஜனமும்உதவி மேலுந்தங்களில் சிலபேர்கள் வேடங்கள்பூண்டு நடித்து அபிநயங்காட்டி அவதாரங்கள் என்று சொல்லப்பட்ட தசஅவதாரங்களும் தங்களுடைய மகிமை என்றேகாட்டி அமிர்தப் பிரசாதத்தைப்பருகக் கொடுத்தனர். அதை அருந்தவே முன்னிலும் அதிகதோற்றமுண்டாகி முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், கின்னர், கிம்புருடர், வித்யாதவர். பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னப்பட்ட சகலபூமியுந்தோன்றி மாறி மாறி மாய்மையாய் மனதைக்களிக்கச்செய்தது. இதனால் ராமனுடைய இருதயத்தைத் தங்கள்வசப்படுத்திக்கொண்டார்கள் சீதைக்கு உயிர்த்தோழியாகச் சடைச்சி என்ற ஒரு பெண்ணை ஏற்படுத்தி அன்னபானாதிகள் அளிக்கவும் இனிய வசனங்கள் பேசவும் அடைக்காய் வெற்றிலை பரிமாறவும் முன்னேசொன்ன முனிவர்களிடமிருந்து அமிர்தப்பிரசாதம் அழைப்பித்துக் கொடுக்கவும் சீதையுமிதைபருகி மிகவும் பயங்கரமான மோசத்திலகப்பட்டுப் பத்துச்சிரசையுடைய ஒரு ராட்சதன் தன்னை எடுத்துக்கொண்டுபோய்ச் சிறையில் வைத்ததாகத்தோன்றித் தனக்குக் காவலாக சிலராக்ஷதஸ்திரீகளும் அதில் குணமும் தனக்கு அன்பாகவும் நலமானசெய்தி சொல்லக்கூடிய திரிச்சடை என்ற பெண்ணிருந்ததாகவும் பிற்பாடு அநுமான் வந்து தனக்கு நன்மைசெய்து அப்பால் தன்பதியாகிய ராமரும் லக்ஷ்மணரும் வானரசைனியங்களுடன் வந்துயுத்தஞ்செய்து ராவணனைக்கொன்று சிறையிருப்பைத் திருப்பித்தன்னிருப்பிடம்வந்து சேர்ந்ததாகத்தோன்றி மறைந்துவிட்டது. இதனால்



சீதைபயந்து காலமே எழுந்து சடைச்சியென்ற பெண்ணிடத்தில் நீகொடுத்த பிரசாதத்தினால் நான் மிகவும் பயங்கரமானதைக்கண்டேன் என்று தான் கண்டவைபரவையும் சொல்லிக்கவலையுற்றிருந்தாள். அப்படியிருக்கும்போது சடைச்சியென்பவள் வேகமாயோடி இதற்குத்தலைவனான வசிஷ்டனிடம் சொன்னாள். அவன் உடனே தங்களில் சிலபெரிய தவசிகளென்று சொல்லப்பட்டவர்களையும் ராமனையும் அழைத்துக்கொண்டு சீதையிருக்குமிடத்திற்குப் போய் சொன்னதாவதென்னவென்றால் நீங்கள் முன்.ஜென்மத்தில் மகாலட்சுமியாதலால் இப்போதுகண்ட காரியத்தைப்பற்றியோசிக்கவேண்டாம். உங்களுக்கு நடக்கவேண்டிய காரியந்தான் நாங்களிதை அறிந்துதான் உங்களை அழைத்துக்கொண்டுவந்து இதைத் தெரிவித்தோம். இது உங்களைபணுகாதபடிக்கு நாங்கள் தவசுபுரிந்து நீக்கிவிடுகிறோமென்று நயவசனமாய்ச்சொல்லி ஏமாற்றினார்கள். இதுவுந்தவிர இன்னுமொரு காரியம் ராமனுக்குச் சொன்னார்கள். அது என்னவெனில், இன்றையத்தினம் நீங்கள் மிருகவேட்டையாடி இரண்டுமூன்றுநாள் தங்கியிருந்து உங்கள் பட்டணமாகிய அயோத்திக்குப்போய்ப் பட்டாபிஷேகம் நடக்கும்போது சிலகாஷி என்ற ஊர்வசி நடனத்தைத் தெரிவிக்கச்செய்துவைக்கிறோமென்றுசொல்லி ராமனுக்குத்தேறுதலாக வார்த்தை சாதுரியத்தால் மிகவும் பயபக்தி விநயமுடன் தங்களை நம்பும்படியாக எல்லோரும் ஒருமித்து நயந்து வயிற்றிலிருக்கிற பிள்ளையும் நழுவி விழுவது போலச்சாற்றினார்கள். நாராயணரே நீரென்றும் இந்த சீதைதான் மகாலட்சுமி யென்றும் இந்த லட்சுமணர்தான் தேவேந்திரனென்றும் புகழ்ந்து நாங்களும் உம்முடைய தாசரென்றும் எங்களை ஏற்றுக்கொண்டு இப்போதே வேட்டையாடப்போவோமென்று சில வனத்துச் சமுசாரிகளையும் தங்களைச் சேர்ந்த வாலிபர்களையும் கூட்டி வேட்டைக்குப்போய் அநேக மிருகங்களை வதைத்துத் திரும்பினார்கள். அவர்களுடைய சொல்லை நிறைவேற்றி சகலரும் நந்திக்கிராமம் வந்து குகனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன்னுடைய ரதமேறி அயோத்திவந்து சகலரும் புடைசூழ பட்டாபிஷேகம் ஏற்படுத்தி முடிந்தபின் ஊர்வசி நடனத்தை ஏற்படுத்தி தங்களில் ஒரு வாலிபன் நன்றாய் சிஞ்சுக நடனத்தைப் புரியக்கூடிய

வனும் பெண்குரல் பேசவல்லவனும் கீதவாத்ய நாட்டியத்தில் தேர்ந்தவனும் மிகவும் தந்திர உபாயங்களால் அடிக்கடி வேடம் பூண்டு மனிதரை பிரமிக்கச்செய்ய வல்லவனுமாயிருந்தான். அவனுக்கு வேடந்தரித்து சிங்காரக்கொட்டகையில் சின்கள் திரைகள் ஏற்படுத்தி அதில் நடனஞ்செய்து மறைந்ததாகக் காட்டி ஏமாற்றி தெய்வலோகத்திலிருந்து வந்து பிரசன்ன நடனஞ்செய்து மறைந்ததாகப்பேசி ராமனுடைய மனதை களிக்கச்செய்து ராமனிடத்தில் நல்ல சன்மானம் பெற்றுக்கொண்டு விடைபெற்று தங்களிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள். இந்தப்படிக்கு விப்பிரர்கள் சகலரையும் எவ்விதத்திலாவது ஏமாற்றி தனக்காகவேண்டிய உணவுக்காக வேண்டிய முயற்சிக்காக அச்சிதையென்று பச்சையரிசியில் மஞ்சளும் கோரக்கர் மூலிகையைக் கூட அரைத்துத் தடவிக்கொண்டு இந்நாளிலும் கொடுப்பார்கள். இன்னும் சில விப்பிரர்கள் விபூதியில் முன்சொன்ன மூலிகை சேர்த்துக்கொடுப்பார்கள். தீர்த்தம் என்று சொல்வதில் ஜனங்களுக்குச் சேர்த்துக் கொடுப்பார்கள். கொடுத்துத் தான் தியாகி என்று யாசித்து நன்மையால் இகழ்ந்து புகழ்ந்து ஒருவர்க்கொருவர் சண்டைசெய்யும்படியாய் கலகத்தை மூட்டி பின்வாங்கிக்கொள்வார்கள். இவர்களுடைய புராணங்களையும் இதிகாசங்களையும் இவர்களுடைய உபசார வசனங்களையும் சாஸ்திரங்களையும் ஒருபோதும் நம்பக்கூடாது. இவர்களுக்கு தன்னிஷ்டம்போல் நடத்தவே ராமனுக்கு அயோத்தியில் தன்னுடைய கிரகத்திலும் மற்றயிடங்களிலும் மண்மாரி பொழிந்ததாக இராமாயணம் உத்திரகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் செய்வதெல்லாம் தேவகோபாக்கினைக்கு இடமேயொழிய இரட்சிப்புக்கிடமில்லை.

இன்னுமோர்விஷயமென்னவெனில் இவர்களுக்குத் தன்மனம்போல் நடந்தாத சக்கிரவர்த்திகளை ராட்சதர்களென்றும் சன்மார்க்கம் போதிக்கும் ஞானமொழியால் நல்வழி காட்டக்கூடிய மார்க்கத்தை துர்மார்க்கமென்றுஞ்சொல்லி அநேகரை மரணத்துக்காளாக்கி ஏமாற்றுவார்கள். இதுதான் இவர்கள் வம்சபரம்பரையான வழக்கம். இவர்கள் வம்சத்தைத் தெரிந்தவர்கள் இவர்களை இழி



வாக எண்ணுவார்கள். வம்சவரலாறு ஊர்வசியென்னும் தாசிவயிற்றில் பிறந்தவன் வசிஷ்டமுனி. வசிஷ்ட முனிக்கும் சக்கிலிச்சிக்கும் பிறந்தவன் சத்திமுனி. சத்திமுனிக்கும் புலைச்சிக்கும் பிறந்தவன் பராசரமுனி. பராசரமுனிக்கும் மீன்வாணிச்சிக்கும் பிறந்தவன் வியாசமுனி. இந்த வியாசன் சத்தியமார்க்கத்தாரால் கல்வி கற்று அந்த மார்க்கத்திலிருந்து நியமத்தைப்புரட்டி வேதத்தைச் சிக்கறுத்தேனென்று புராணங்கள் இதிகாசங்கள் அத்வைதங்கள் உண்டாக்கி அவைகளில் தங்களை முன்யுகங்களிலிருந்து அநேக அற்புதங்களை காட்டியும் மறைத்தும் தங்களிஷ்டம்போல் நடந்தவர்களை ரட்சித்தும் அப்படி நடவாதவர்களை சாபத்தாலழித்தும் பூமிபாரம் தீர்த்துத் தங்களுக்கு தேவஅதிகாரம் உடைத்தாயிருக்கிறதென்றும் தங்களுக்கு சகலரும் பாதநமஸ்காரம்செய்து காணிக்கைசெலுத்தித் தங்களை ஏற்றுக்கொண்டால் இகபர சாதனம் அடையலாமென்றும் எழுதி கட்டுவாக்கியங்கள்செய்து அதைவெளியில் சகலரும் படிக்கும்படிசெய்து தன்னைப் பின்பற்றும்படி செய்து கொண்டான். இதுதான் வேதத்தைச் சிக்கறுத்தோனென்ற விஷயம்.

இதுவுந்தவிர தங்களினத்தாருக்கு உபதேசிக்கும் மர்மத்தின் சூட்சியென்னவென்றால் எந்ததேசத்திலிருந்தும் எந்தபாஷைக்காரனையானுஞ்சரி சக்கிரவர்த்தியாகப் பூமியாளக்கண்டால் உடனே நீங்கள் அந்த பாஷையைக் கற்றுச் சக்கிரவர்த்திகளையடுத்து அவர்களிடத்தில் தொண்டுபுரிந்து அவர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரங்களை நடத்துங்கள். அப்போதுதான் நான்செய்த நால்வே[illegible] இதிகாசங்களும் பதினெண் புராணங்களும் பயன்படும். நீங்கள் விக்ரக வணக்கத்தை விட்டுவிடாமல் சிலர் பூஜாரிகளாயிருக்கவேண்டும். அப்போதுதான் உங்களை உலகத்திலுள்ள தெரிவில்லா ஜனங்களெல்லாம் வணங்குவார்கள். இந்த இரண்டு விஷயங்களும் உங்களைப் பின்பற்றக்கூடியதாயும் நயமும் முக்கியமுள்ள அதிகாரம் செலுத்தக்கூடியதாயுமிருக்கும். ஒரு விஷயத்திலும் இன்னொரு விஷயத்தில் பயமும் உண்டாகும். அந்த விஷயங்களுக்கேற்ற ஞாபக சின்னங்களை ஏற்படுத்தி பிரகார

ரைகளைத் தரிப்பித்து குருக்களென்று ஏற்பட்டு தனவந்தர்களை பிடித்து நமது புராணங்களையும் இதிகாசங்களையும் சுயவசனமாகவும் வார்த்தை வல்லமையாகவும் அவர்களுக்குப் பாராயணம்பண்ணி ஏமாற்றி அவர்களை உங்கள் வசப்படுத்திக்கொள்ளுங்கள். முன் சொல்லிய சக்கிரவர்த்திகளுக்கு இடையூறுகள் யுத்தங்கள் ஏற்பட்டால் குடிகளையும் சிற்றரசர்களையும் குறுநிலமன்னர்களையும் ஏமாற்றி அவர்களை உங்கள் வசப்படுத்தி சக்கிரவர்த்திகளுக்கு விரோதமுண்டாக்கி யாருடைய கட்சி ஜெயிக்குமோ அந்தப்பக்கம் சேர்ந்துகொள்ளுங்களென்று மூலமந்திரமென்று சொல்லப்பட்ட உபதேசத்தின் கருத்து இதுதான். தங்கள் இனத்தாருக்கு உபதேசிக்கப்பட்ட விபச சிரந்தமென்று சொல்லப்பட்ட கருத்தின் சுருதி.

விபசனென்ற பெயர்வந்த காரணமென்னவெனில் வேசியாளவளின் மரபில் தோன்றியதால் வேசியன் என்பதற்கு விபசனென்று பேர் மாற்றிக்கொண்டான். முன்சொன்ன பாராசரமுனி விவாகமில்லாத மீன்வாணிச்சியை வேசித்தனமாகப் புணர்ந்து பிறந்ததால் அநுலோமன் இவர்கள் மரபில் தோன்றினதால் விப்பிரர்களென்றும் விப்பிரப்பெண்கள் வேசிகளாகிரியாய் வேடம்பூண்டு எவரும் இச்சிக்கும்படியாய்ப் பாவனைகாட்டி ஏமாற்றிவிடுவார்கள். இவர்களைத்தெரிந்தவர்கள் அவர்கள் வசத்தில் நம்பிக்கைவைக்க மாட்டார்கள். இவர்களை பரிசேயரென்று சொல்வதுண்டு. பரிசேயரென்றால் ஹிந்துஸ்தானி பாஷையில் தேவு-பரி-ஜின் என்பது பூதம் பிசாச முனி என்று பேர். பரிகுலப்பெண்கள் மிகவும் அழகுடையவர்களென்று சார்தர்வேல் கதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப்பரிகுலத்திற்கும் ஜின் என்ற முனிகளுக்கும் சம்பந்தமுண்டாயிருப்பதால் இவர்களுக்கு முனிவர்களென்ற பேர் வந்தது. முனிவர்களென்றால் கோபமுடையவர்களென்றர்த்தமாம். அதனால்தான் துர்வாசமுனியை அதிக கோபியென்று அவனுடைய சரித்திரங்களில் தெரிந்துகொள்ளலாம். இதுவும் தவிர இன்னும் மெய்முனிவர்களுடைய சரித்திரங்களில் அவர்களுடைய வன்மையையும் கோபியென்பதையும் தெரிந்துகொள்ளலாம். இவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது தொன்றுதொ



ட்டு துஷ்டர்களென்பதற்குச் சந்தேகமேயில்லை. உபாத்தியின் கைப்பணிகாரம் என்னும் பழமொழி போல் இவர்கள் தங்கள் உணவுக்காக மனிதர்களை ஏமாற்றி எங்கேயும் கலகத்தை மூட்டிக்கொண்டேயிருப்பார்கள். இதுதான் இவர்கள் வம்சபரம்பரையாய் உண்டானதென்று அவர்களுடைய சரித்திரங்கள் முறையாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விபசனை ஜனப்புரட்டனென்று தெரிந்துகொள்ளுங்கள். இவனுடைய பதினெண்புராணங்களில் உள்ள வழுக்களையும் அதிலிருக்கிற பிரட்டுகளையும் முன்னோர்கள் இதைத் தெளிவாய் வியாக்கியானஞ்செய்து அவைகளைப் பொய்யென்றே நிரூபித்திருக்கிறார்கள். இதைத்தெரிந்துகொள்ள வேண்டுமானால் சித்தூர் ஜில்லா அதாலத்துக்கோர்ட்டு தீர்ப்பில் பார்த்தால் விளங்கும். இது நிற்க,

முன்சொல்லிய ராமாயணம் யுத்தகாண்டம் மூலபலச்சண்டையின் கருத்தென்னவெனில் யுத்தத்துக்குவந்த ராட்சத சேனைகளுக்கு பானைகள்போல் மூக்குகள் இருந்ததாகவும், குதிரையைப்போல் பருமனாக இருந்ததாகவும், அண்டத்தை எட்டித் தொடக்கூடியவர்களென்றும் மிகவும் யுத்தத்தில் பிரியமுள்ளவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் முன்னால் நிற்கக்கூடாமல் ராமனுடைய சேனைகளெல்லாம் ஓடிப்போய்விட்டதாகவும், ராமன் ஒன்றும் தோன்றாமல் இருந்துவிட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களே ஒருவர்க்கொருவர் யுத்தஞ்செய்து மடிந்தார்களென்று தெரியவருகிறது. தெளிதல். அவர்களுடைய அவயவங்கள் இவ்வளவு பெரிதாயிருப்பதால் அவர்களுடைய படைகளுக்கு உலகத்தில் நிற்க இடம்போதாது. இதுவெல்லாம் பொய்யேயல்லது மெய்யல்ல. முன்னே ராவணனால் நடந்த யுத்தத்தில் தன்னுடைய சேனைகளும் தனக்கு விரோதிகளான தன் சகோதரர்களுடைய சேனைகளும் ஒன்றுக்கொன்று யுத்தம் செய்து மடிந்தார்களென்பது மெய்தான் பொய்யல்ல. எப்படியென்றால் அவர்கள் சக்கிரவர்த்திகளாயிருப்பதாலும் வல்லமையில் சிறந்ததாலும் யுத்தக்கருவிகள் செய்து அவைகளைக்கொண்டு போர் புரிவதாலும் ஆகாயத்தில் செல்லக்கூடிய கருவியின் பலத்தாலும் ஜலத்தில் அப்படியே செல்

துகிறதும் அதுவுமல்லாமல் மூழ்கிச் செல்வதும் மேலும் பூமியின் அதிக விரைவாய்ச் செல்லக்கூடிய கருவிகளைத் தாங்களே செய்து அதை முடிக்கத் தெரிந்தவர்களானபடியால் அவர்கள் ஒருவர்க்கொருவர் யுத்தம் செய்து மடிந்த காரணம். அது மெய்யே யொழிய பொய்யல்ல. இதை யோசிக்கும்போது இராமன் யுத்தத்துக்குப் போகவுமில்லை யுத்தம் செய்யவுமில்லை. இப்படியெல்லாம் வித்தியாசமும் பொய்யுமாயிருப்பதாய் மூலபலம் என்பது தான் மூலகிரந்த வாக்கியத்தின் பொருள் கண்டு உணர்ந்துகொள்ளவும்.

இப்போது நமது பிரிடிஷ் ராஜாங்கத்தில் யுத்தம்முடிவுபெற்றதால் அதின் மூலமாகத் தெளிவாகிறது. முன்சொல்லிய வியாசன் செய்த நூல்களெல்லாம் ஏதாவது கொஞ்சம் ஒரு விஷயத்தைப் பற்றியதை வேறுவிஷயமாகமாற்றி அதிலே தன்னை மேன்பாடாகச் சகலரும் வணங்கினார்களென்ற கருத்தை நியமித்துத் தங்களினத்தாரே அவைகளைச்செய்து முடித்தனரென்றும் இவர்களில்லாத விஷயத்தில் உலகமில்லையென்றும் கட்டுவாக்கியங்களமைத்தும் தங்களையுயர்த்திக்கொண்ட புராணங்களும் இதிகாசங்களுமேதவிர வேறில்லை. இப்படி எல்லாப் புராணங்களும் அப்படியே குற்றமும் விகர்ப்பமுமிருப்பதால் யாவருக்குந்தெரிந்தவிஷயமே. ஆனால் வியாசனுடைய கட்டுப்புராணங்கள் அநேகம் உண்டு. அவைகளையெல்லாம விவரித்துக்காட்டவேண்டுமானால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகங்கொள்ளாதென்று எண்ணுகிறேன்.

பிரியமானவர்களே பெரியோர் சிறியோர் யாவருக்கும் மிகுந்த வணக்கத்துடன் நான் இதையெழுதியிருக்கிறேன். வாசிக்கிறவர்கள் அங்கீகரித்து கருத்துடன் என்பேரில் பெரியதயவு செய்துகொள்ளவும். இராமாயணத்தில் ராமனை விப்பிரர்கள் ஏமாற்றின சங்கதி நாட்டுப்பழமொழியால் தெரியவருகிறது. அதுஎன்னவென்றால் தங்களுடைய பிள்ளைகள் பெற்றோருக்கு அல்லது உபாத்தியாயருக்கு ஏதாவதொரு விஷயத்தில் தவறிவிட்டால் அந்தப்பிள்ளையை சாப்பாட்டுராமாவென்று உலகத்தார் இகழ்ச்சியாகச் சொல்வது வழக்கம். இது யாவருக்கும் தெரிந்த விஷயம். அது என்னவெனில் ராமனுடைய முன்னோர்கள் இந்த விப்பிராள் வீட்டில் சாப்பிடுகிற



தில்லை. அந்த வழக்கத்தை அறியாமல் புசித்ததால் இந்தஇழிவான பெயர் வந்தது. ஏன் அவர்கள் வீட்டில் புசிப்பதில்லையென்றால் விப்பிரர்களுடைய மார்க்கம் வேறு. சத்தியவர்க்கத்தார் விக்ரக வணக்கத்தாரிடம் புசிக்கமாட்டார்கள். இராமன் தன் மார்க்கத்தை யோசிக்காமல் வனமென்ற காட்டுக் கிராமங்களுக்குப்போய் விப்பிரர்களால் கொடுக்கப்பட்ட யாவையும் புசித்து இப்போர்ப்பட்ட இழிவான பழமொழியை என்றுஞ்சம்பாதித்துக்கொண்டான். இந்த விப்பிரர்கள் அதன்பின் யாவரையும் நயவசனமாக நீ சாப்பாட்டுராமன்தான் என்று இகழ்ந்துரைப்பதுமுண்டு. இதுயாவருக்கும் தெரிந்ததே.* இது நிற்க வியாசனுடைய புராணங்கள் தெய்வவணக்கமென்ற விக்ரக வணக்கங்கள் யாவையும் தள்ளிவிட்டு சத்தியவேதத்தில்சொல்லிய தேவகற்பனை பத்தும் தன்னிருதயத்தில் வேரூன்றும்படியாகவும் மனதைச்செலுத்தி தீர்க்கதரிசிகளால் தெரிந்து உரைத்தவருமாகிய நமது ரட்சகராகிய இயேசுகிறிஸ்துநாதருடைய உபதேசங்களையும் அவரால்காட்டிய உபவாசம், நற்செய்கை கீழ்ப்படிதல், சிஷர்மேல் அன்பு, சாத்தானை ஜெயிக்கும்வகை, அவருளியஜெபம், அவர் தனக்கு வேண்டியவைகளைக் கேட்டுக்கொண்டவிதம் முதலியவைகளைத் தெரிந்த சாதுக்கள் அவரைப்பின்பற்றி மோட்சவீட்டை யடைந்திருக்கிறார்கள். நாமும் அவரைப் பின்பற்றி யாவரும் அவருடைய உபதேசத்தைக் கற்று நல்வழியில் மனதைச்செலுத்தி ஜீவிக்கவேண்டுவதவசியம். சுபம். சுபம்,

---

* இதற்கொத்த சத்திய வேதத்தில் காட்டும் பழமொழியாக கர்த்தர் தீர்க்கதரிசி மூலமாய் உரைத்தது. எசேக். 14. 8. அந்த மனுஷனுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்பி அவனை அடையாளமாகவும் பழமொழியாகவும் வைத்து அவனை என் ஜனத்தின் நடுவிலிராதபடிக்குச் சங்கரித்துப்போடுவேன். அப்போது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்.

குறள் 42: கேள்வி 1.

செல்வத்துட்செல்வம் செவிச்செல்வமச்செல்வம்
செல்வத்துக்கெல்லாம்தலை.

## இரட்சகர் இடங்கொடு என்று கேட்டது.

இயேசுக்கிறிஸ்துநாதருடைய கிருபையை முன்னிட்டு உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக.

பிரியமானவர்களே பூமியிலே மனிதராய்ப் பிறப்பதரிது. அப்படியே மனிதராய்ப் பிறந்தும் சகல கலைகள் கற்றுணர்ந்து நல்லினை தீவினை இன்னதென்றறியக்கூடிய புத்தி சித்தத்தையும் ஞானத்தையும் அறிவையும் கடவுள் மனிதர்களுக்குப் படைத்திருக்கிறார். இப்படியிருக்க மனிதராகிய நாம் நல்விஷயத்தை இன்பமாய்த்தெரிந்துகொள்ளவேண்டியது நம்மைச்சேர்ந்த கடமை. பாவிகளாகிய நாம் தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களானபடியால் பரிசுத்த ஆவியானவரே மனுஷ அவதாரமாய் உலகத்தில் பரிசுத்தமுள்ளவராய்ப் பிறந்தார். அவர் போதித்தவைகளை நாம் பின்பற்றமுயலுவோமாக. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக இப்பொழுது இடங்கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். பரிசுத்தமத்தேயு மூன்றும் அதிகாரம் பதினைந்தாவது வாக்கியம். நமது அருமை ரட்சகர் யோவான் ஸ்நானகனிடம் வந்து ஞானஸ்நானம் பெறக்கேட்டார். அவன் அவருக்குத் தடைசெய்து நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். பரி. மத்தேயு. 3: 14. யோவான் சொன்ன வார்த்தை உலகார்த்தமாக ஞானஸ்நானத்தைப்பற்றிச் சொன்னான். நமது ரட்சகர் ஞானார்த்தத்தைப்பற்றி இடங்கொடு என்றார். உன்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் எழுதிய புஸ்தகம்.—14-வது பாரம்.—சகல வைராக்கியம் என்பதில் 820-வது வாக்கியம். பொன்னையும் பித்தளையும் உரைகல்லில் உரைப்பதுபோல் வாஸ்தவமான ஸாதுவையும் கபடமான ஸாதுவையும் இம்சை அவதூறு இவைகளின் மூலமாய் அறியலாம் என்று சொல்லப்படுவதால் கவனிப்பு:—பரமத சாதுக்களாவது குருக்களாவது தன்னிடத்தில் வருகிறவர்களை புறக்கணித்து அவதூறுபேசி இம்சித்து தள்ளுவார்கள். இவர்கள் கபடமானவர்கள். கிறிஸ்து பகவான் வாஸ்தவமான சாதுவும் சற்குருவுமானவரானபடியால் யாவரையும் ஏற்றுக்கொள்ளுகிறார்.



னிருதயத்தில் இடங்கொடு என்று சொல்லுகிறார். மனிதராய்ப் பிறந்தவர்கள் தங்கள் இருதயங்களில்வசிக்க இடங்கொடுங்களென்று நமது ரட்சகர் முதலாவது நமது இருதயத்தைத் தனக்குச்சொந்தமாகக்கொடுவென்று கேட்கிறார்.

பரிசுத்த ஆவியானவரை நாம் காணமுடியாது. அவர் நம்மைக் கண்டுகொள்வார். அத்தன்மையாய் யோவான்ஸ்நானகன் அவரை நோக்கி நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். நமது ரட்சகரே தெரிந்துகொள்வாரேதவிர யோவானால் தெரிந்துகொள்ள முடியாது. இப்பொழுது இடங்கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது ஞானம்தோன்றி தன்னிருதயத்தில் இடங்கொடுத்தான். ஆகையினாலே நம்மைநாமே வஞ்சிக்கப்பட்டபடியால் பாவத்தை அறிக்கையிட்டு நமது இருதய வாசலை நன்றாய் நமது ரக்ஷகரிடம் ஒப்புக்கொடுத்து பரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். நீதிக்கு இடம் கொடுக்கவேண்டும். சாத்தானும் இடம்வேண்டுமென்று தந்திரமாய் ஏமாற்றி ஆதாமையும் ஏவாளையும் கெடுத்ததுபோல வேறு விஷயங்களுக்குத் தடைசெய்து சாத்தானை ஜெயித்துக்கொள்ள உங்களால் முடியாதென்று ரட்சகர் இருதயத்தில் வாசஞ்செய்து ஜெயிக்கிறேனென்று ரட்சகர் பாவிகளாகிய நம்மை இடங்கொடென்று கேட்கிறார். பிரியமானவர்களே நம் இருதயத்தில் வசிக்கக்கூடிய ஏழு அசுத்த ஆவிகளான பொல்லாத துர்க்குணமிருகங்களிருக்கின்றன. அவைகளின் குணம் என்னவெனில் 1. சிம்மகுணம். மேட்டிமை. 2. நரியின் குணம். தந்திரம், ஏமாற்றல். 3. சர்ப்பத்தின் குணம். பொறாமை, துர்ப்போதனை. 4. எலியின்குணம். களவு, சோம்பல், பொருளாசை. 5. நாயின் குணம். அசுத்தம்ளோபம். தான் தின்றதைக் கக்கித் தின்பதுபோல், தாங்கள் விட்டுவிட்ட பொல்லாத துர்க்குணங்களை பின்னும் சேர்த்துக்கொள்தல். 6. கழுகின் குணம். பிணத்தின் வாசனை அறிவதுபோல் தூரச்செய்தி தெரிந்து செல்வதாம். 7. யானையின் குணம். மதம், விகாரம், மாம்ச இச்சை என்பவைகளாம். இவைகளை நம்மால் ஜெயிக்கமுடியாது. நம்முடைய அருமை ரட்சகர் தம்முடைய

தேவசர்வாயுதத்தினால் ஜெயித்து ஜெயவேந்தராய் நம்முடைய இருதயத்தில் பிரவேசிக்க இடங்கொடு என்று ஞானஸ்நானத்தைப்பற்றி கேட்கிறார். பாவிகளாகிய நாம் நம்முடைய துர்க்குணத்தில் இருதயத்தைச்செலுத்தாமல் நமது ரட்சகரிடம் ஒப்புக்கொடுத்து அவரைப்பின்பற்றிச் செல்லுவோமாக. இருதயமென்றால் இருவகையுள்ளது. நற்செய்கைக்கும் இடமுள்ளதுதான். துற்செய்கைக்கும் இடமுள்ளதுதான். சாத்தான் தன் பரிவாரங்களின் பலத்தால் லேசாகக்களைகளை விதைத்துவிடுகிறான். ஆதலால் நமது இருதயம் பாழ்நிலமாகிவிடுகிறது. அதை அறிந்து நாம் எச்சரிக்கையாயிருந்து விழிப்புள்ள விசுவாசத்தோடு நமது அருமை ரட்சகரைத் துதிப்போமாக.

---

## ஜெபம்.

---

மகா அதிசயங்களை நடத்துகிற இரக்கமுள்ள சர்வ வல்லமையுள்ள பிதாவே, உம்முடைய கிருபைக்காக நாங்கள்கெஞ்சுகிறோம் எங்களுடைய செய்கை இன்னதென்றறியாமல்செய்து பாவத்துக்குள் சிக்கிக்கொள்கிறோம். பிதாவே எங்களுக்கு இரங்கும். இப்போது நாங்கள் மாய்கை என்ற சர்ப்பத்தினால் கடியுண்டு எங்கள் இருதயத்தில் விஷப்பத்துக்கள் நிறைந்த அசுத்தமுள்ளவர்களாய் ஜீவிக்கிறோம். சுவாமி எங்களை நல்வழியில் நடத்தும்படி மன்றாடுகிறோம். பிதாவே உமது கிருபையால் நாங்கள் நல்ல ஞானதீபமென்ற வெளிச்சத்தைக்கண்டோம். அவருடைய மகிமையாலே பாவிகளாகிய எங்களை ரட்சிக்கும்பொருட்டு உமது குமாரனாகிய ஏசுக்கிறிஸ்துநாதர் உலகத்தில்வந்து எங்களுக்காகப் பாடுபட்டு இரத்தம் சிந்தினார். அந்த ரத்தத்தினால் எங்கள் விஷப்பத்துக்களை கழுவி எங்களிருதயத்தைச் சுத்திகரித்து சாத்தானால் விதைக்கப்பட்ட களைகளை வேரறப் பிடுங்கிப் பரிசுத்தமாக்கி எங்களை இரட்சிக்கவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் இதை மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.



## 2-வது பிரசங்கம்.

## சீஷர்களை அழைத்தது.

---

நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துநாதர் நம்முடைய பாவங்களைப்போக்க இருதயத்தில் வசிக்கிறதாகச் சொன்னதினிமித்தமாக தனக்கு சீஷர்கள் வேண்டுமென்று திருவுளம்பற்றி என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். பரி. மத் 4: 19. கடைசிபாகம். உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு அவருக்குப்பின் சென்றார்கள். பரி. மத் 4: 20.

இப்போது இரண்டு சீஷர்கள் தங்கள் வலைகளை விட்டுவிட்டு உடனே இருதயசுத்தமுள்ளவர்களானதைப் பார்க்கிறோம். இதற்குப்பின் வேறே இரண்டு சீஷர்களை அழைக்கிறார். உடனே அவர்கள் தங்கள் தகப்பனையும் படவையும் விட்டுவிட்டு அவருக்குப்பின் சென்றார்கள். பரி. மத் 4: 21, 22.

பிரியமானவர்களே இந்தஇரண்டுசீஷர்களும் தங்கள் தகப்பனை விட்டு நமது இரட்சகரிடம்வந்தது எவ்வளவு அருமையானதென்று பாருங்கள். தங்களைப்பெற்று வளர்த்த தகப்பனை பெரிதாக எண்ணாமல் நமது இரட்சகரிடம் இவர்கள் விசுவாசம் வைத்திருப்பதையும் இவர்கள் இருதயம் நல்ல கனிகளைத்தருகிற திராட்சச்செடிக்கு ஒப்பாயிருக்கிறதல்லவா. இவர்கள் இதற்கு முன்பாக நமது இரட்சகரைத் தெரிந்துகொண்டவர்களல்ல. ஏனெனில் இவர்கள் மனித தத்துவமுள்ளவர்கள். நமது ரட்சகரோ தேவ தத்துவமுள்ளவர். ஆனபடியால் சீஷர்களுடைய இருதயத்தைத்தெரிந்து அழைத்துக்கொண்டார். இப்போது உலகத்தில் சகல ஜாதியாருக்கும் குருக்கள் என்று ஏற்பட்டவர்கள் சீஷர்களுக்குச் சம்பளங்கொடுத்துத்தான் சேர்க்கவேண்டுமேயொழிய வேறில்லை. நமது இரட்சகரிடம் சேர்ந்தால் அநேகமாயிரம் தங்கரணபங்களைப் பார்க்கிலும் பரி மத் 5: அதிகாரத்தில் தமது வாயைத்திறந்து திருவாக்கருளிய வாக்யங்களைப் பின்பற்றி தமது சீஷர்கள் நல்ல பங்கு பெறத்தக்கவர்களா

கும்படி என்பின்னே வாருங்களென்று சொன்னார். அருள்நாதருடைய திருவசனத்தினால் சீஷர்கள் உடனே பின்சென்றார்கள். உலகத்திலுள்ள சகலமனுப்புத்திரரையுமென்பின்னே வாருங்களென்று அழைக்கிறார். இந்தபரபரமஅழைப்பினால் நம்முடைய பாவங்கள் யாவும் மன்னிக்கப்பட்டு இருதய சுத்தம் உண்டாக்கி நம்மைச் சேர்த்துக்கொள்வார். நாமும் ரட்சகருடைய திருவாக்கியங்களைக் கவனித்து நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதையானது நன்றாய்ப் பயிராகி ஒன்றுக்கு அறுபதாகவும் நூறாகவும் பலன் கொடுத்தது போல நாமும் நல்ல பலனைக்கொடுக்க இயேசு ரட்சகருடைய அவதார மகிமையை துதிக்க முயலுவோமாக.

---

## ஜெபம்.

எங்கள் ஜீவனின் அதிபதியும் மகிமையின் ராஜாவுமாகிய ஆண்டவரே, எண்ணிறந்த சகல ஜீவஜெந்துக்களையும் உமதுவல்லமையின் கரத்தால் படைத்த நித்தியதேவனே உமதுநேசகுமாரனை மனுஷராகிய பாவிகள்மேல் அன்புவைத்து இந்தபூமியில்தோன்றச் செய்தீரே. சுவாமி நாங்கள் துர்க்குண துர்ச்செய்கைகளால் நிறைந்து பாவிகளாய் ஜீவிக்கிறோம். எங்கள்மேல் கிருபைவைத்து நல்வழியில் நடத்தியருளும். சுவாமி உம்முடைய குமாரனுடைய அழைப்புக்கு எங்களுடைய செவிகளைத் திறந்து எங்களுக்கும் மற்றெல்லாமனிதருக்கும் நல்லபங்குகிடைத்து அனுபவிக்கும்படியாய் எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்கிறேன் சுவாமி. ஆமென்.

---

## 3-வது பிரசங்கம்.
## புலால் இச்சை நீக்கல்.

கொலைசெய்யாதிருப்பாயாக என்பதும் கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். பரி.மத் 5:21.



விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். பரி. சுத்தமத்தேயு 2:27 நமது அருமை ரட்சகர் இவ்விரண்டு கற்பனைகளை முக்கியமாக இவ்விடத்தில் தமது சீஷருக்கும் மற்றெல்லாருக்கும் பொதுவாக தெளிவாய் உபதேசித்திருக்கிறார். இந்த ஞானிகளில் ஒருவராகிய நாயனார் இந்த வாக்கியத்தை நன்றாய்த் தெரிந்து சொல்லியிருக்கிறார். அதாவது "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்று சொல்லியிருக்கிறார். இதனுடைய தார்ப்பரியம சிலர் சொல்வது என்னவென்றால் ஜீவன்களை எவ்வகை உயிர்வதை செய்யாமலும் புலாலைச் சாப்பிடாமலும் இருப்பார்களேயாகில் எல்லா உயிர்களும் தொழும்என்பது அநேகருடைய கருத்து. இது உலகார்த்தம். ஞானார்த்தம் வேறு. ஒருவன் எந்தப்பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான். பலவீனனோ மரக்கறிகளை மாத்திரம் புசிக்கிறான். ரோமர் 14: 2-ல் புசிக்கிறவன் புசியாதவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக. புசியாதவனும் புசிக்கிறவனை குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக. தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே. ரோமர் 14:3 "கொல்லான் புலாலைமறுத்தானைக்கைகூப்பி எல்லா உயிருந்தொழு" மென்பது இதன் ஞானார்த்தம். கொல்லான் புலால் என்பது பூமியிலே அநேகவகையான மாமிசங்கள் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருப்பதால் ஒருமனிதன் ஆட்டையாவது மாட்டையாவது, கோழியையாவது திருடிக் கொண்டுபோய்க் கொன்று தின்றுவிட்டாலும் அல்லது புதைத்துவிட்டாலுஞ் சரி அவனை ரூபகாரமாகக் கண்டுபிடித்தால் அவனை நீதிஸ்தலத்தில் ஒப்புக்கொடுத்து அவன் அந்த குற்றத்தைத்தானே ஒப்புக்கொண்டால் அவன் திருட்டுக்குப் பாத்திரவாதியா அல்லது கொலைக்குப்பாத்திரவாதியா என்று விசாரித்து அவன் திருடினதற்கு தண்டிப்பார்கள். கொலைசெய்தானென்ற குற்றமல்ல களவுசெய்தானென்ற குற்றமே. இது நிற்க, ஒரு மனிதன் மற்றொரு மனிதனை மயக்கி ஏமாற்றியழைத்துக் கொண்டுபோய்க் கொன்று தெரியாமல் புதைத்துவிட்டு அவனுடைய பொருள்களையுந் திருடிக்கொண்டு ஒளித்திருந்து பிற்பாடு அக்கொலையும் களவும் கண்டுபிடிக்கப்பட்டு அவன் தான்செய்தது மெய்யென்று ஒப்புக்கொண்டால் அவன் திருடினதற்கு குற்ற

வாளியா அல்லது கொலை செய்தானென்ற குற்றவாளியா என்று விசாரித்து இந்த இரண்டு குற்றங்களுக்கும் கொலையே முக்கியமாய்ச் செய்தானென்று தீர்ப்பாகும். கொலைசெய்தவன் கொலை தீர்ப்புப் பெறக்கடவன். இப்படியாக மனிதனுடைய மாமிசம் கொல்லான் புலாலென்பது, மனிதனுடைய மாமிசத்தில் இரண்டுவகையுண்டு. அதாவது ஆண், பெண் என்ற இரண்டு வகையில் ஒன்றையொன்று இச்சித்து விபசாரஞ் செய்து மாமிச இச்சையை மறக்கவில்லை. இந்தக் கொல்லான் புலாலை மறுத்தவர் நமது ரட்சகரேதவிர வேறு எந்த ஞானிகளும் தபசிகளும் புலாலிச்சை யுடையவர்களென்று அவரவர்களின் சரித்திரத்தில் தெளிவாகும். ஆண்டவராகிய இரட்சகரை எல்லா உயிர்களும் தொழும்.

பிரியமானவர்களே, மனிதர்களாய்ப் பிறந்தவர்களில் மாமிச இச்சையில்லாதவர்கள் ஒருவரும் இல்லை. நமது அருமை இயேசு ரட்சகர் மனித தத்துவமுள்ளவராய்ப் பிறந்தாலும் மாமிச இச்சை யுடையவரல்ல. ஆதலால் தேவதத்துவ முன்னவரானபடியால் இந்தக்கொல்லான் புலாலென்ற மாமிச இச்சையில் பிரவேசிக்கவில்லை. ஆதலால் நமது இயேசு ரட்சகரை தெய்வமென்று போகர் சப்தகாண்டம் மூன்றாம் அதிகாரம் 226ம் செய்யுளில் கடவுளாம் ஏசுவின்றன் காக்ஷிகண்டேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாமிச இச்சையின் விபரம் என்னவெனில், ஒரு ஸ்திரீயானவள் எவ்வகை ஜாதியானாலும்சரி நல்ல மேனியும் மாம்சபுஷ்டியும் அழகும் ரூபமும்உடைய ஸ்திரீயைப்பார்த்து மோகிக்கிறதுமல்லாமல் அவன் அவளைக்காணாதவனிடத்தில் அவ்விஸ்திரீயைப்பற்றி வர்ணித்துச் சொல்வானாகில் காணாதவனும் இச்சிக்கிறான். இது தான் மாமிச இச்சை. முன்னம் அந்த ஸ்திரீயைப் பார்த்தவன் கொஞ்சக்காலம் கழித்துப்பார்க்கும்போது மேனிகுறைவாகி புஷ்டியில்லாமல் ரூபங்கெட்டு அழகில்லாமல் தன்மேனியில் மாமிசம் அற்றுப்போயிருக்கக்கண்டால் அவளை இச்சிக்கமாட்டான். மற்றவர்களிடத்திலும் வர்ணித்துச் சொல்லவு மாட்டான். ஆதலால் இச்சை என்பதும் விபசாரம் என்பதும் மாமிசஇச்சையெனப்படும். இவைகளைப் புலால் மறுத்தாலே என்பது மாமிச இச்சை



அற்றவரென்பதாம். இந்த அதிகாரம் பரிசுத்த ஆவியானவருக்கே யல்லாது மற்றெவருக்கும் இல்லை. ஆதலால் நமது இயேசுரட்சகர்பிதா, குமாரன், பரிசுத்தாவி யென்பதில் யாதொரு ஐயமில்லை. ஆகையால் அவரையே எல்லா உயிருந்தொழும். இந்துக்கள் தெய்வமாகக்கொண்ட * திரிமூர்த்திகளும் மாம்ச இச்சை யுடையவர்களென்று அவர்கள் சரித்திரங்கள் மூலமாய்த்தெரிகிறது. ஆதலால் பிரியமானவர்களே நாயனார் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள். "கற்றதனாலாயபயனென் கொல்வாலறிவன் நற்றாடொழாஅரெனின்" என்பதால் இதன் கருத்து, பழைய ஏற்பாடு பிரசங்கியின் புஸ்தகம் பன்னிரண்டாம் அதிகாரம் முதலாவது வாக்கியம். "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப்பிரியமானவைகள் அல்ல என்று சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும் நீ உன் வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" என்பதாம். பிரசங்கி 12;12ம் வாக்கியம் கடைசி பாகத்தில் அதிகப் படிப்பு உடலுக்கு இளைப்பு என்று சொல்லியிருக்கிறது. பிரியமானவர்களே அநேகம் கல்வி கற்றதனால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. எப்படியும்அதன் பிரயோஜனத்தை அறியவேண்டுமென்பதுதான் கற்றகல்வியின் பிரயோஜனம். அநேகர் சொல்லிக்கொள்ளுகிறதாவது அவரவர்கள் தாங்கள் கைக்கொண்ட மார்க்கத்தை எழுதிவைத்திருப்பார்கள். இவைகளை நம்புவதில் யாதொருபயனுமில்லை. கடவுள் என்பது ஒரு மாயை. இவைகளின் விவகாரம் தீர்க்க என்முன்பாக வந்தால் நான் அப்போது பேசிக்கொள்வேன் என்று மறுத்துவிட்டு கருத்தை அறியாமல், எழுத்தை மட்டும் படித்துவிட்டு அதிலுள்ள அலங்காரமான கதையைப் பிறரிடஞ்சொல்லித் தங்கள் மனம்போன போக்கெல்லாம் நடந்து ஜீவிக்கிறார்கள். இவர்கள் கற்றும் கல்லாதவரென்று சொல்லத்தகும். எப்படியாவது சகலவிதத்திலும் நல்

---

ஒத்தேறுமுருவமில்லாப் பிரமமொன்றுமேயொழிய வுருவமுள்ளார், எத்தேவராயினுமோர் பூங்கலையால் தம்போதம் எல்லாம்நீங்கி மத்தேறி யுடைதயிர்போல் மனஞ்சுழன்று செயல் மறந்து மடவாராசைப் பித்தேறி விதமுறைத்தப்போதையர்க்கும் பேதையராய்ப்பின் செல்வாரால். (இது பிரபோத சந்திரோதயம்.)

வழிகாட்டிய சன்மார்க்கப் புஸ்தகங்களைப் படித்துக்கொள்ளுங்களென்று உபதேசிக்கிறவர்களை இவர்கள் தங்கள் மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்று பரிகாசமாகப்பேசித் தாங்கள் கற்றறிந்த ஒரு சரித்திரத்தைச்சொல்லி நாங்கள் நம்புகிற கடவுள் இப்பேர்ப்பட்ட அற்புதங்களைச்செய்து வல்லமையால் அநேகமான துஷ்டர்களைச் சங்காரஞ்செய்து சிஷ்டர்களைக்காப்பாற்றி பூமியை நிலைநிறுத்திய சரித்திரம் தொன்றுதொட்டு நாங்களறிந்து அப்படியே நடக்கிறோமென்று வீணான வார்த்தைகளைப்பேசி மறுத்துவிடுவது சகஜம். இதுதானா கற்றதனால் பயனில்லையென்பது. பிரியமானவர்களே சற்று கவனியுங்கள். நான் சிறுவனாயிருந்தபோது கொஞ்சம் வாசிக்கக் கற்றுக்கொண்டேன். அப்போது என்தந்தை எனக்கு ஒரு கவியைக் கற்றுக்கொடுத்தார் அதாவது, "எழுதரிதுமுன்னம் எழுதிய பின்னத்தைப் பழுதறவாசிப்பதரிது, பண்பாய் முழுதுமதைக் கற்பரிது நிற்பயனைக் காண்பரிது கண்டக்கால் நிற்பரிதுதானன்னிலை" என்ற பிரகாரம் எழுதி பழுதற வாசித்துக்கற்று அதன் பயனை அறிந்துகொண்டாலும் அதிலுள்ள விஷயம் நல்வினை தீவினை என்பதைத் தெரிந்தாலும் தீவினையைத்தள்ளி நல்வினையைப்பற்றி அதைக்கிரகித்து நிலைநிற்பதுதான் மெய்யான நிலைமை. ஆதலால் அந்த மெய்யான பதவியை யடையும்பொருட்டு பாவிகளாகிய நாம் கெட்டுப்போகாமல் நமது இயேசுரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார். பலியையல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்றுபோய்க் கற்றுக்கொள்ளுங்கள். நீதிமான்களை அல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். பரி. மத் 9; 13. பிரியமானவர்களே இப்போது மனிதர்களாய்ப் பிறந்தவர்களில் ஒருவராகிலும் நீதிமான்கள் உண்டோ. இல்லையாதலால் மனிதர்மேல் இரக்கத்தையே விரும்புகிறேனென்று நமது ரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார். சகோதரரே, ஒரு மனிதனாவது பாவியாகி நரகத்துக்குப்போவது ஆண்டவருடைய சித்தமல்ல. ஆகலால் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். பரி. மத் 5: 8ல் ரட்சகர் கூறியிருக்கிறார். நம்முடைய பாவகுற்றத்திற்கு பலியினால் பாவத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாது. ஆகலால்,



நமது அருமையான ஆத்துமாவைக் கொல்லாமலும் சரீரத்தையும் ஆத்துமாவையும் நரகத்தில் தள்ளாமலும் ரட்சிக்கும்படியாய்த் திருவுளங்கொண்ட இயேசுரட்சகரின் அவதாரமகிமையைத்துதிப்போமாக.

## ஜெபம்.

ஆண்டவரே இந்த நாளில் நாங்கள் பாவஞ்செய்யாதபடி எங்களை ஆண்டு நடத்திடும். சுவாமி நாங்கள் பாவிகள் எங்கள் பாவங்களை எண்ணிமுடியாது. ஆண்டவரே நாங்கள் அந்தகாரமான பாவபாசத்தால் கட்டுண்டு மயங்குகிறோம். சுவாமி எங்கள் அக்கிரமங்களுக்குத்தக்கதாகத்தண்டியாமல் எங்களுக்கு பிதாவே உம்முடைய நீடியசாந்தத்தையருளும். தேவரீர் எங்களுடைய பாவத்தைக் குறித்து உம்முடைய குமார அவதாரத்தை உலகத்தில் அனுப்பி எங்களுக்காகப் பல பாடுகள்பட்டு ரத்தஞ்சிந்தி பலிசெலுத்திய எங்கள் ரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாக மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்கிறேன். சுவாமி, ஆமென்.

## 4-வது பிரசங்கம் பாவிகளைத்தன்னிடம் அழைத்தல்.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்களெல்லாரும்என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். என்நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்நுகம் மெதுவாயும் என்சுமை லகுவாயும் இருக்கிறது என்றார். பரிமத். 11: 28—30. பிரியமானவர்களே, நமது அருமை இயேசு ரட்சகர் மனதுருகித்திருவுளம் பற்றியதைக்கவனியுங்கள். வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே என்று சொல்கிறார். மனுஷராகிய நாம் சுமக்கக்கூடிய பாரம்கொஞ்சதூரம் போனவுடன் பாரமான சுமையினால் கழுத்து பொறுக்காததினால் அச்சுமையைக் கீழேயிறக்கிவைத்து பிற்பாடு அச்சுமையைத்தூக்கிச்சுமந்து தான் கொண்டுபோய்ச்சேர்க்குமிடத்தில் இறக்கிவிடுகிறோம். அதனால்

இச்சுமை பாரமான சுமையல்ல. நாம் வருத்தப்பட்டு தேடிக்கொள்ளுகிற பாவம்தான் அதிகபாரமானசுமை. இந்தச்சுமையான பாவம் எப்படியாவது கொஞ்சங் கொஞ்சமாய்ச்சேர்ந்து பாரமாகிவிடும். அதுவந்து சேரும்வகையைக் கவனிக்கவும். ஒரு மனிதன் தான் பாவியென்று ஒருவரும் சொல்லாமல் தருமஞ்செய்வேனென்று யோசித்துப் பாதைபோராமாக இந்த ஊருக்கும் அடுத்த ஊருக்கும் ரொம்பதூரமாயிருப்பதால் இவ்விரண்டிற்கும் நடுவில் ஒருகிணறு வெட்டினால் வழியாக்கம்போகிறவர்கள் தண்ணீர் சாப்பிட்டு இளைப்பாறுவார்கள் இதுவுந்தவிர ஒருதோப்பு உண்டாக்கி மடங்கட்டி வைத்தால் மிகவும் விசேஷமென்று வருத்தப்பட்டு இவைகளையெல்லாம் செய்துமுடித்த பின் அம்மனிதன் இதனால் தன் பாவங்களையெல்லாம் தீர்த்துவிட்டேன் என்று எண்ணி இஷ்டப்படி நடந்துகொள்கிறான் ஆனால் இதனால் பாவம் தீராது. அதிகபாவமே வந்துசேருகிறது. எப்படியெனில், அநேகர்போய்த்தங்குவதுமிருடர்களுக்குத்தெரிவதால் அவர்களும் அங்கேபதுங்கியிருந்து பிரயாணிகளை அடித்துத்தொந்தரவு செய்துவருவதுந்தவிர, ஒருவிட்டில் ஒருவனிரிபானவனுக்குக் கொஞ்சம் சண்டைச்சச்சரவு நேரிட்டால் கிடசென்று அக்கிணற்றிற்குப்போய் விழுந்து மடிந்துவிடுகிறான் இதுவுமல்லாமல் அவ்விடத்தில் அநேகதுன்மார்க்கரும் விபசாரக்காரருக்கும் தங்க முக்கிய இடமாகிறது. இதனால் முன் இவைகளைச்செய்தமனிதனுக்கு இந்தப்பாவங்களெல்லாம் ஆதிகாரணமாகி வருத்தப்பட்டு பாவத்தைச்சேர்த்துக்கொள்கிறான் ஆதலால் இப்பேர்ப்பட்ட தர்மங்களும் இன்னும்வேறு அன்னதானம் செய்கிறேன் என்று பிராமணபோஜனம் செய்வதால் அநேக ஏழைஜனங்களுக்கு அன்னங்கொடாமல் பட்டினிபோட்டு கஷ்டப் பின்று கொழுத்தவர்களுக்கு அன்னமும் தானமும் கொடுத்து பாவபாரத்தைச் சேர்த்துக்கொள்ளுகிறபடியால் இவர்கள் நிலைமையைப் பார்க்கும்போது, ஒருமனிதன் தனக்குப்போதுமான பணஞ்சேர வழித்து ஒருதரப்பட்டு வீடு கட்டிமுடித்து ஜன்னல்கள், வாசல்கள் எல்லாவற்றிற்கும் கதவுபோட்டு எல்லாம் முடித்து அநேகவிலை [illegible] பொருள்களை வீட்டிற்குள் வைத்துத்தாழிடாமல்கதவு



களைச்சாற்றித் தூங்குவானேயாகில் அதை அறிந்த திருடர்கள் மெதுவாகக்கதவுகளைத் திறந்து சந்தடிசெய்யாமல் சாமான்களைத் திருடிக்கொண்டுபோய்விடுவானல்லவா இது எதனாலென்றால்தாழ்ப்பாளாகிய பூட்டு இல்லாமையினாலே. ஆகையால் அதைப்போல் வருத்தப்பட்டபாரம் நாம் செய்தகிரியைகளில் தருமங்களில் சாத்தானுக்கு இடமுண்டாகி லேசாய் இருதயத்துள்சென்று மெதுவாக நல்விஷயங்களைத் திருடிக்கொண்டுபோய்விடுகிறான். நமது அருள்நாதருடைய உபதேசம் நமது இருதயத்துக்குள் சாத்தான் புகக்கூடாத பூட்டாகும். அவருடைய மூத்திரியை தனக்குநுகமாக ஏற்றுக்கொண்டு அவரிடத்தில் உபதேசம் கற்றுக்கொண்டால் பாவிகளாகிய நமக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் ஆகையால் வருத்தப்பட்டு நாம்சேர்த்துக்கொண்ட பாவமான பாரம் நம்மைவிட்டு நீங்கும் இதற்காகவே நமது ரட்சகர் என்னிடத்தில் வாருங்களென்றழைக்கிறார் நாம் இந்த அழைப்புக்குச் செவிகொடாமற்போனால் நரகத்தில் தள்ளப்பட்டு வேதனையடையவேண்டியதேயொழிய வேறில்லை. ஆகையால் நமது ஆத்துமாவையும்சரீரத்தையும்நரகத்தில் தள்ளப்பட்டு வேதனையடையவேண்டியதே யொழியவேறில்லை ஆகையால் நமது ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திற்கு ஆளாக்காமல் இந்த பரம அழைப்புக்குச் செவிகொடுத்து மனந்திரும்பி குணப்பட்டு பரலோகராஜ்யத்தில் பிரவேசித்து நித்திய ஜீவனை அடையும்படியாய் நமது இயேசு ரட்சகரின் அன்பின் அழைப்பைத் துதிப்போமாக.

## ஜெபம்.

பாவிதன்பாவத்தைவிட்டு மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிற எங்கள் அன்பின் பிதாவே, உம்முடைய இரக்கத்தால் பூமிஎங்குமுள்ள சகல ஆத்துமாக்களும் ஜீவித்துவருகின்றன அவைகளின் மத்தியில் கொடிய பாவிகளாகிய எங்களை உமது குமாரனுடைய அவதாரமகிமையைக் காணச்செய்தீரே சுவாமி உமக்கே ஸ்தோத்திரம் ஆகையால் உமது அன்புக்கும் [illegible] நாங்கள் அறியாமல் அகந்தை ஆசையினு[illegible]

221337

னும் உமது நாமத்திற்கு அபாத்திராரப்போனோம். சுவாமி, நாங்கள் அபாத்திராயிருந்தாலும் எங்கள் மேல் மனதுருகி நித்திய ஜீவனை அடையத்தக்கதாய் நல்வழியை ஏற்படுத்த உம்முடைய குமாரன் அவதாரத்தால் எங்களுக்காகப் பாடுபட்டு ரத்தம் சிந்தி எங்கள் பாவச்சுமையைச் சுமந்து தீர்த்த தேவாட்டுக்குட்டியான எங்கள் ரட்சகரான இயேசுகிறிஸ்துவின் மூலமாய் மனத்தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். சுவாமி. ஆமென்.

## 5-வது பிரசங்கம் சங்கீதம் 69: 11.
## கர்த்தர் பழமொழியால் விளங்குகிறார்.

சேனைகளின் கர்த்தராகிய தேவனுடைய பிள்ளைகளே, இப்பொழுது ஒரு முக்கியமான ஒரு காரியத்தைப்பற்றிய சங்கதியைக் கவனிக்கவேண்டும். அது யாதெனில் உலகத்தில் சில ஜனங்கள் இயேசுகிறிஸ்து தேவகுமாரனல்ல. அவருடைய மார்க்கத்தை மிகவும் தெளிவற்ற மார்க்கமென்று புறக்கணித்து கவனமில்லாமல் அதைப்படிப்பதில்லை. அதைப்பற்றி ஆலோசிப்பதுமில்லை. ஆதலால் நமது இயேசுகிறிஸ்து நாதர் மெய்யான தேவகுமாரனென்பதற்குச் சந்தேகமில்லை. அவருடைய மார்க்கம் சன்மார்க்கமென்பதற்கு யாதொரு தடையுமில்லை. இது எதனால் தெரியவருகிறதென்றால் நாட்டுப்பழமொழியால் நன்றாய் விளக்கிக்காட்டுகிறது. அதாவது எனக்குத் தெரிந்தவரையில் எடுத்துக் காட்டுகிறேன். மனிதர் தங்கள் பிள்ளைகள், தங்களுக்காவது பெரியோருக்காவது அல்லது உபாத்தியாயருக்காவது கீழ்ப்படியாமலும் அல்லது கற்றுக்கொடுத்த உத்தம போதனையை மறந்து தவறுதல் செய்து அதை விட்டுவிட்டு வேறு விதமாக தன் இஷ்டப்படி செய்வார்களேயாகில், அவர்களைப் பெற்றோராவது பெரியோர் உபாத்தியாயராவது நீ செய்வது கிறிஸ்தானுக்கு மறுத்தான் செய்கிறாயென்று அவனைக் கடிந்துகொள்வார்கள். இது பலருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒருவரிடத்தி[illegible]ள்ளாமலே இதைத் தானாக பழமொழியாகவே சொல்லிவருவதால் இதை தேவ வாக்கென்பதற்குச் சந்தேகமில்லை.



அருமையானவர்களே கிறிஸ்தானுக்கு மறுத்தான் செய்வது என்றால் நமது ரட்சகராகிய கிறிஸ்துநாதர் உபதேசித்ததை மறுத்துவிட்டு வேறாக ஒன்றை மனதில் செலுத்தி விக்ரஹ வணக்கத்தைச் செய்வதற்கு வழிகாட்டினவன் எவனோ அவனுக்கே யிந்தப் பழமொழியாகையால் கிறிஸ்தானுக்கு மறுத்தான் என்பதில் நன்றாக சன்மார்க்கத்தைக் காட்டுகிறதென்று போதிக்கிறதல்லவா. மற்ற மார்க்கமெல்லாம் அவருடைய மார்க்கத்தை மறுத்ததாகக் காட்டுகிறதல்லவா மற்றமார்க்கமெல்லாம் எப்போது உண்டானதென்றால் கிறிஸ்து பிறந்தபின் 325-வது ஆண்டில் சாதாரணஜனங்களிலிருந்து குருக்களென்னும் வகுப்பு பிரிக்கப்பட்டு ஸ்தாபகமானது. பிற்பாடு 529-ம் வருஷத்திலே குருக்களடங்கிய கூட்டம் தாங்கள் மாத்திரம் தேவனைவணங்கவேண்டுமென்றும் திருச்சபையென்றும் லௌகிக அதிகாரம்கட்டிக்கொண்டு தங்களுடைய அநீதியானஏற்பாடுகளுக்கு இணங்காதவர்களை அவர்களுக்கு விரோதமாகச் சேனைகளைத் திரட்டிக்கொண்டு யுத்தஞ் செய்யவும் அழிக்கவுந் தொடங்கி அவர்களுடைய சத்தியவேதத்தை சாதாரண ஜனங்களிடத்திலிருந்து பிடுங்கிப்போட்டுத் தங்கள் சொந்தப பாரம்பரையென்ற புராணங்களையும் இதிகாசங்களையும் புகட்டி அவைகளை நம்பவும் அனுசரிக்கவும் கட்டாயப்படுத்தி வந்தார்கள். மேற்சொன்ன வருஷத்தில் மார்க்கம் பேதமாகிவிட்டபடியால் நமது இயேசுகிறிஸ்து நாதருடைய உபதேசங்கள் தவறி வேறுபாடானதால் கிருஸ்தானுக்கு மறுத்தான் என்ற பழமொழியுண்டானது. நமது அருமை இயேசு ரட்சகரை தேவகுமாரனென்று விளங்கும்படியாயும் யாவரும் அறிந்துகொள்ளும்படியாயும் இப்பழமொழியுண்டாயிற்று. ஆதலால் உலகத்து ஜனங்கள் இதை அறிந்தும் இதன் உட்கருத்து தெரியாமல் குணப்படாமல் மயங்குகிறார்கள். இப்பழமொழியின் கருத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டால் உடனே குணப்பட்டு ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவ ஜீவியமாய் ஜீவித்து நித்ய ஜீவனை அடைவார்கள். இது நிச்சயம்.

### ஜெபம்.

எங்களுக்கல்லகர்த்தாவே எங்களுக்கல்ல. உமதுநாமத்திற்கே மகிமை வரப்பண்ணும். இந்த மாய்கை நிறைந்த பிரபஞ்சத்தில்

கேடுள்ளவர்களாகிய எங்களைக் காப்பதற்கும் அழிப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் உம்மாலே ஆகும். சுவாமி நாங்கள் அற்ப விசுவாசிகளென்று எங்களை தூரத்தில் தள்ளிவிடாதேயும். ஆண்டவரே எங்களை நிந்தித்தவர்களையும் பரிகாசம் பண்ணினவர்களையும் இரக்கமாய்ப்பார்த்து அவர்களும் உமது மந்தையில் சேர: அவர்கள் இருதயத்தைத் திறந்து உமது பரிசுத்தாவியால் சிறப்பியருளும். சுவாமி தேவரீர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் திருநாமம் பூண்டு உலகத்தை சீர்திருத்தும்படி மனித அவதாரஞ்செய்து பாவிகளை குணமாக்கி எங்கள் பாவங்களைச் சுமந்து பலியாக ரத்தம் சிந்தி எங்களை ரட்சித்த உமது குமாரனுடைய அன்புக்கும் அளவுண்டோ. இதை நாங்கள் உணர்ந்து எப்பொழுதும் உம்முடைய பிள்ளைகளாக ஜீவிக்க அருள்புரிய எங்கள் ரட்சகரின் திருப்புண்ணியங்கள் மூலமாய்க் கெஞ்சிக்கேட்கிறோம். பிதாவே ஆமென்.

## 6-வது பிரசங்கம்.
## கர்த்தரை உறவு கொண்டாடினது.

---

பிரியமானவர்களே. நமது அருமை இயேசு ரட்சகர் மிகவும் மன்றாடி ஜனங்களுக்குண்டாயிருந்த பசியைத் தீர்க்கவேண்டுமென்று ஆசையினால் அவைகளை என்னிடத்தில் கொண்டுவாருங்களென்று சொல்லுகிறார். பரி. மத். 14: 18. சீஷர்கள் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாதருடைய மகிமையை அறிந்திருந்தும் அவிசுவாசத்தால் ஐந்தப்பங்களும் இரண்டு மீன்களுமே யல்லாமல் வேறொன்றும் இல்லை என்றார்கள். ஆகையால் நமது ரட்சகர் ஜீவ அப்பமானபடியால் தம்முடைய மகிமையினால் வசன அப்பங்களை அழைப்பித்தார். அப்படி அழைத்துக் கொடாவிட்டால் உபதேசிப்பதை உணர்ந்துகொள்ளமாட்டார்கள். ஆகையால் ஐந்து அப்பங்களும் அப்பம் ஒன்று ஆயிரம் பேர் திருப்தியாக போஜனம் செய்து மீதம் பன்னிரண்டு கூடைகள் நிரம்பிற்றல்லவா. இத்தனை பேர்களும் ரட்சகரின் உபதேசத்தைப் பின்பற்றி திருப்தியடைந்ததுந் தவிர போஜனத்திலும் பங்கு பெற்று திருப்தியும் சந்தோஷமும் உறவுகொண்டாடினார்கள். அப்போது உலகத்தாருக்கு இதை



மறந்துபோகாமல் ஒரு பழமொழி யுண்டாயிற்று. அதென்னவெனில் உறவுக்கு உண்பது பிடி என்பது. சகல ஜனங்களும் ஒரு காலத்தில் நினைவு கூர்வார்களென்று இப் பழமொழி யுண்டாயிருப்பதால் இதை தேவ வாக்காகப் பற்றிக்கொள்ளுங்கள். பிரியமானவர்களே, நமக்கு புத்தி சித்தம், ஞானம், அறிவு என்பவைகள் உண்டாயிருப்பதால் ஆனால் அவைகள் மிகவும் கொஞ்சமானதால் நாம் சாத்தானுடைய வலைக்குள் சிக்கிக்கொள்கிறோம். ஆனதால் நமதருமை ரட்சகரின் உபதேசங்களைத் திருப்தி செய்வோமானால் அப்பங்கள் எப்படிப் பெருகிற்றோ அப்படியே நமது புத்தி சித்தம், ஞானம், அறிவும் நன்றாய்ப் பெருகி சாத்தானுடைய வலைகளை யறுத்து சிக்குகளை நீக்கிவிடும். ஆகையால் நமது கர்த்தரின் பரிசுத்த பந்தியில் பங்கும் கிடைக்கும். 2. மேலும் நமது ஜீவியத்திலிருந்து நன்மார்க்க போதனைகளைக்கற்று சிறிதளவு ஜீவியத்திலிருப்பவர்களையுங்கூட கெடுப்பதற்கு உலகத்திலே சில ஜனங்களை சாத்தான் லேசாய் ஏமாற்றி தனக்கு அடிமையாக்கிக் கொண்டதால் அந்த அடிமைத்தனத்திலிருந்து நீங்காதவர்கள் நீங்கினவர்களை இகழ்ச்சியாக நினைத்து புத்தி கூறுவதையுங் கேளுங்கள். அவர்கள் கூறுவது, ஏன் இப்படிச் செய்தாய் உன் குலமனைத்திற்கும் வேர் புழுவாயிருக்கிறதுந்தவிர முன்னோர்கள் பெயரையுங்கெடுத்து அவர்கள் அனுசரித்த தெய்வங்களையும் நிந்தித்து அவைகளை வெறுத்துவிட்டபடியால் அக் குலதெய்வங்கள் உன்னை லேசாக விடாது. இப்போதும் நீ செய்வது சரியல்ல. குலதெய்வங்களுடைய கோபாக்கினைக்கு ஆளாகாமல் இப்போதே காணிக்கை யெடுத்து முடிந்து வைத்துவிட்டு ஆலயத்துக்குப் போய் அங்கேயுள்ள குளத்திலாவது, ஆறு, கிணற்றிலாவது எழு தரம் மூழ்கி சுத்தி செய்து உன் முன்னோர் தரித்துக்கொண்டிருந்த பஞ்சாக்ஷரம் அல்லது திருமண் இவைகளைத் தரித்துக்கொண்டு மேலான பக்திக்கேற்ற புராணங்களை வாசித்துக்கொண்டு அந்தணர்களை சிவவாசித்து அவர்களுக்கு தானங்கொடுத்து ஜீவகாலபரியந்தம் இவ்விதமாய் வாழ்நாட்களைக் கழித்து பின் மோட்சஞ் சேரலாமெனக் கூறுவது வழக்கம். இதுவுந்தவிர, அவர்கள் அது அந்நிய மார்க்கம்

அதில் சேர்ந்தால் வேதக்காரனென்று மற்றவர்கள் இகழுவார்களென்று மிகவும் கவலையோடு விசனப்பட்டுக்கொள்வார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்காகவே இயற்கையாய் ஒரு பழமொழி வழங்குகிறது. "நல்லவனைப்போலிருப்பான் சாமதுரோகி" என்பதே இவர்கள் நடவடிக்கைகளைப் பார்த்தால் மிகவுங் கேடுள்ளதாயிருக்கும். இவர்கள் காவிவஸ்திரந் தரித்து கையில் ஜெபமாலை பிடித்து கழுத்தில் உத்திராக்ஷகெண்டி பூண்டு சிரசில் தவமாலையணிந்து உடம்பெல்லாம் பஞ்சாக்ஷரம் பூசிக்கொண்டு அரகர நமசிவாய வென்று எந்நேரமுஞ் சொல்லிக்கொண்டு தபசிகளென்று பேர்பெற்று அநேக துன்மார்க்க வேசிகள், விதவைகள் வீடுகளிலும் சஞ்சாரம் செய்து அவர்களைப் பட்சித்துவிடுகிறார்கள். ஆகையால் இவர்களைப்பெரிய ஜாதிப்பிசாசு பிடித்தவர்களென்று சொல்லத்தகும். இவர்கள் பிடிவாதத்தையும் கடின இருதயத்தையும் இவர்கள் கைக்கொண்ட கொள்கையையும் குணப்படுத்த சிஷர்களால் முடியாததால் நமதருமை ரட்சகர் அவனை என்னிடத்தில் கொண்டு வாருங்களென்று சொல்கிறார். பரி. மத். 17: 17. ஆதலால் குணப்படாதவர்களுக்காக நாம் அவர்களை ரட்சகரிடத்து ஒப்புக்கொடுத்து அவர்களுக்காக உபவாசித்து முழுமனதோடும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் அன்பு கூர்ந்து நமது ரட்சகருடைய அவதார மகிமையைத்துதித்து விசுவாசிப்போமானால் குணப்படாதவர்களுங் கூட குணப்படுவார்கள். இது நாட்டுப் பழமொழியால் தெரியவருகிறது. வருந்தினால் வாராததொன்றுமில்லை, என்பதால் குணப்பட்டு மனந்திரும்பி பிதா குமாரன் பரிசுத்தாவி என்பதின் பொருள்கண்டு ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவ ஜீவியம் ஜீவித்து நித்திய ஜீவனை அடைந்து பரலோகத்தில் வீற்றிருப்பார்கள். இது நிச்சயம் ஆகையால் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாதர் சிஷர்களுக்கு உபத்திரவத்தைக்குறித்து மனம் வேறுபடாமல் இருக்கும்படியாய்த்திருவுளம்பற்றியிருக்கிறதைக் கேளுங்கள். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். பரி. யோவான். 16: 33. ஆகையால் நமது இயேசுகிறிஸ்து நாதர் உலகத்தை ஜெயித்து வெற்றியினால் ஜெயவேந்தராய் வானத்திற்கும் பூமிக்கும் மத்யஸ்தராகி தவிலை



மையைக்காட்டிக்கொடுத்த நமது ரட்சகரின் அவதார உறவின் மகிமையைத் துதிப்போமாக.

## ஜெபம்.

ஐந்தப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்த பிதாவே, பாவிகளாகிய எங்களுக்கு, உம்து பரம மன்னாவைக் கொடுத்து பரலோக ராஜ்யத்துக்குப் பங்காளிகளாக்கியருளும். உமது ஜீவ அப்பத்தை நாங்கள் அனுதினமும் உட்கொண்டு ஆத்தும பெலனடைய அனுக்ரகம் பண்ணியருளும். சுவாமி நாங்கள் உமக்கு சொந்த உறவாகி, நீர் எங்களுக்கு வைத்திருக்கும் பரமகானானைச் சுதந்தரித்துக்கொள்ள உமது திருக்குமாரனை இப்பூலோகத்துக்கு அனுப்பினீரே. அவ்வன்பை நினைத்து நாங்கள் உமக்குச் சொந்தமாகி உம்மோடுகூட என்றைக்கும் வீற்றிருக்க அருள் புரியவேண்டுமென்று உம்மோடும் பரிசுத்த ஆவியோடு ஒரே தெய்வமாக என்றைக்கும் ஜீவித்தரசாளுகிற எங்கள் கர்த்தாகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் மனத்தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறோம். ஆமென்.

## 7-வது பிரசங்கம்.

## பட்டயம்வேண்டுமென்றார்.

இன்று நமக்குப் பிரயோஜனமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய வேதவாக்கியமென்னவெனில், இப்பொழுதே பணப்பையையும் சாமான்பையையும் உடையவன் அவைகளை எடுத்துக்கொள்ளக்கடவன். பட்டயமில்லாதவன் தன்வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன். பரி. லூக் 22 : 36 பிரியமானவர்களே, நமது ரட்சகர் என் நாமத்தினாலே பிதாவைக்கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள்போய் கனிகொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன் என்றார். பரி. யோவான் 15: 16 இப்படி நமது அருமை ரட்சகர் உங்கள்கனி நிலைத்திருக்குமென்று உறுதி

யாய்த் திருவுளம்பற்றியிருக்கிறார். சீஷர்கள் தங்கள் அவிசுவாசத்தினால் இரட்சகருடைய மகிமையை மறந்துவிட்டார்கள். இவர்கள் எண்ணத்தை ரட்சகர் அறிந்துக்கொண்டார். உடனே சீமோனே சீமோனே இதோகோதுமையைச் சுழகினால் புடைப்பதுபோல சாத்தான் உங்களைப் புடைக்க உத்தரவுகேட்டுக்கொண்டான். பரி. லூக் 22. 31. நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார். பரி. லூக். 22: 32 நமது ரட்சகரின் திருவசனத்தைக் கேளுங்கள். உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி உனக்காக வேண்டிக்கொண்டேன் என்றார். பிரியமானவர்களே, ரட்சகர் சீஷர்களுக்காகவும், நமக்காகவும்நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகாமலிருக்க வேண்டிக்கொள்வதால் நாமும் அவரை உண்மையோடு விசுவாசித்துப் பற்றிக்கொண்டிருக்க வேண்டியது அவசியம் அல்லவா. இப்படிக்கெல்லாம் நினைப்பூட்டிய பிற்பாடு ஒரு பட்டயத்தை தன் வஸ்திரத்தை விற்று கொள்ளக்கடவன் என்றார் சீஷர்கள் இரண்டு பட்டயம் எங்களிடத்தில் இருக்கிறது என்றார்கள். ஆதலால் பட்டயம் இனி வேண்டுவதில்லை என்பது அவர்கள் கருத்து, ஆனால் ரட்சகரோ அவர்கள் அவிசுவாசத்தை வெளியிட்டார்களென்று தெரிந்துகொண்டார். இவர்கள் தம்மை நிச்சயமாய் மறுதலிப்பார்களென்றும் அறிந்து கொண்டார். ஆகையால் பேதுருவைநோக்கி இன்றைக்குசேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்றார். அப்படியேபேதுருவும் மறுதலித்தான் நமதாண்டவர் வஸ்திரத்தை விற்று என்னபட்டயம் வாங்கக்கட்டளையிட்டார்? அவர் ஆவியின் பட்டயம் வாங்கக்கட்டளையிட்டார். சீஷர்களிதைப்புரியாமல் எங்களிடத்தில் இரண்டு பட்டயங்களுண்டென்றார்கள். இவர்களிடத்தில் அசுத்த ஆவியின்பட்டயமிருப்பதால் நீதியையும் வெட்டிவிடுவார் என்பதை அறிந்து நீங்கள் சோதனைக்குட்படாமல் ஜெபம்பண்ணுங்களென்றார். அருமையானவர்களே யூதாஸ்தன்னையும் தன் வஸ்திரங்களையும் பணத்தாசையால் விற்று அசுத்தாவியின் பட்டயத்தை வாங்கி நீதியைவெட்டி அநீதியினால் ரட்சகரைக்காட்டிக்



கொடுத்தான். அவனுடைய காரியம் அநீதியாய் முடிந்தது. ஆகையால்பேதுருவினிடத்தில் இரண்டு பட்டயத்தைக்கவனிக்கும்போது அவ்விரண்டில் ஆவியின்பட்டயம் நீதிக்காகப் பிரதான ஆசரியன் வேலைக்காரனைவலதுகாதறவெட்டி கர்த்தரைப்பின்பற்றிச்சென்றான் அசுத்த ஆவியின் பட்டயம் அநீதிக்காக அவர்கள்கூட முற்றத்தில் குளிர்காய்ந்து தன்னை அவர்கள் நடுவிலிருக்கும்போது பிரதான ஆசாரியன் வேலைக்காரியின் மூலமாய்க்கண்டார்களென்று தெரிந்து கர்த்தரை மறுதலித்தான். ஆகையால்பேதுரு அநீதியின் பட்டயத்தால் நீதியை வெட்டிவிட்டான். நீதியின்பட்டயத்தால் அநீதியை வெட்டி கர்த்தரை நினைவுகூர்ந்தான். நீதியானது பேதுருவால் வெட்டப்பட்ட காது கர்த்தர்கட்டளையிட எப்படி ஒட்டிக்கொண்டதோ அப்படியே கர்த்தருடைய நீதியானது பேதுருவின் இருதயத்தில் ஒட்டியதால் கர்த்தரை நினைவுகூர்ந்தழுதான். ஆகையால் பேதுரு ரட்சிக்கப்பட்டான். தம் சீஷர்களிடத்தில் இரண்டுஎஃகுவின் பட்டயமிருப்பது தெரிந்துநான் பட்டயமில்லாதவன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக்கொள்ளக்கடவன் என்றார். முக்கியமாக இந்த வாக்கியத்தில் பட்டயமில்லாதவன் என்பதால் சிலரிடம் பட்டயம் இருப்பதாகக்காட்டுகிறதல்லவா. மற்றவர்களிடம் இல்லாததெனவும் காட்டுகிறது. அப்படியிருக்க எங்களிடத்தில் இரண்டு பட்டயங்கள் உண்டென்று கணக்கிட்டார்கள். நமது ரட்சகர் இவ்விஷயத்தை வெளியிடாமல் போதுமென்று நிச்சயித்துக்கொண்டார் பிரியமானவர்களே, நாம் நம் ரட்சகரிடம் ஆவியின் பட்டயம்பெற்று ஜீவிக்கவேண்டும். தேவசர்வாயுதவர்க்கம் இன்னதென்றுதெரிந்துகொண்டால் உலகத்தை ஜெயிப்போம் சாத்தான் உலகத்தை ஆளுகை செய்வதால் மற்றவர்கள் நம்மைஅக்கிரமக்காரர்களென்று எண்ணுவார்கள். அதினாலே உலகம் நம்மைப்பகைக்கிறது. நமது ரட்சகரும் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்று பரி. லூக் 22: 37ல் எழுதப்பட்டிருக்கிற வாக்கியம் என்னில் நிறைவேறவேண்டியதென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். இதைக் கவனிக்கும்போது நன்மை செய்வதற்கு ஒருவரும் சகாயம் செய்வதில்லை தீமைசெய்தவர்களுக்குச் சகாயராவார்கள்: எப்படியெனில், ஒருமனிதன் யாதொரு ஆஸ்தியுமில்லாமல் ஏழையாயிருக்

னுன் அவனுக்காக மற்றொருமனிதன் ஏழைக்கிரான் நான் அவ
னுக்குக்கொஞ்சம் பொருள் கொடுக்கிறேன் மற்றவர்களும் அப்படி
யேகொடுக்கள் சீக்கிரத்தில் அவன் பொருளுடைய சம்பன்னன்
ஆகிவிடுவானென்று சொல்வானுகில் அதற்கு சம்மதிக்கமாட்டார்
கள் இது நிற்க ஒருமனிதன் சகலபொருள்களுமுடையவனுயிருப்
பதைக்கண்டு அவனுக்கொப்பானவர்கள் அவனைக்கெடுப்பதற்கும்
அவனைக்கொலைசெய்வதற்கும் எண்ணி சிலரிடத்தில் தனக்கு சகா
யஞ்செய்யவேண்டுமென்றுகேட்டால் உடனே சம்மதித்து உதவி
செய்து அவனைக்கெடுதிசெய்வதும் தவிர கொலைசெய்தும்மறைத்து
விடுவார்கள் இப்படியாகத்தீமைக்கு லேசாய் இடங்கொடுப்பார்கள்.
நன்மைக்கு இடங்கொடுப்பதோ மகாகஷ்டமாகத்தோன்றும். இதற்
காகவே தருமசங்கடமென்று ஒரு பழமொழி வழங்கிவருகிறது
ஆகையால் மனிதர்களுக்கு ஏற்பட்ட உலகாசையாவன, மண்
ணாசை பெண்ணாசை பொருளாசை முதலியவையாவரையும்விடாது
நமது ரட்சகரின் சீஷனாகிய யூதாஸ் என்பவன் பொருளாசையால்
தூண்டப்படுத்தப்படாமல் குற்றமில்லா இரட்சகரைக்காட்டிக்கொ
டுத்து நித்யாக்கினைக்காளாயினன். அருமையானவர்களே நாமும்
யூதாசைப்போல் பொருளாசையால் கெட்டுப்போகாமல் இரட்சக
ரின் நீதியின் பட்டயங்களாகிய திருவசனங்களைப் பற்றிக்கொண்டு
அவருடைய அவதார மகிமையைத்துதிப்போமாக.

## ஜெபம்.

மகா அற்புதங்களையும்அதிசயங்களையும் செய்கிறபரமபிதாவே
உம்முடைய சித்தத்தின்படி எங்களை நடத்தும். சுவாமி நாங்கள்
இப்பிரபஞ்சத்தின் அந்தகாரத்தில் அகப்பட்டு மோசம்போனோம்
எங்கள் சுயவல்லமையால் அதை நீக்க சக்தியற்றவர்களாயிருக்கி
றோம், தேவரீர் உமது மகிமையையும் வல்லமையுமான நீதியின்
பட்டயத்தால் எங்களைரட்சித்து விடுவித்தருளும். பிதாவே,
எங்கள் ரட்சகரின் அவதார மகிமையையே விசேஷித்த வித
மாய் நாங்கள் அறியும்பொருட்டு தேவரீர் எங்கள் மத்தியில் வாசம்
பண்ணி எங்களைக்காத்து அரசாட்சிசெய்யும் எங்களதுசகல பலப்
பத்தி எவ்வகை பகைவிரோதமில்லாமல் உமது கிருபையின் நாம



அவர்கூடவேயிருந்து ஜெயத்தைக்கொடுத்து யாவருக்கும் பிரயோ
ஜனம் உண்டாக நடந்துகொள்ளவும் கிருபைசெய்யும் பிதாவே
உமது சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலே
யும் செய்யப்படுவதாக என்றவாக்கியத்தை எங்கள் ரக்ஷகராகிய
இயேசுக்கிறிஸ்துவின் அருள்வாக்கை முன்னிட்டு மனத்தாழ்மை
யாய் வேண்டிக்கொள்ளுகிறோம். சுவாமி, ஆமேன்.

## 8-வது பிரசங்கம்.

### கர்த்தர் வாகனம் தெரிந்துகொண்டது.

உங்கள் எதிரேயிருக்கிற கிராமத்துக்குப்போங்கள். அதில்
பிரவேசித்தவுடனே மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத
ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக்காண்பீர்கள். அதை அவிழ்த்
துக்கொண்டு வாருங்கள் என்றார். பரி. மாற்கு 11:2. பிரியமான
வர்களே நமது அருமை ரட்சகர் இந்த வாக்கியத்தை தமது சீஷர்க
ளில் இரண்டுபேருக்குக் கட்டளையிட்டார். அவர்களும் அப்படியே
அக்கிராமத்தில் பிரவேசிக்கும்போது வெளியே இருவழி சந்தியில்
ஒருவாசலருகே கட்டியிருந்த அக்குட்டியைக்கண்டு அவிழ்த்துக்
கொண்டுவந்தார்கள். இரட்சகரும் தாம் நியமித்தவாகனமிதுதா
னென்று ஏறிப்பவனிபோனார். சகல ஆடம்பரத்துடன் எருசலே
முக்குவந்து தேவாலயத்தில் பிரவேசித்து எல்லாவற்றையும்சுற்றிப்
பார்த்து சாயங்காலமானபோது பன்னிருவரோடுங்கூட பெத்தானி
யாவுக்குப்போனார் பரி. மாற்கு 11: 7-11 அருமையானவர்களே
இதில் அடங்கியவாக்கியங்களும் அதின் ஞானார்த்தங்களையும் மெய்ய
மாகக்கவனிக்கவேண்டியதவசியம். மனுஷர் ஒருவரும் ஒருக்கா
லும் ஏறியிராத ஒருகழுதைக்குட்டி என்ற வாக்யத்தில் நமக்குத்
தோன்றுகிற விஷயமென்ன. அதில் தோன்றுகிற விஷயமாவது
மனுஷர் ஒருவரும் என்பதில் நமது ரட்சகரைத்தவிர முன்பு ஒரு
வரும் ஏறினதில்லை. ஒருக்காலும் என்பதில் முன்பாகிலும் பின்
பாகிலும் ஏறியிராத கழுதைக்குட்டி என்று காட்டுகிறதல்லவா.
ஆகையினால் கர்த்தராகிய ஆண்டவர் ஏறக்கூடிய குட்டியேதவிர
மனிதர்கள் ஏறக்கூடிய வாகனமல்ல. இரட்சகருடைய சீஷர்கள்

எவ்விதமான இடத்தில் அந்தக்கழுதைக்குட்டி கட்டியிருக்கக்கண்
டார்கள் வெளியே இருவழிச்சந்தியில் ஒரு வாசலருகே இருக்கக்
கண்டார்கள். இந்தவாக்யத்திலே தோன்றுகிறதென்ன. வெளியே
இருவழி என்பது நல்வினை தீவினை என்ற இருவழிசேர்ந்து சந்திக்
கும்இடத்தில் ஒருவாசல் என்பது இருதயவாசல் எனப்படும். அந்த
வாசலருகே ஒரு கழுதைக்குட்டி இருக்கும் என்பது உலகத்தாருக்
குத்தெரிந்தவிஷயம். இதை வெளியே பகிரங்கமாய்க் காட்டும்படியா
கக் கிராமத்தில் கழுதைக்குட்டி யிருப்பதாகவும் முன்னே தீர்க்கதரி
சிகள் உரைத்தது நிறைவேறவும் வாகனமேறி தேவாலயத்துக்குப்
போனார். அப்படியே தேவாலயத்துக்குள் சென்றபோது வாகனம்
அவ்விடத்தில் எவ்வாறானதோ அது யாவருக்கும் தெரியவில்லை.
தம்முடைய சிஷர்களுங்கூட தேவாலயத்துக்குப் போகும்வரை வாக
னத்தைக்கண்டார்கள். தேவாலயத்துக்குள் பிரவேசித்து சுற்றிப்
பார்க்கும்போது வாகனத்துடன் சுற்றினாரோ அல்லது இறங்கிப்
பார்த்தாரோவென்பது வேதாகமத்தில் காணவில்லை. ஆகையால்
கழுதைக்குட்டியேறினார் என்பதை வாசிக்கிறோம். அதைவிட்டு
இறங்கினார் என்பது சுவிசேஷங்களில் பார்க்கவில்லை. சாயங்கால
மானபோது பன்னிருவரோடுங்கூட பெத்தானியாவுக்குப்போனார்
என்று வாசிக்கிறோம். அப்பொழுது திரும்ப அந்தக்குட்டிக்கழுதை
யின்மேல் ஏறிப்போனதாகத் தெரியவில்லை ஆகையால் அந்தக்
கழுதைக்குட்டி என்பது. இருதயத்தின் வாசலருகே இருக்கப்
பட்டதென்று சொல்வதற்குச் சந்தேகமேயில்லை. அருமையான
வர்களே நம்முடைய இருதயத்தில் சாத்தானுடைய பரிவாரங்களா
கிய எழுதுர்க்குணங்களிருக்கின்றன. அவைகள் சாத்தானுடைய
வாகனந்தான். நமது ரட்சகருக்கு நமது இருதயத்தில் ஒரே ஒரு
வாகனந்தானிருக்கிறது. அதாவது. ஒரு கழுதைக்குட்டி இந்தக்
கழுதக்குட்டி நமது இருதயத்திலிருப்பது நாட்டுப்பழமொழியால்
விளங்கும். அதை எனக்குத்தெரிந்தமட்டும் தெரிவிக்கிறேன்.
அதென்னதெனில் ஓர் ஊரிலிருக்கிற ஒரு மனுஷன் மற்றொரு ஊரி
லிருக்கிறதன் சிநேகிதனிடத்தில் போய் தனக்குவேண்டியகாரி
யத்தை சீக்கிரத்தில் முடித்துக்கொண்டு போகலாமென்று வந்து



தன்னாலும் தன் சிநேகிதனாலும் குறிக்கப் பட்டகாலத்தில்
தன்னிஷ்டப்படி நிறைவேறாவிட்டால் அவன் தன் கவலையினால்
பிறரிடம் சொல்லிக்கொள்வதெப்படி யென்றால் எனக்கிந்தக் காரி
யத்தைப்பற்றி இரவும்பகலும் என்மனதில் ஒருகழுதைக்குட்டி
உதைக்கிறதுபோல் இருக்கிறது என்று சொல்லி விசனப்பட்டுக்
கொள்வான். பொதுவாக உலகத்திலுள்ளவர்களில் அநேகர்
பிறரிடத்தில் இந்த வார்த்தையை ஒவ்வோர் சமயங்களில் சிற்சில
சந்தர்ப்பங்களில் சொல்லிக்கொள்வது நம் எல்லோருக்கும்
தெரிந்தவிஷயமே பிரியமானவர்களே நம்முடைய மனமே ஒரு
கழுதைக்குட்டியானதால் நமது சற்குருவாகிய ரட்சகருக்கு
வாகனமாகிறது: ஆண்டவரால் நியமிக்கப்பட்ட நமது மாம்ச
தேகமாகிய ஆலயத்துக்குள் பிரவேசித்துச் சுற்றிப்பார்க்கும்
போது சாத்தானுடைய பரிவாரங்களெல்லாம் நம்மை விட்டு
அவருக்கு முன்பாக அகன்றுபோகும். இதற்காகவே உல
கத்தில் ஒருபழமொழியும் வழங்கிவருகிறது அதென்னவெனில்
மனமிருந்தபடியே குருவிருந்து ரட்சிப்பார் என்று யாவரும் தெளி
வாய்ச்சொல்வார்கள் நமது மனமானது தாழ்மையும் சாந்தமுமா
யிருக்குமானால் அருமை ரட்சகர் நம்மையாண்டுகொள்வார் சாத்தா
னும் அவன்கிரியைகளும் பின்சென்றுபோகும். அருமையானவர்
களே நமது ரட்சகர் கழுதைக்குட்டியைப்பற்றி மிகவும் வற்புறுத்தி
ஒருவனும் ஒருக்காலும் ஏறியிராத குட்டியென்று சொல்கிறார்.
ஆதலால் மனம் என்பது ஒருகழுதை அதில் ஒருவரும் ஏறமுடி
யாது ரட்சகர்தான் ஏறவேண்டும். ஆகையால் நமது சரீரமே
ஒருகழுதையாகவும் சரீரத்துக்குள்ளிருக்கும் மனமே ஒரு குட்டி
யாகவும் தெரிந்துகொள்ளவும். இதோ உன் ராஜா சாந்தகுண
முள்ளவராய் கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்
மேலும் ஏறிக்கொண்டு உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன்
குமாரத்திக்குச் சொல்லுங்களென்று தீர்க்கதரிசியினால் உரைக்
கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது என்று பரி. மத்
2: 4, 5. கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும்
ஆகிய இரண்டின்மேலும் ஏறுகிறதெவ்விதம்? அதை கவனிக்கும்

போது நமது சரீரமும் மனதும் ஒன்றாயிருப்பதால் இந்த அதிச
யத்தில் கழுதையையும் அதன் குட்டியையும் இணைக்கப்பட்டிருக்
றது. மற்ற சுவிசேஷங்கள் மூன்றிலும் ஒரு கழுதைக்குட்டியின்மேல்
ஏறினதாகத் தெரிந்துகொள்வதால் நமது சரீரத்தில் எந்தவஸ்துவும்
ஏறிக்கொள்ளவும் இறங்கிக்கொள்ளவுங்கூடும். ஆகையால் நமது
மனத்தாழ்மை என்ற குட்டிக்கழுதையின் மீதேறி ஞானமென்ற
கன்னிகை இடத்து மணவாளராக இருதயமென்ற வீட்டில் வாசஞ்
செய்து சாத்தானை ஜெயிக்கிறவகைக்காக வாகனம் வேண்டுமென்று
திருவுளம்பற்றினார். ஆதலால் நாம் ரட்சகரைப்பின்பற்றி ஜீவிக்க
வேண்டியதவசியம். தேவனுடைய புத்திரரே நமது சரீரத்தில்
விசேஷமாய் மனது என்பது தாழ்மையாயிருக்கவேண்டும் சாந்த
குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச்சுதந்தரித்
துக்கொள்வார்கள். பரி. மத் 5:5 இந்த வாக்யங்களை நன்றாயறிந்த
பட்டணத்தார் 'நாடு நமக்குக்கேட்டுதெல்லாந்தரும் நன்னெஞ்சமே'
என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் இதற்குபதிலாக சிந்தை
யென்றும் எண்ணம் என்றும் நினைவு என்றும் இன்னும் சில அம்சங்க
ளுமிருக்கின்றன. இப்படி ஏற்பட்டிருக்கிறபடியால் அதில் சிந்தை
என்பது சிங்கமென்று சொல்லலாம். இதைப்பற்றித் தாயுமானவர்
என்றஇந்து ஞானிசொன்னதாவது "சிந்தையை அடக்கியே சும்மா
யிருக்கின்ற திறம் அரிது சத்தாகி என்சித்தமிசை குடிகொண்ட
அறிவானதெய்வமே தேசோமயானந்தமே'' என்ற பிரகாரம் நமது
இயேசு ரட்சகர் சிந்தையை அடக்கிதாழ்மையைக் காட்டும்படியாய்
கழுதைக்குட்டியின்மேல் வாகனமாக ஏறினதால் தாழ்மையுள்ள
வரென்று தெரிந்துகொண்டோம். அருமையானவர்களே பரி.
மாற்கு 11:12 ல் மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து
புறப்பட்டு வருகையில் அவருக்குப் பசியுண்டாயிற்று அப்பொழுது
இலைகளுள்ள ஒரு அத்திமரத்தை தூரத்திலேகண்டு அதில் ஏதா
வது அகப்படுமோவென்று பார்க்கவந்தார். அத்திப்பழகாலமாயி
ருதபடியால் அவர் அதனிடத்தில் வந்தபோது அதில் இலைகளே
யல்லாமல் வேறொன்றையுங்காணவில்லை. அப்பொழுது இயேசு
அதைப்பார்த்து இதுமுதல் ஒருவனும் ஒருக்காலும் உன்னிடத்தில்



கனியைப்புசியாதிருக்கக்கடவன் என்றார். அதை அவருடைய
சிஷர்கள் கேட்டார்கள் வாக்கியம் 14 முடிய அடங்கியிருக்கிறது.
இந்த சுவிசேஷத்தில் இந்த அதிகாரத்தில் இந்த வாக்கியங்களை
நன்றாய்க்கற்றுத்தெரிந்த கிறிஸ்தவரல்லாதவர்கள், இதைப்பற்றி
கவனித்து என்னிடத்திலும் மற்ற கிறிஸ்துவர்களிடத்திலும் தற்
கம் பேசினார்கள். எப்படியெனில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து
நாதர் சாந்தகுணமுள்ளவரென்று இதற்குமுந்தினவாக்யங்களில்
படித்தோம். இப்போது இந்த வாக்யங்களில் கோபமுடையவ
ரென்று குறிப்பிட பழக்காலமல்ல வென்றறிந்துமே எவ்வித முகாந்
தரமுமன்னியில் சபித்தார் என்று தற்கம் நடந்தது. மற்றக்கிறிஸ்
தவர்கள் எருசலேமைப்பற்றியும் யூதர்களைப்பற்றியும்கனிகொடாத
சிஷர்களைப்பற்றியும் சொன்னார்கள். அதை அவர்கள் ஒப்புக்
கொள்ள மறுத்தும் மரத்துக்கும் மனிதருக்கும் ஒப்பாகாது. நாங்
கள் விசுவாசிக்கமாட்டோம் அதற்குச் சரியான முகாந்தரஞ்சொன்
னால் ஏற்றுக்கொள்வோமென்றார்கள் இதற்காக நமது ரட்சகர்
எனக்கு ஒரு விஷயத்தைத்தோன்றச்செய்தார். அந்த வாக்யத்தில்
அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று சொல்வதால் நமக்கென்ன
தோன்றுகிறது அதாவது கனியிருந்தாலும் சாப்பிடுவார் காயிருந்தா
லும் சாப்பிடுவார். கனிகாலமில்லை என்பதால் இலைகளொழிய காய்
காலமுமில்லை. அந்த இரண்டுகாலமு மில்லாதகாலமாயிருப்பதால்
ஏதாவது அகப்படுமோ என்று பார்க்கவந்தார் கிட்டவந்து பார்க்கும்
போது இலையைத்தவிர வேறொன்றையுங்காணவில்லை. மரத்தில்
கனியில்லாவிட்டாலும் பக்ஷிகள் கூடுகட்டி முட்டைகளிட்டிருந்தால்
சாப்பிடுவார். அல்லது தேன்கூடுகளிருந்தாலும் தேன்சாப்பிட
உதவும். இவைகள் அந்தச்சமயம் இல்லாவிட்டாலும் இதற்கு
முந்தி அந்த மரத்தில் கனிகளிருந்தால் பட்சிகள் வந்து கனிபுசித்து
களிப்புடன் தங்கி கூடுகள்கட்டிக்குஞ்சுகள் பொறிந்துப்போயிருந்
தாலும் பழையகூடுகளும் முட்டைத்தோடுகளும் கீழேஎச்சங்களும்
கிடக்கும். அதுவுந்தவிர மனிதர்களாவது அந்தமரத்தின் நிழலில்
தங்கி இளைப்பாறின ஜாடையும் தெரியவில்லை. இல்லாவிட்டால்
பக்ஷிகளாவது சற்றுநேரம் தங்கியிருந்து போவதுங்கூட நமதாண்
டவர் பார்க்கவில்லை. அம்மரத்துக்கு அதன் இலைகளே பாரமா

பிருந்ததேதவிர வேறொன்றுங் காணவில்லை. ஆகையால் அந்த மரத்தைச்சபித்தார். பூமியில் அது பாரமாயிருக்கிறபடியால் அது இருப்பது சரியல்ல என்று நினைவுகூர்ந்தார். நமது இரட்சகர் பழக்காலமில்லையென்று காலத்தைக்குறிப்பதால் இதை உலகத்தார் இரண்டுங்கெட்டகாலமென்று சாதாரணமாகச் சொல்லிக்கொள்வது வழக்கம். என்று இப்பழமொழியை எடுத்துக்காட்டினவுடனே அவர்கள் சரி என்று இரட்சகரை விசுவாசித்தார்கள். பிரியமானவர்களே நமதருமை ரட்சகர் அத்திமரத்தினால் காட்டியவிதமானது பாவத்தை வேரற்ப்படப்போகும்படியாய்ச் செய்வாரென்று நினைவுகூர்வார்களென்ற இவ்வற்புதத்தைச் செய்தார். ஆகையால் நாமும் ரட்சகரைப்பின்பற்றி அவருடைய உபதேசங்களை நம்முடைய இருதயத்தில் நிலைக்கச்செய்தால் மலைபோன்ற பாவங்கள் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோமென்று திருவுளம்பற்றியிருக்கிறார். இதுவுந்தவிர இன்னொருவிஷயம். நமது ரட்சகரும் சீஷர்களும் எருசலேமுக்குவந்தார்கள் ரட்சகர் தேவாலயத்தில் பிரவேசித்து ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் துரத்திவிட்டு காசுக்காரருடைய பலகைகளையும் புறாவிற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபோகவிடாமல் என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும், நீங்களோ அதைக்கள்ளர் குகையாக்கினீர்கள் என்றுசொல்லி அவர்களுக்குபதேசித்தார். பரி. மார்க்கு11: 15-17. இதிலுள்ள ஞானார்த்தங்களையும் அறிந்தவர்கள் மோக்ஷலோகஞ்சென்று நமது ரட்சகருடன் திருச்சபையில் நித்தியானந்த மகிமையடைவார்கள். இதிலுள்ள வாக்யத்தின் கருத்து என்னுடையவீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடென்னப்படும் என்று சொல்லுகிறார். ஆண்டவருக்கு நியமிக்கப்பட்டவீடு நமது இருதயமாகையால் நீங்கள் என் இருதயசுத்தத்தை நீக்கி பேராசையால் கள்ளர் குகைக்கு ஒப்பாகச்செய்து கொள்ளுகிறீர்கள் என்று ரட்சகர் திருவுளம்பற்றியிருக்கிறார். மேலும் நமது இருதயத்தில் புறாவாகிய பரிசுத்தாவியை காசாசையால் கடனுக்குவிற்றுவிடுகிறீர்களென்றும் ரட்சகர் கூறியது பழமொழியாக வழங்கிவருவதைக் கேளுங்கள். சிலமனிதர் பொருளாசையாலும் புத்தியீன விபசா



ரத்தாலும் அதிகமாய் திரவியம்சேர்த்துக்கொள்ள விரும்பிமோசத்துக்குள்சிக்கி தன் பொருளையும் சேதப்படுத்திக்கொள்வதால் என் புத்தியைக் கடன்கொடுத்துவிட்டேன் என்று பிறரிடஞ் சொல்லி விசனப்பட்டுக்கொள்வார்கள். ஆகையினாலே மனிதருக்கு நமது மூவாசைகளினால் புத்தியைக்கடன்கொடாமல்வெகுஜாக்கிறதையாய் திடமனதோடு ஆண்டவராகிய நமது இயேசுரட்சகருடைய திருஅவதாரக் காக்ஷியைத்துதித்து ஜீவகாலபரியந்தம் ஜீவிப்பதவசியம்.

## ஜெபம்.

ராஜாதிராஜாவும் கர்த்தாதிகர்த்தாவுமாயிருக்கிற எங்கள் அன்பின் ஆண்டவரே, பேதைகளும் அறிவில்லாதவர்களுமான எங்களை நீர் உமக்காகத்தெரிந்துகொண்டு உம்முடைய சித்தத்தை எங்களுக்கு வெளிப்படுத்தினீரே சுவாமி, நாங்கள் எங்கள் இருதயமாகிய ஆலயத்தை உம்முடைய பரிசுத்தாவியால் சுத்தம்பண்ணி, தேவரீர் தங்கியிருக்கத்தக்க வாசஸ்தலமாக்கிக்கொள்ள அனுக்ரகம்செய்யும். நாங்கள் தாழ்மையும் சாந்தகுணமுள்ளவர்களாயிருந்து எங்கள் ஜீவியத்தில் மாசமறுக்கள்காணப்படாதபடி எங்களை உமதுவல்லமையால் காத்து கடைசியில் தேவரீரோடு நாங்களும் பரம எருசலேமுக்கு உம்மோடு பவனிசெல்ல இவ்வுலகத்திலேயே அந்தஸ்லாக்கியத்தைக் கட்டளையிடும். பிதாவே சகல பரிசுத்தகுணங்களையுடையவர்களாகி தேவரீருக்கேற்ற கனிகொடுக்கும் ஆத்துமாக்களை ஆதாயம்பண்ண பரிசுத்தாவியின் பெலனைத்தாரும். இவைகளை எங்களுக்காகப் பாடுபட்டு, இரத்தஞ்சிந்திமரித்து உயிர்த்தெழுந்த ரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் மனத்தாழ்மையுடன்கேட்டுக்கொள்கிறோம். சுவாமி ஆமென்.

---

## 9-வது பிரசங்கம்

## பாடும் மரணமும்.

நல்வழி

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம்—மெல்லிய

வாழைக்குத் தானீன்றகாய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கிசைந் தொழுகாப்பெண்.

கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும் செத்ததேயானால் மிகுந்தபலனைக்கொடுக்குமென்று திருவுளம்பற்றியிருக்கிறார். பரி. யோவான் 12: 24.

பிரியமானவர்களே நமது அருமை ரட்சகர் இந்தவாக்யத்தைத் தம்முடைய சிஷர்களுக்கு அவருடைய மரணம் பிரயோஜனமுள்ளதென்று தெரியும்பொருட்டு இதைவெளிப்படுத்தினர். இதனால் மற்றமார்க்கவாசிகளுடைய தர்க்கம் என்னவெனில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துநாதர் மெய்யான தேவகுமாரனேயானால் இந்த நரஜென்மங்களாகிய மனிதர்கள்வசம் அகப்பட்டு வாதைப்பட்டு சித்திரவதை செய்வதற்குச்சிக்கி ஜீவனைவிடுவானேன் அப்படியில்லாமல் தன்னுடைய தேவமகிமையைக்கொண்டு தன்னைத்துன்பப்படுத்தினவர்களை அவர்களே அதைச்செய்யப்படாதென்றுநின்றுகொள்ளவும் செய்துகொள்ளலாம் என்ற தர்க்கம் நடந்துவருகிறது. அவருடைய பாடுகளும் மரணமும் இவ்வுலகமுழுவதிற்கும் ஏற்றதாயிருக்கிறது. எப்படியென்றால் பிரபஞ்சமென்பது ஒரு பாசக்கிணற்றுக்கு ஒப்பாயிருக்கிறது. எவ்வாறெனில், ஆசையென்றபாசம் அளவிறந்த கோடிகர்மம். இதை நீக்கிவிடுகிறேனென்று சிலகுருக்கள் ஏற்பட்டு சிஷர்களிடத்தில் திரவியங்கள் பெற்றுக்கொண்டு அதிக ஆசைக்கிடமாக்கி குருக்களும் சிஷர்களும் அந்த பாசக்கிணற்றில் விழுந்து மூழ்கி மேலும் துன்பத்துக்காளாகி பாவத்துக்குள் சிக்கி நரகத்துக்கும் ஆளாகிப்போவதால் பிதாவானவர் தம்முடைய மகிமையென்ற குமாரனை மனிதருக்குள் பிரவேசித்து மனித அவதாரமாக வந்து பிரபஞ்சக்கிணற்றில் விழுந்தபாவிகளைத் தூக்கிக் கரைசேர்க்க சர்வவல்லமையோடும் இப்பிரபஞ்சக்கிணற்றில் குதித்தார். உடனேபிரபஞ்சபாசத்திலிடந்த நரர் வழியின்னதென்றறியாமல் அவருடைய காலையும் கையையும் சிரசையும் தோள்களையும் கட்டிக்கொண்டபடியால் அவரும் அந்தக்கஷ்டத்தைச்சகித்து தன்னையும் இவர்கள் இதில் தாழ்த்துவார்களென்று தெரிந்து இவர்கள்மேல் கோபமில்லாமல் அன்புவைத்து தூக்கிக் கரைசேர்க்கும்பொருட்டு தன் ஜீவனையும்



கொடுத்து ஜீவகரைசேர்த்தார். இதற்கு திருஷ்டாந்தம் ஒருவரில் சிலருக்கு ஜலத்தில் நீந்துவது தெரியும். பெரும்பாலும் அநேகருக்குத்தெரியாது. ஊருக்கு ஜலம் எடுக்கக்கூடிய கிணற்றுக்கு சாதாரணமாய் இறங்குபடி இருப்பதில்லை. ஆகையால் ஜலம் எடுக்கக்கூடியவர்கள் அஜாக்கிரதையினால் தடுமாறி விழுந்துவிடுவார்கள். அப்படி விழுந்துவிட்டால் அதற்குள் இறங்குவதற்கு ஜனங்கள் பயந்து கூச்சலிடுவார்கள். நீந்தக்கூடியமனிதன் விஷயமின்னதென்று அறிந்துவந்து அக்கிணற்றுக்குள் விழுந்து தூக்கும்போது முன்விழுந்தவன் மிகவும்பயந்து இந்தமனிதனை ஆவிசேர்த்து அவனுக்குக்கஷ்டம் உண்டாக்கி கைகளையும் தோள்களையும் சிரசையும்பிடித்துத் தன்னைத்தப்பித்துக்கொள்ள வகைதேடும்பொழுது நீந்தக்கூடியமனிதனுக்குக் கஷ்டம் ஏற்படும் ஆனதால் அதையும் சகித்து அவனைத்தன் வசமாய்ப்பிடித்து ஜலத்தில் மூழ்காமல் நிறுத்திக்கொண்டு உரத்தசத்தமாக ஒருகட்டிலில் நான்கு பக்கங்களிலும் ஒருகயிறுகட்டி இங்கேவிடுங்களென்று சொல்ல கிணற்றருகே நிற்கிறவர்கள் அப்படியேசெய்து உள்ளேவிடுவார்கள் கட்டிலின்மேல் தூக்கிவைத்து நன்றாய்ப்பிடித்துக்கொள் என்று உறுதியாய்த்துணைநின்று கரைசேர்த்து ஜீவனைக்காப்பாற்றுகிறது போல நமது இயேசுரட்சகர்பாடு மரணங்களின் முகாந்திரம் இன்னதென்று உணர்ந்துகொள்ளவும் கட்டில் என்பது ரட்சகருடைய உபதேசம். கயிறு என்பது அதினுடையசாரம். கரையில் நின்றவர்கள் அப்போஸ்தலர், அல்லது சிஷர்கள். கிணறு என்பது இப்பிரபஞ்சம். பாசம் மாயை அது அநித்யம். விழுந்தவர்கள் பாவிகளாகிய நரஜென்மம் நாமே. ஆகையால் ரட்சகருடைய சுவிசேஷ உபதேசங்களை உறுதியாய்ப்பிடித்து ஜீவகாலபரியந்தம் நிலைநின்று தன்னைத்தானேகாத்து ஜீவிக்கவேண்டியதவசியம். கற்றவர்யாவரும் அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல் என்பதைச் சிந்திக்கக்கடவர்கள். பிரியமானவர்களே ரட்சகர் கூறியகோதுமை மணியானது நிலத்தில்விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும் செத்ததேயாகில் மிகுந்தபலனைக்கொடுக்கும் என்றார். இவ்வாக்யத்தின் ஞானார்த்தத்தைக் கவனிக்கும்போது கோதுமை மணியென்பது தேவனுடைய மகிமை. அது தேவனிடத்திலிருந்தால் தனித்

இருக்கும். தேவமகிமையை அறியும்பொருட்டு உலகத்துக்கு அனுப்பினர். மண்ணாகிய மனிதர் என்ற நிலத்தில் விதையை ஊன்றினர். மகிமையானது செத்து மனிதத்தன்மையடைந்தது. ஆகையினால் சிறிதுகாலம் தன்பலனைக்கொடுக்கும்வரையில் புகழ் பெற்று நாளடைவில் பலவென்ற அற்புதங்கள் உண்டானதால் துன்பம் மேலாகிபாடுபட்டு அதிக பலனைக்கொடுத்து தேவதன்மையென்ற அன்பை வெளிப்படுத்தி மனித தன்மைமாறி அதிகமகிமையினால் மணியாகி உலகத்துக்கு ஒளியாகி பிரகாசத்துடன் தேவனுடன் சேர்ந்தார். ஆகையினால் நமது இயேசுவின்பாடுகளும் மரணமும் உலகபாவங்களை ஜெயிக்கும். மனிதரை இரட்சிக்கும் ஆனதால் பாவிகளை ரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்றவார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது அவர்களில் பிரதானபாவி நான். இதற்கு திருஷ்டாந்தம் உலகத்தில் விதைவிதைக்கிறவன் விதையை விதைத்தவுடன் விதை மண்ணுள்செத்து பயிராகி ரூபமாறி சிறிது காலத்தில் அதில் கருவை என்ற மொழியுண்டாகி அதில் சிம்புகள் இருபது முப்பதுவெடித்து பாதுகாப்பாய்க்கதிராகி மணிபிடித்து விளைந்து முதிர்ந்தவுடனே அதை அறுக்கவும் அடிக்கவும் மிதிக்கவும் தூற்றவுமாக வர்த்தை செய்து திரும்ப முன் விதைத்தமணிரூபமாக மேனிக்குமேனியென்ற அழுவைத்தங்களுக்கு உபயோகித்துக்கொள்கிறது. இத்தன்மையாய் நமது ரட்சகரின் பாடுகள் உலகத்துக்கு நன்மையைத் தருகிறது. இது தெரிந்தபெரியோர்கள் பழமொழியாகச் சொல்லியிருக்கிறார்கள். "காய்த்த மரம் கல்லெறிபடும்". ஆகையால் உலகத்துக்கு தேவமகிமை மணியென்று சகலரும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளவும். நீதிநூல் முதல் அதிகாரம்.

1. "மண்டபமாதிகண்டோர் மயனென்னல்போலும்
குண்டலமுதல்கண்டோர் பொற்கொல்லனுண்டென்னல்
[போலும்
ஒண்டுகில் கண்டோர் நெய்தோனொருவனுண்டென்னல்
[போலும்
அண்டமற்ற கண்டுஞ்செய்தோனுளனென வறிவாய்நெஞ்சே"



பிரியமானவர்களே!

உலகத்து மாந்தர்கள் மனிதரால் செய்யப்பட்ட வஸ்துவைக் கண்டவுடன் இது இன்னவனால் செய்யப்பட்டதென்று நிச்சயித்து அவனிருப்பது மெய்யென்று தெரிந்துகொள்வதால் மனிதரால் செய்யப்படாத சிருஷ்டியைக்கண்டவுடனே வேதவனிருப்பது மெய்யென்று நிச்சயிக்கிறோமல்லவா. அதைப்போலதேவ அவதாரத்தை பலவாரான சித்தாந்தங்களில் சொல்லியிருப்பினும் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளுகிற விஷயமாவது. மனிதரால் சகிக்கமுடியாத பாடுகளின் மூலமாய்ப்பாவத்தைத்தானே பெற்றுக்கொள்வதால் மெய்யாகவே தேவ அவதாரத்தை இன்னவரென்று நிச்சயிக்கக் கூடுமே. ஆகையினால் மனிதரால் சித்திரவதைப்பாடுகள்பட்டும் அதைச்சகித்து ஆசீர்வதித்து அன்பைத்தெரிவித்தபடியால் இப்பாடுகள் நிமித்தமும் பிற்பாடு மூன்றும்நாள் தன் ஜீவனோடு யாவரிடத்தும் பேசவும் போஜனபானமருந்தவும் அற்புதங்கள் நடத்தவும் சீஷர்கள் காணமேகத்தின்மீது பரலோகஞ்சென்று கடாதிகளால் வேறுபட்ட மனிததேகத்தோடு தேவமகிமையென்ற மணியையுள்ளடக்கி பிதாவாகிய ஜோதியோடு கலந்தாரென்று தெரிவதால் இரட்சகரை தேவ அவதாரமென்று உலகத்திலுள்ள யாவரும் தெரிந்து விசுவாசத்தோடு அவருடைய உபதேசங்களடங்கிய மந்தையிற்சேர்ந்து அவரை ஆண்டவரென்று நிச்சயமாய்ச்சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

---

## கடவுளை அறிவது.

---

1. ஆலஞ்சரீரமனித்தியமென்றென்னுங்கோ
காலன்றினம்வருவானென்னுங்கோ—காலன்
கறங்காதகண்டன் றன்கண்மணியைப்போற்றி
உறங்கெடறங்காதிரு,

2. ஆசையென்றபாசமனைவறந்தகோடிகர்மம்
ஆசையென்றபாசமகலாது—ஆசை

அறன்காதலாக்கியறனடியைப்போற்றி
உறங்கிஉறங்காதிரு.

3. தந்தைதாய் சுற்றந்தாரஞ்சகோதரங்கள்
விந்துநிலையறியாவினவே—விந்து
அறன்காதலாக்கியறனடியைப்போற்றி
உறங்கிஉறங்காதிரு.

4. வானமுடிதேவர்வனத்திலேவேடர்
ஞானமணிதிருடனல்கினன்—ஞானம்
அறன்காதலாக்கியறனடியைப்போற்றி
உறங்கிஉறங்காதிரு

இதன் பொருள். முதலாவது செய்யுள் ஆலஞ்சரீரமென்பதால் பூர்வகர்மம் விபரீதரூபமென்ற பழமொழிக்கிணங்க பூர்வத்தில், ஆதாம்ஏவாள் இவர்கள் தேவகட்டளையை மறந்து சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டபொழுது விஷமென்ற நஞ்சுக்கனி கற்பமென்ற கருவுண்டாகி ஜீவசுவாசம் பெற்ற சிசுவோடுகூடவேபிறந்து சிசுவெளிப்பட்டபின் நஞ்சுக்கொடி வெளிப்படுகின்றன இதைப்பற்றி உலகத்தார் நஞ்சுவிழுந்தால் மாதாவுக்குச்சுகம் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம்: ஆனதால் பிரசவகாலத்தில் வியாதிமூலமாய்ப் பின்னையென்ற ரூபந்தோன்றும். இதுதான் பூர்வகர்மம் விபரீதரூபமென்பது. ஆனதுபற்றி ஆலம் என்ற நஞ்சு சரீரமாகிறது. இது அநித்தியமாகையால் காலன் தினம் வருவான்காணுங்கோ. உலகப் பிரகாரமாக காலன் என்பது மூவாசைகளில் ஒன்று. அவை எமன் காலன், தூதன். எமன் என்பது மண்ணாசை. காலனென்பது பெண்ணாசை. தூதனென்பது பொருளாசை. காலனென்ற பெண்ணாசை தன்னைப்பற்றிக்கொள்வதால் காலன் தினம் வருவானென்பது. மண்ணாசை பொருளாசை மனிதரை ஆசைப்படுவதில்லை. ஆகையால் காலனென்ற பெண்ணுக்கு புருஷன் காலனானபடியால் கறங்காதகண்டனென்று பெயர்பெற்று இவ்விருதிறத்தாருக்கும் ஒரே ஆசையானதால் புருஷரும் ஸ்திரீகளும் கண்மணியைப்போற்றி உறங்கியுறங்காதிரு தினமும் நம்மோடுகூடயிருக்கிறவரான கண்மணி



என்ற ரட்சகரைப்போற்றி விசுவாசமாயிரு. கண்மணி என்பது றிஸ்து என்று நமது முடிவுகாலத்தில் அறிவிக்கப்படுகின்றன. சிய, யோவ 1: மனிதருக்குள் பிரகாசிக்கிற ஒளி இரேக இருளுக்குள் பற்றிக்கொள்ளாமல் நமதுகண்வழியாய்ப்பிரகாசிக்கிறபடியால் சகலமும் புலப்படுகின்றன. மனிதருக்கு ஆத்மாபிரிகிறகாலம் றிஸ்து தோஷம் என்பதற்கு கிருஷ்ணதோஷம் வந்துவிட்டது. ஆத்துமாபிரிந்துவிடும் என்று உலகவழக்கமாய் யாவருஞ்சொல்வது தெரிந்த விஷயமே. ஆகையால் கண்மணி என்பது நமது ரட்சகர் என்றறிந்து விசுவாசத்தோடுதுதிக்கவும். உறங்கி உறங்காதிருஎன்பது சரீரம் என்பது சரீரம் இருளுக்குள்ளிருக்கிறபோது உறங்குகிறபடியால் சரீர இருளைவிட்டு வெளிப்பட்டபின் வெளிச்சத்தைக் கண்டதால் உறங்காதவர்களென்றும்தெரிந்து இரவும் பகலும் சதா காலங்களிலும் தேவமகிமையென்ற கண்மணியைப்போற்றி என்றைக்கும் அவரைத்துதியுங்கள். ஔவைசொல்லிய கவியில் இப்பேசுவைக்குறிக்கும்கருத்தைப்பாருங்கள். அதாவது.

முப்பதாமாண்டளவில் மூன்றற்றொருபொருளைத்
தப்பாமல் தங்கப்படாரேல்—செப்புங்
கலையளவேயாகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவேயாகுமாம் மூப்பு.

இதன்பொருள். உலகத்தில் இந்த சமயவாதிகள் ஒருவிதயாகஇதன்பொருளுணராமல்வேறுவிதமாக உரைசெய்துகொள்வார்கள் முப்பதாமாண்டளவில் என்பது இரட்சகரின் வயதின் காலத்தைக் குறிப்பிட்டார். பிற்பாடு மூன்றொத்தொருபொருளை என்பது பிதாகுமாரன் பரிசுத்தாவி என்னும் திருத்துவப்பொருள் அடங்கினவரை, தப்பாமல் தங்கப்படாரேல் என்பது இடைவிடாமல் மனதில் தங்கச்செய்துகொள்ளாரேல் இன்னவரால் மீட்புண்டு என்பதை அறியாது, செப்புங்கலையளவேயாகுமாம்,சொல்லத்தக்கதான் கற்றுக்கொண்ட கல்வி இடைமாறுக்கள் மண்ணோடு இவ்வென்ற பிரகாரம் நிர்விசாரியாய் ஆத்மவிசாரணையில்லாமல் தன்னுடைய ஜீவியம், காரிகையார் தங்கள் முலையளவேயாகுமாம் என்றால் மாதர்

களுடைய ல்தனபாரத்தினளவாய் தனது ஆசையானது பற்றி, மூப்பு என்பது தனது விருத்தாப்பியமாகுமட்டும் தேவசித்தனை யில்லாமல் மரிப்பது என்பதைத்தெரிந்து கொள்ளவும். ஆகையி னலே, சற்குருவாகிய இயேசு ரட்சகரை அறிந்து விசுவாசித்துப் பற்றிக்கொள்ளவும்.

இந்துசமயங்களுக்கு பொய்குருவாக ஏற்பட்டவியாசமுனியால் தெரிவித்த குமார அவதாரஞ்செய்ததைப்பற்றி பலவாறு மறைத் ததைக்காட்டியது பின் வருமாறு:— சிவசமயத்தில் கணபதி யென்றும், குமாரனென்றும் சொக்கலிங்கமென்றும், பழனியாண்டவ னென்றும் திருவிளையாடபுராணத்தில் விருத்தகுமாரபாலனென் றும் சித்ரபுத்ரனென்றும் சொல்லப்பட்டது. விஷ்ணுசமயத்தில் மன்மதனென்றும், கிருஷ்ணனென்றும் சொல்லப்படுகின்றது. நீதிநூல் 15-ம் அதிகாரம் 1.

முன்னமோர் பொய்யுரைக்க வப்பொய்வெளியாகாமன் மூடும்
வண்ணம் பின்னுமோர் பொய்யுரைக்கவதையு கிலைவிதுத்
தவோர்பெரும்பொய்சொல்ல—இன்னவகைகைத
லமொன்றிருநூறு கைதவத்துக்கிடமாம் வாய்மை
தன்னைமுன் பகறில்சங்கடமொன்றிலைபதுவே
நகமை நெஞ்சே.

பிரியமானவர்களே, வியாசமுனியால் உண்டானபொய்களைப்பற்றிய [illegible] நமது ரட்சகருடைய அவதாரத்தையும் பரமொணத்தை யும் அந்தரங்கமாய்த்தெரிவித்திருக்கிறன். அவைகளை திருஷ் டாந்தமாய்க் கண்டுகொள்ளலாம் சிவசமயத்தில் சிவனுக்கு மூதற் போரை குமாரன் கணபதியென்றும் சகலசமயங்கட்கும் கணபதி யே முதல்வரென்றும் எந்தவிஷயமும் துவக்கும்போது அவரைத் துதிப்பதென்றும் தனது முன்னோர்களுடைய குருக்கள் தெரிவித்த படி செய்துகொள்ளவேணுமென்றும் கணபதி என்ற விக்ரகத்தை கண்டவுடன் தன் தலையிற்கொட்டி கன்னத்தில் அடித்தும் தோப் புக்கண்டம்போட்டும் நமஸ்காரஞ்செய்து வணங்கினால் தன்பாவ விமோசனம் பெறலாமென்று வியாசமுனியால் எழுதப்பட்டபுரா

தோப்புக்கண்டம் போடும்போது தன்கைகளை மாறிகாதைப் பிடித்துக் கொள்வது சிலுவையின் அடையாளத்தை குறிப்பிட.



ணங்கள் மூலமாகத்தெரிந்தும் ஒருவரைக்கண்டு ஒருவர் அப்படியே நடந்துகொண்டும் அதன்மர்மத்தையறியாமலேஜீவித்துவருகிறர்கள் சிவபெருமானுக்கு கைலையில் விவாகம் நடந்திட்டகாலத்தில் அகஸ் தியனென்பவன் பிரஜாபதியின்மூலமாய் சாபம்பெற்று பொதிகாசலத் துக்கு வரும்போது குடகுமலைச்சாரலில் தேவேந்தானால் நியமிக் கப்பட்ட நந்தவனத்திற்கு கார்குலஞ்செல்லாததால் வருந்திகண பதி என்ற விக்ரகத்தை வைத்துத்துதித்தானென்றும் தமதிஷ்டப் படி நிறைவேற்றுவேனென்று வாமளிக்க அதை நிறைவேற்றச் சக்தியற்றவராய இருக்கும்பொழுது அச்சமயம் அகஸ்தியன் தன் கமண்டலத்தை அவ்விடம் வைத்துவிட்டு சௌசம்செய்து கொள் ளச்சென்றகாலத்தில் கணபதியானவன் காகரூபங்கொண்டு அந்தக் கமண்டலத்தைக்கவிழ்த்து நந்தவனத்துக்குத் தண்ணீர்விட்டா னென்றும் அதனால் அவ்வகஸ்தியர் தன் கமண்டலங்கவிழ்ந்து தண் ணீரப் ஒழுகுவதைக்கண்டு கோபங்கொண்டு சுற்றிப்பார்க்கும் போது காகத்தைத்தவிரவேறு ஒன்றுங்காணுதவராய் அந்த ஒரு கல்லாலெறிந்தாரென்றும் அது படவே அக்காகம் மனிதரூப மடைந்ததென்றும் உடனே அம்மனிதனைப்பிடித்து அவன்தலையில் குட்டி கன்னத்திலடித்துக் கஷ்டப்படுத்த கணபதியானவர் அம்ம னிதரூபம்விட்டு தன் சுயவடிவத்தைக்காட்ட உடனேதான் செய் தது அபசாரமென உணர்ந்து தன்குற்றத்தை மன்னிக்கும்படி கேட்க அக்ஷணமே அவ்வகஸ்தியனுக்கு கணபதி என்னைப்படுத்திய பிரகாரம் யாவரும் என்னை வணங்கிக்கொள்ளவேண்டுமென்று திரு வுளம்பற்ற, அவ்வரம்பெற்றுக்கொண்டு அகஸ்தியர் பொதிகாசலம் சென்றாரென்றும் புராணங்கள் கூறுகிறது. மேலும் மித்ரபேதங் களில் இதுவும் ஒன்று. பின்வருமாறு:— மனிதரூப முகத்துட னிருக்கும்போது பலத்யுத்தத்தின்மூலமாக தன்சிரசு அறுபட் டுப்போகத் தன் சிரசு காணப்படாமல் ஆனைமுகத்தை எடுத்து ஒட்டிவிட்டதால் ஐங்கரனென்று பெயருடி வழங்குவதால் [illegible] வேதப்புரட்டனால் செய்த மித்ரபேத மெனத் தெரியவருகிறது. இதன் வியாக்யானம் சிவனுக்கு விவாகம் நடக்குமுன் கணபதி என்ற குமாரன் ஏது? அதுவும் ஒருவேளை [illegible] குமாரனிருந்தா [illegible]. இதுவுக்

தவிர, தேவேந்திரனுக்கு தேவ இராஜனாக எற்படவே சகல தேவதைகளும் மேகம் முதலானவைகளும் தன்னேவல்கேட்கவும் தன்னிஷ்டப்படி கீழ்ப்படியவேண்டியதுதானே. அப்படியிருக்க தேவேந்திரன் தன் நந்தவனத்திற்கு மழையில்லாமல் வருந்தினனென்பது பொய்யல்லவா. ஆகையால் புராணங்களை ஒன்றுக்கொன்று ஒத்திட்டால் மெய்யாவதில்லை. இவையெல்லாம் தன்னை உயர்த்திக்கொள்ளவும் ரட்சகருடைய பாடுகளை மறைக்கவும் வேண்டியகதைகளே. இதன்தெளிவு. ரட்சகர் பாடுபடும்போது நடந்ததை மறைத்த விஷயங்கள். கெத்செமெனே என்னப்பட்ட இடத்தில் நமது ரட்சகரைக் கொலைசெய்யத் தேடினவர்கள் கைபோட்டுப்பிடித்த விஷயத்தை மறைக்க குடகுமலைச்சாரலில் அகஸ்தியனால் பிடிபட்டு அடிபட்டாரென்றும் பலந்தயுத்தமென்பது ரட்சகரை கைபோட்டுப்பிடித்தும் சீஷர்களில் ஒருவன பிரதான ஆசாரியனின் வேலைக்காரனை வலதுகாதறவெட்டினன். பரி. யோவா 18:10. என்பதை மறைக்கவும யுத்தம் நடந்தது என்பதும் தன் சிரசுகாணமற்போகவே யானைமுகத்தை எடுத்து ஓட்டிவிட்டாரென்பது ரட்சகருடைய சௌந்தரியத்தையும் தீர்க்கதரிசிகள்மேன்மையாகச் சொல்லியிருக்கிறார்கள். போர்ச்சேவகரால துன்பமுற்றபோது சௌந்தர்யம் மாறியதால் தன்சிரசு காணமற்போனதும் தீர்க்கதரிசிகள் சௌந்தரியமில்லாதவரென்றும் அழகில்லாதவரென்றும் சொன்னார்கள். இவைகளை மறைக்க சிரசைக்கண்டித்தாரென்பது. இரட்சகருடைய சிரசில் குட்டியும் முன்முடி குட்டியும் கன்னத்திலடித்தும் முகத்தில் துப்பியும் அவருடைய முகத்தில் ரத்தம்வடிய பீறியும் இன்னும் அநேக கஸ்திகளையும் மறைக்க விகாரமாகிய யானைமுகத்தை எடுத்து ஓட்டிவிட்டாரென்பது போர்ச்சேவகர் இவைகளைச்செய்து முழங்காற்படியிட்டு அவரை வணங்கி பரிகாசஞ் செய்தபடியால் அவரைப்படுத்திய பாட்டின் பிரகாரம் விநாயகரென்ற விக்ரவணக்கமென்று ஏற்படுத்தி வேதவியாசமுனி மறைத்தான். அவருடைய காயங்கள்ஐந்தையும் மறைக்க கணபதி ஐந்துகரமுள்ளவரென்றும் அவர்முகத்தில் துப்பியதனால் எச்சில் வடிவதால் புகர்முகனென்றான். இவ்விதமாகத் தங்கள் குருக்கள் தெரிவித்தபடியே சிலர் பூமியிலே பாமரரும் பண்



டிதர்களும் வணங்குகிறார்கள். ஆனால் அதன் மர்மம் தெரிந்தது இல்லை. இதைமறைக்க ஒருபொய்ப்புராணஞ்சொல்லி அதை நிலைநிறுத்த வேறொரு விதமாகவும்சொல்லியிருக்கிறது. அதாவது நமது ரட்சகரின் சாந்தகுணம் நற்செய்கை அலகைகளைத் துரத்தியதும், வியாதியஸ்தரைக் குணமாக்கினதும் அவருடைய சீஷர்களையும் மனுஷகுமாரன் தேவகுமாரன் என்பதையும் அவர் ஞானபண்டிதர் பாவங்களை ஜெயிப்பவரென்பதையும் தெரிய இம்மானுவேல், பரலோகப்பிதாவின் மகிமை, மணி என்பதை மறைக்கும்வண்ணமாக ஸ்கந்தபுராணஞ்சொல்லி அதில் சுப்பிரமணியனென்ற விக்ரகத்தையும் அதைப்பற்றிய வணக்கத்தையும் உண்டாக்கி ரட்சகருடைய மகிமையை மறைத்தான். இதன் கருத்தாவது சுப்ரமணியம் என்பது பரிசுத்தம்பொருந்திய பிதாவின் மகிமை மணியானவர் உலகத்துக்கு முதல்வரென்பதாம். இம்மானுவேல் என்பதற்கு வேலவரென்றும் தேவகுமாரன் என்பதற்குக் குமாரக்கடவுள் என்றான். மனுஷகுமாரன் என்பதற்கு சிவனுடைய புத்ரன் தகப்பன்சாமி யென்றான். சாந்தகுணம் நற்செய்கைக்கு ஆறுதலையுடையவர் சரவணப்பெருமாள். அந்த நாமத்தினாலே சரவணபவாய என்றால் உடனே பேய்பிசாசு, பில்லி, சூன்யம, வஞ்சனை, முனி, ஏவல் எல்லாம் ஓடிவிடுமென்றான். பன்னிரண்டு சீஷர்களைக்குறிக்க பன்னிருகையுள்ளவரென்றான் வியாதிஸ்தரைக்குணமாக்கச்செய்ததற்கு வைத்தியருக்கும் சற்குருவென்றும் ஞானபண்டிதருமென்றான். பாவங்களை ஜெயித்து பாவவிமோசனஞ் செய்ததற்கு சூரசங்காரகர்த்தர் என்றான். குழந்தையாய்ப்பிறந்ததற்கு பழனியாண்டவரென்றும் மலைப்பிரசங்கம் செய்ததற்கு குறிஞ்சிமலைத்தலைவரென்றான், இப்படியாக ஒவ்வோர் காரணத்தைப்பற்றி முன்சொன்ன பொய்நிலைப்பதற்குப் பொய்களைச்சொல்லிய புராணங்களை கம்பத்தக்க பெரும்பொய்யென்று இனமான பெரியபுராணஞ்சொல்லியிருக்கிறான். அதெப்படியெனில் திருவிளையாடல் அறுபத்துநாலில் சுவர்க்கலிங்கக்கடவுள் முக்கிய காரணரென்று யாவருக்குந் தெரிவதால் அவர் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டாரென்றும் விருத்தகுமாரன் பாலானரென்றும் பன்றிக்குட்டிகளுக்கு முலை

கொடுத்தாரென்றும் மாமனாகவந்து வழக்குரைத்து மீட்டினாரென்றும் இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர்காரணத்தைப்பற்றிவேறு வேறுவிதமாகதன்மனம்போனபோக்கெல்லாம்சொல்லிபுராணத்தை முடித்திருக்கிறது. ஆனால் அதைப்பற்றி நமது ரட்சகருடைய விஷயங்கள் அடியில் வருமாறு. சுவர்க்கலிங்கக்கடவுள் என்றால் பரிசுத்தமோட்சலோகத்தில் முதல்வரானவரென்பதாம். அவர் உலகத்தில் பரிசுத்தமுள்ளவராய் அவதரித்து மனுஷனாகி பொந்தியுப்பிலாத்துவினுடைய வாரினால் அடிபட்டதற்கு பாண்டிய அரசனால் பிரம்படிபட்டாரென்றும் பிட்டுவாணிச்சிக்காக மண் சுமந்தாரென்பது மரியம்மாள் என்பவள் தன் பாவங்களை நினைத்து தன் கண்ணீரால் ரட்சகருடைய பாதங்களைக் கழுவி மன்னிப்படைந்தபடியால் அதைச் சுமந்துதீர்த்தவரென்பது. அதைப்பற்றி உலக பாவமன்சுமையாய் அடிபட்டாரென்பதை மறைத்தது. சுவர்க்கலிங்கக்கடவுள் ஒருசமயம் விருத்தராகவும் குமாரனாகவும் பாலராகவும் மாறினாரென்று சொல்லப்பட்டது. பிதாகுமாரன் பரிசுத்தாவி என்பதைமறைத்தது. பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்துஇரட்சித்து மந்திரிகளாக்கினாரென்பது பசாசுகளால் பிடிக்கப்பட்டவனை ரட்சகர் பன்றிகளின் வழியாய்ச்சமுத்திரத்தில்தள்ளி அவனை ரட்சித்ததைமறைக்க பன்றிக்குட்டிகளுக்கு முலைகொடுத்தாரென்பது கையும்மெய்யுமாய் கண்டுபிடிக்கப்பட்ட விபசாரஸ்திரீயை ரட்சகர் தன்வசனத்தால் ரட்சித்தவிஷயத்தை மறைக்க மாமனாகவந்து வழக்குரைத்து மீட்டினாரென்பதும் இன்னும் அநேக விஷயங்கள் வேதப்புரட்டர்கள் செய்த மித்ரபேதப்புராணங்களில் சொல்லியிருப்பது தன் இனத்தார் பிழைப்பதற்கு விக்ரகங்களை ஏற்படுத்தி அதை வணங்குகிறவர்களைத் தனக்குக் கீழ்ப்பட்டவர்களென்று எண்ணிக்கொண்ட கபடமேயன்றி வேறல்ல. சித்ரபுத்ரன் சரித்திரத்தில் பிரம விஷ்ணு ருத்ரன் என்னப்பட்ட மும்மூர்த்திகளை வணங்கினாலும் எவ்வளவோ மிகுந்த தானதர்மங்களைச்செய்தாலும் மோட்சம்போகமுடியாது. சித்ரபுத்ரனை விசுவாசித்து அவருடைய நோன்பைக்கைக்கொண்டால் அவர் மூலமாக மோட்சத்துக்குப் போகலாமென்று சொல்லியிருக்கிறது. இதன் கருத்து சித்ரபுத்ரன் என்பது அழகுடைய புத்திரன் எனப்படும். ஆனதால் குமாரன்



மூலமாய் மோட்சத்துக்குப்போகலாமென்பதை மாற்றிய சரித்திரம். ஆகையால் இதற்கு விக்ரகமில்லை. இதன் விபரம் நமது ரட்சகருடைய பிறந்த மாதம் தமிழுக்கு மார்கழி மாதம் ஏறக்குறைய பத்தாந்தேதிமுதல் பதினாலாந்தேதிவரை வரும். இதற்கு பதில் சித்ரபுத்ரன் பிறப்பு சித்திரை மாதம் பூர்வபட்சம் பதினா பதினைந்தாம் பக்கங்களில் வரும். இதை ஒத்திட்டுப்பார்க்கும் போது மார்கழி மாதம் முதல் தேதிவருகிறநாள் சித்திரைமாதம் முதல்தேதி அதேநாள்வரும் ஆகையால் ரட்சகர் பிறந்த மாதத்தை மறைக்க புத்திரன் அவதாரப்பிறப்பை சித்திரமாதமென்று மறைத்துக்காட்டின விஷயம் முன்சொல்லிய பொய்யை மறைக்க. இவ்வித பொய்களுக்கு இடமாகிவிட்டது. சிவசமயப்பொய்களைவிட விஷ்ணு சமயப்பொய்களைக் கவனிக்க விஷ்ணுசமயத்தில் குமார அவதார மறைப்பு விஷ்ணுவுக்கு மன்மதன் குமாரனென்றும் இந்தமன்மதன் மகாசௌந்தர்ய புருஷனென்றும் திரிமகங்களுக்கதிபதியென்றும் சிவனால் எரிக்கப்பட்டு அரூபியானதால் சகல ஜீவராசிகளுக்கும் காமியமிருப்பதென்றும் காமியத்தால் உலகம் விருத்தியாகிறதென்றும் அவரைக் காட்டாமல் காட்டிய மறைப்பு. ரட்சகருடைய சௌந்தரியத்தைப்பற்றி மன்மதனென்றும் அவரை தேவகுமாரனென்பதற்கு விஷ்ணு குமாரன் மாரனென்றும் தேவ ஆவியானவர் ஜலத்தின்மேலசைவாடிக்கொண்டிருந்தாரென்பதை நாராயணனென்றும் பதமதைப்பற்றி விஷ்ணுவென்றும் சொல்லப்பட்டதால் இதைமாற்றின விதம் அறிந்துகொள்க. முதன் மாணாக்கன் அன்னமாவு .யென்றபிரகாரம் தேவ அவதாரத்தைபறிய அவருடைய செய்கை, குணம், உபதேசங்கள், குறிகள், சாட்சிகள், அற்புதங்கள், அன்பு, முடிவுமுதலியவற்றைத்தெரிந்து நிச்சயிக்கலாம். இத்தன்மையை அறிந்தவனே முதல் மாணாக்கன். நமது இயேசுக்கிறிஸ்து நாதருக்கு ஐந்து காயம் உடையவரென்பதால் மன்மதனுக்கு ஐந்து புஷ்பபாணங்களிருப்பதென்றான். அவருடைய உபவாசநாளைப்பற்றி காமதகனமென்ற பண்டிகைவரும். ஆகையால் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி வேறுவிதமாக மறைத்துக்கொண்ட பொய்ப்புராணங்களே. முன்சொன்ன பொய்யை மறைக்க இது அதிகப்பொய்யாய்விட்டதால் பாகவதம் என்ற புராணத்தில்

பெரும்பொய்களைத் தெரிந்துகொள்ளலாம். பாகவதம் தசமஸ்கந்தம் நாராயணர் பூமிபாரம் தீர்க்கவேண்டி கிருஷ்ண அவதாரம் செய்தாரென்பதற்குக் காரணவிஷயம் கிறிஸ்துநாதருடைய பிறப்பு சாஸ்திரிகளாலறிந்தது. ஆயர்களால் விசாரிக்கப்பட்டது. ஏரோது அரசனால் கொலைசெய்யத்தேடியது அற்புதங்கள் நடத்தியது. அநேக ஸ்திரீபுருஷர்கள் தன்னைப்பின் பற்றியது முடிவுகாலங்களில் தன் ஆவியை தன் சீஷர்களான சிலுவையின்மீது ஒப்புக்கொடுத்தது. இவைகளை மறைக்க கிருஷ்ண அவதாரம் என்று காட்டி அவருடைய ஞாபக சின்னம் கோபியென்றும் திருமண் தரிப்பதென்றும் இதில் மேலான பதம் பெரியதாசங்க முறையில் சேர்ந்தால் எவ்வகைச்சாதியாரும் ஒரே ஐக்கியப்பட்டவர்களென்றும் சாதிபேதமன்றி போஜனம் செய்யலாமென்றும் சொல்லப்பட்டபடியே வியாசனால் தெரிவித்த சரந்த பாவட்டாக்குள் மறைத்து மகாபாரதமென்றும் ஐந்தாவது வேதமிதுவென்றும் திட்டமாகச் சொல்லி சொச்பிரட்டு விஷயப்புரட்டு: உலகப்புரட்டு காலப்புரட்டு ஜனப்புரட்டாக இக்காலத்தெரிவதால் விஸ்தரிக்கவில்லை. இதைப் பற்றி இரண்டாம் பாகத்தில் நன்றாய் அறியலாம். ஞாபக சின்னங்களைப்பற்றிய கவனிப்பு. சிவசமயம் ஞாபகசின்னம் விபூதியென்றும் அதைத்தரிப்பது குருக்குப்பூச்சென்றும் விஷ்ணுசமயமானால் ஞாபகசின்னம் திருமண் கோபியென்றும் இதைத்தரிப்பது திருநாமமென்றும் சொல்லப்பட்டது. இந்த இரண்டு ஞாபக சின்னங்களுக்குத் தலைமையானவர்கள் அரியும் சிவனுமென்றும் இவர்கள் ஒருவர்க்கொருவர் சம்மந்திகளென்றும் புராணங்கள் முறையே தெரிவதால் ஞாபகசின்னக்குறிப்பை நன்றாயறியலாம். சம்மந்தமென்றால் இரண்டை ஒன்றாக இணைக்கப்பட்டது. அதை இணைத்தால் சிலுவை அடையாளத்தைக் காட்டுகின்றது. ஆனதால் இரண்டு சமயத்திலும் குமாரனவதாரஞ்சொல்லப்பட்டது. ஆகையால் குமார அவதாரம் ஒன்றே யொழிய வேறல்ல. அந்த அவதாரம் சத்தியவேதத்தில் இரண்டாம்பங்கில் அறியலாம். மற்றெந்தப்புராணங்களிலும் இதிகாசங்களிலும்வேதங்களிலும்சித்தாந்தங்களிலும் ஞானங்களிலும் தெரிந்துகொள்ள முடியாது. ஆனது



ளுக்கும் அடிமைகளாகி காணிக்கைசெலுத்தி அவளும் சிப்பிக்கப்பட்டவிக்கிரகங்களையும் அவர்களில் ஒருவனையுங்கூடசமர்த்தனாக்கி னும் அவர்கள் மற்றவர்களை அவமதிக்கத் தன்னை மதியாவிக் கொள்கிறார்கள். வியாசரால் விக்ரகத்தை முதலானது களிமண்ணால் உண்டாக்கினதைப்பற்றி காலமுழுமையும் ஞாபகஞ்செய்யும் பொருட்டு விநாயகசதுர்த்தி என்ற நாளில் களிமண்ணால்விநாயகனென்ற விக்ரகஞ்செய்து புஷ்ப முதலான உண்டிகளை ஏராளமாய்ப்படைத்து வணங்கும்படி போதித்துக்காட்டி மூன்றும்நாள் அக்களிமண்விக்ரகத்தைத்தூக்கிப் பக்கு மண்சேரக்கூடிய குளத்தில் போட்டுவிடுவார்கள். ஆகையால் தற்பவாசியபெரியோர் இதைத் தங்களுக்குக்குருக்களால் காட்டியபடி நடக்கவேண்டுமென்று தெரிவிக்க பின் சந்ததியும் அதை நடந்து ஞாபகசின்னங்களைத்தரித்து பொய்க்குருக்களுக்கடிமைகளாகி தேவபக்தியைப் அவமாக்கிவிடுகிறார்கள். இதற்கிஷ்டமில்லாத சிலதை பதினெண்புராணங்களில் இழிகுலத்தாரென்றுவகித்து அவர்களுக்கு மீட்புண்டென்றும் அந்த இழிவை நீக்கக்குருக்கள் மூலமாய் தானதருமங்கள் கொடுத்தும் குருக்களை விசுவாசித்து தனக்கிஷ்டமானபடி பொருள்கொடுத்தால் மேற்குலமெல்லாம் மேல்குலமாகி மோட்சஞ்சேரலாமென்று கட்டு வாய்ப் புராணங்களை நம்பினவர்களுடைய கொள்கையை அறியக் கவி,

மேலேறிப்போவதற்கு ருபாயைவேணுமென்று வெகுளிபேசி
கோலேறிவருகின்ற குருக்களெனப்பேர்பெற்றார்கோடிபேர்கள்
காலுன்றி நடவார்கள்கண்மூடி மௌனியெனக்கண்டோர்மெச்ச
கோலுன்றும் குருடருக்குகுருடர்வழிகாட்டியதோர்கொள்கை
[பாமே.

பிரியமானவர்களே பரி. மத் 4:8, 9. நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப்பணிந்துகொண்டால் இவைகளையெல்லாமுமக்குத் தருவேனென்று சொன்னான். இவ்வாக்கியத்தைக்கைக்கொண்ட வியாசன் என்னும் சாத்தான் பாவனையும் தன்னை வணக்கஞ்செய்ய வேண்டுமென்றகருத்துடன் விக்ரகவணக்கமென்றும்அதைப்பற்றிய ஞாபகசின்னங்கள் முத்திவாய்க்கானமென்றும் சக்தியென்றும்சற்பி

கிறபடியே யாவரும் நடத்திவருகிறபடியால்மற்றவருப்பினரை தங்களுக்குக்கீழ்ப்படுத்துகிறார்கள். ஆகையால் விக்ரகத்தினால் அவர்கள் காரியம் ஜெயமாகிறது. அதைப்பற்றிய விக்ரகத்தை நீக்கிவிட வேண்டும். அதை நீக்கிவிட்டாலும் ஞாபகசின்னங்களைத் தரிக்கக் கூடாது. அதைத்தரித்துக் கொள்ளாவிட்டாலும் சந்திசெய்யக் கூடாது. இவைகளைப்பற்றித் தெரிந்தசிலர் இவர்களுடையகிரியை யெல்லாம் தங்களுடைய சுகஜீவியத்தை அனுபவிக்கவேண்டிய விஷயங்களடங்கிய புராணங்கள். அவைகளைநம்பி பின்பற்றுவது மோட்சவழியல்ல. நான் இப்போது விசுவாசிப்பதில்லையென்று அவர்களைப்புறக்கணிப்பார்கள். அப்படித்தெரிந்து புறக்கணித்தாலும் ஞாபகசின்னங்களைத் தரிப்பதை விடுகிறதில்லை. எப்படியிருந்தாலும் அவர்கள் ஞாபகசின்னம்தரிப்பதால் இவர்கள் நமது வலைக்குள் அகப்பட்டவர்கள். வேறொன்றும் அறியாதபேதைகளென்று என்னுகிறார்கள். இதைப்பற்றிவேறுசிலர் நாங்கள் மிகவும் தெளிந்துவிட்டோம் விக்ரகவணக்கஞ் செய்வது மில்லை. ஞாபகசின்னங்களைத் தரிப்பதுமில்லை. கிறிஸ்தவர்களுடைய கொள்கையாக அவர்கள்கூடசேர்வதுமில்லை நாங்களெல்லாம் தெரிந்தவர்களென்று தங்களை மேம்பாடாகச்சொல்லி ஜீவிக்கிறார்கள். ஆகையால் நமது ரட்சகர் உபதேசம் பரி. யோவா 15:6ல் ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான். அப்படிப்பட்டவைகளைச்சேர்த்து அக்கினியிலேபோடுவார்கள். அவைகள் எரிந்துபோம். ஆனது பற்றி சாத்தானுடைய கிரியை யாவையும் நீக்கிவிட இரட்சகருடைய திருவசனம் பின்னாலேபோ சாத்தானே என்பதே. முன்சொல்லியவைகள் எல்லாம் சாத்தானுடைய கிரியைகளென்றறியாமல் பொய்க் குருக்களைப் பின்பற்றி மோசம்போக எண்ணங்கொள்வதேயொழிய வேறொன்றையும் நினைப்பதில்லை. தற்காலத்திலிருக்கிற மனிதர்களை லேசாக எத்திப்பொருள்களைக் கவர்ந்துகொள்வதற்கிற தன்னினத்தார் இக்காலத்தும் சமர்த்துள்ளவர்களானபடியால் காலக் கோணம் என்பதை யுண்டாக்கி அதை நம்பும்படி வஞ்சித்து அந்த மாயையால் அநேகர் விரதம் பூஜை நைவேத்தியம் அனுஷ்டானம் முதலியவைகளை நடத்தி அதை ஒரு கோட்பாடாகப்பேசி சாதிக்



ந்த பொய்வலைக்குள் சிக்கிக்கொள்ளச்செய்வதால் மூர்த்தினத்தைப்பார்க்கிலும் பிர்தின எத்து மிகவும் லேசாகத்தோன்றுகிறது. ஆகையால் மூர்த்தின மனிதர்கள்பேதைகள். இப்போதுள்ளவர்கள் மிகவும் அதிக அறிவுடையவர்களென்று தங்களை விசேஷமாய்ச் சொல்லிக்கொள்வதால் இவர்களைப் பேதையிலும் பேதையென்றே அவர்கள் எண்ணங்களினால் முடிவாகிறது. குறள்,

அறிவுடையாரெல்லா முடையார்
அஃதிலார் என்னுடையரேனுமிலர். என்றபடி

அறிவுடையவர்கள் பொய்க் குருக்களின் உபதேசங்களைத் தள்ளி அவர்களால் செய்த புராணங்களில் தங்களையே உலகத்தாருக்கு மேன்மையான தெய்வமென்பதை தந்திரமென்றறிந்தும் குருக்களுடைய சந்ததிகளுக்காக சுகஜீவியமனுபவிக்கவேண்டிய விக்ரகங்களைப் பணியாமலும் அவர்கள் அணிந்த வேஷங்களை அணியாமலும் இதைப்பற்றி ஏமாற்றுகிற எகூணி அஷ்டகர்மங்களில் அகப்படாமலிருப்பவர்களை எவ்விதத்திலும் மற்றவர்களைக்கொண்டு வசப்படுத்தி தங்களை மேம்பாடாகவைத்து ஏமாற்றுவதை யறியாமல் சிக்கிக்கொள்வதால் அதை நீக்க வழிகாட்டியமேலே உரைத்த செய்யுளின் பொருளை அறிய சத்தியவேதத்தில் ஏசாயா 65: 5-12 வரை அடங்கியிருக்கிறது. பரி. மத் 12: யோவா 15: 17: வெளி 21:22: அதிகாரங்களில் தெளிவாக இருப்பதை அறிந்துதான் உரைத்தாரென்பது நிச்சயிக்கலாம். ஆகையினால் சற்குருவாகிய இயேசுக்கிறிஸ்து நாதருடைய உபதேசங்களைக்கவனித்து அவரால் காட்டிய உபவாசம், நற்செய்கை கீழ்ப்படிதல் ஒருவர்க்கொருவர் அன்பு பாராட்டுதலின்வகை மனந்திரும்பி குணப்படுதல்தன்பாவங்களின் செய்கை உலகாடம்பரத்தைநீக்க, வீண்பெருமையொழிக்க அவருடைய உபதேசமாகிய சுவிசேஷங்களில் முறையே தெரிந்து அவருடைய பேழையிலடங்கி ஜீவித்து ஜீவகாலபரியந்தம் அவரைவிடாமல் பற்றிக்கொண்டு மறுமையிலே நித்திய ஜீவனை அடைந்து பரலோகத்தில் ரட்சகருடைய சிங்காசனத்தருகில் நித்யானந்தப்பிதாவின் மகிமையடைவது நிச்சயம்.

சகலரும் மனந்திரும்புங்கள், பரலோகராட்சியம் சமீபத்திலிருக்கிறது என்ற வாக்கியத்தைக்கைக்கொள்ளவும், இதற்காக இன்னும் சிலவாக்கியங்கள் எபேசி 4: 22-24. வரை அடங்கியது. அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகிய மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத்தரித்துக்கொள்ளுங்கள், என்பதையுங்கவனித்து இதன் பொருளைக்கண்டு மெய்யான ரட்சகரை விசுவாசத்தோடுதுதித்து ஜீவிக்கவும். நமது ஜீவகாலமெல்லாம் அறிந்துகொள்ளவேண்டிய வாக்கியம் 'விழித்திருங்கள் விசுவாசத்திலே நிலைத்திருங்கள். புருஷராயிருங்கள். திடன்கொள்ளுங்கள். உங்கள் காரியங்களெல்லாம் அன்போடு செய்யப்படக்கடவதுஎன்பதை அறிய 1 கொரி. 15: 13, 14, காண்க.

## ஜெபம்.

மகா அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்யும் சர்வவல்லமையுள்ள நித்யதேவனே, இந்த அநித்யமான உலகத்தில்பாவிகளாகிய எங்களை ரட்சிக்கவும் காப்பாற்றவும் உம்முடைய நீடிய சாந்தமான மகிமையை எங்களிடத்திலனுப்பி சிலர் குணப்பட்டும் சிலர் குணப்படாமலும் பாவப்பாசத்தால்கட்டுப்பட்டு உம்முடையகற்பனைகளை மீறிநடக்கிறவர்களை உம்மாலே குணப்படுத்தக்கூடும். சுவாமி உம்முடைய மகிமையாகிய அதிகாரம் குமாரன் மூலமாய்த்தெரிவித்ததை நாங்கள் எந்த இடத்திலும் சொல்லிப்பிரசங்கஞ்செய்ய எங்களுக்கு நல்ல ஆவியைத்தாரும் சுவாமி, ஆண்டவரே எங்களால் பேசவல்லமையில்லாத பேதைகளை பிதாவே நீரே உமது ஆவியை சம்பூரணமாகக்கொடுத்து கூடவேயிருந்து பேசமன்றாடுகிறோம். பிதாவே எவ்விடத்துக்குப்போனாலும் எங்களுக்கு நல்ல ஈவுகளைத்தந்து நவமான பாஷையைப்பேச எங்களை ஏவியருளும். சுவாமி ஆண்டவரே உமது கிருபையால் உமது அடியார்களைத் துன்பப்படுத்த புறப்பட்ட சவுலைக்குணப்படுத்தி பவுலாக்கி உமக்கு



ஊழியஞ்செய்யத் தெரிந்துகொண்டது போல எங்களைத் துன்பப்படுத்துகிறவர்களையும் பரிகாசம் பண்ணுகிற புறமதஸ்தர்களையும் நீரே தெரிந்துகொண்டு உமக்கு ஊழியஞ் செய்ய அவர்களை ஏவியருளும். சுவாமி இந்த நாளில் வேறுவிதமான கொள்கையால் ஒரு மனிதனை நினைத்துப் புலம்புகிற ராஜதுரோகிகளையும் குணப்படுத்தும் சுவாமி, உலகத்தில் யாவரும் உம்முடையக் குமாரத்தன்மையை பலவாராகப்புரட்டியதை நம்பி காலமெல்லாம் வம்புகள் பேசி அதுவோ இதுவோ என்று நிச்சயமில்லாமல் ஜீவிக்கிறவர்களைக்குணப்படுத்தி உமது குமார அவதாரமாகிய பரமேசுக்கிறிஸ்துநாதரை விசுவாசித்து அவருடைய மந்தையில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒன்றாக என்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்கிறோம், சுவாமி. ஆமென்.

வித்வாம்சர்களாலுண்டாக்கிய எழுவகைத்தோற்றம் என்னும் நூலில்சொல்லியது.

வானவரேசத்தியமாயிருந்து வாழ்வார் மனிதர்களே
  மனிதர்குணமாகி வாழ்வார்
ஆனதொரு விலங்காகிலகர்ந்தைசெய்யும்
அணுகவொண்ணாப் பறவைகட்கோ அறிவோயில்லை
ஈனமின்றிக்கையேற்பார் ஊர்வேயாழர் இடுவோரை
  இகழ்ந்துரைப்பார் நீரில்வாழ்வார்
கானகத்தினிடமிருந்து வாழ்வாராகில் கல்லுமரந்
  தனக்கொப்பாங் கருதிப்பாரே.

இதன் கருத்து முதன்மையான விஷயம் வானவரே சத்தியமாயிருந்து வாழ்வார் என்பதால் தேவனே மனுஷாவதாரமாக அவதரித்த நமது ரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து சுவாமியே தேவனும் மனுஷனுமாகி சத்தியம் நிறைந்த சற்குரு அவரே நீதியார், மகா கருணையர், குணவிசேஷர் மூர்த்திதத்வமுடையவர், திரித்துவ சித்தாந்த முள்ளவர், பாவரஹிதர், மகாபரிசுத்தர். நம்மை மீட்

கும்வண்ணமாக மனிதருணமுள்ளவர். நமது பாவங்களைச்சுமந்த
தேவாட்டுக்குட்டியானவர் தேவனுக்கும் பாவிகளாகிய மனிதருக்கும்
மத்யஸ்தாயி பணிசெலுத்தி உயிர்பெற்றவர். இதைப்பற்றி இடுவோ
ரென்றும் பதமுடையவர். ஆகையால் ஐந்தப்பங்களைக்கொண்டு
அநேகம்பேர்க்கு அன்னதானங்கொடுத்தார் சொர்னதானமென்று
சொல்லப்பட்ட ஸ்வர்க்கதானமும் விசுவாசிகளுக்குக்கொடுத்தார்
மற்றப்பாவிகளுக்காக உயிர்த்தானமுங்கொடுத்தார், மறுபடியும்
உயிர்த்தெழுந்து சீஷர்களை பலப்படுத்தி மேகத்தின்மீது சீஷர்
கள்ள பரலோகஞ்சென்றார். ஆனதுபற்றி அவரை நிந்தித்தவர்கள்
துன்பப்படுத்தினவர்கள் வெட்கி நாணமடைந்து மனதைக்கடினப்
படுத்தி வேறுவழிகளில் தங்கள் இதயங்களைச்செலுத்தி மார்க்க
பேதகர்களாக வாக்குவாதம்பேசி அதற்கு வேறு சித்தாந்தங்கள்
வேதங்கள் மதங்களாகவும் தங்கள் தங்கள் பாஷைக்குத்தகுந்தபடி
யும் செய்கைக்கும் தகுந்த மார்க்கங்களேற்படுத்தியதைப் பார்க்க
சிம்மாத்திரி முத்துக்கிருஷ்ணப்ப நாயுடு அவர்களால் போடப்பட்ட
புஸ்தகத்தில் அறிந்துகொள்ளலாம். இன்னமும் பாளையங்கோட்டை
கனம் அப்பாசாமி பிள்ளை அவர்கள் இயற்றிய திரிஸ்தவருண
முகாந்திரம் என்னும் புஸ்தகத்திலும் அறியலாம் இன்னும் சன்
மார்க்கப்புஸ்தகங்களிலும் தெரிந்து நிச்சயிக்கலாம்.

ஆகையால் பிரியமானவர்களே நியாயத்தீர்ப்புக்காக இயேசு
ஸ்வாமி தன் மகிமையோடு வருகிறநாளிலே குத்தப்பட்டவர்கள்
கெக்கிப்பார்ப்பார்களென்பதை நிறைவேற்றத்தக்கதாக தம் காயங்
கள் ஐந்தையும் பார்த்துக்கொள்ளுங்களென்று சாக்ஷியாக ஒப்பு
விப்பார். அப்பொழுது நரஜென்மங்களாகிய அஸ்திகள் இலரூப
மாகவிருந்தாலும் தன்னுடைய செய்கையின்பிரகாரம் குணமடைந்து
தன்தன் நன்மைதீமையோடு தான்செய்த பாவப்புண்யங்களைச்
சுமந்த தேகத்துடையவர்களாய் நமது நயனங்களால் அவரைப்பார்ப்
போம். அப்போது நாம்செய்த தீவினை அக்ரமம் நம்மைச்சுற்றிக்
கொள்ளும். ஆகையால் நம்முடைய சாஸ்திரங்கள் சடங்குகள்
சந்திகள் விக்ரகவணக்கங்கள் மூடபக்திகள் இவையெல்லாம் சாட்சி
கொடாது நாகவாசிகளாவதே வெறியவேறில்லை இதைப்பற்றி எத்



வைகிளியார் சொன்னது சாஸ்திரத்தைக்கட்டி சனங்களையும்
பொய்யாக்கி சூஸ்திரத்தைக்கண்டு சகலபெருமதேசங்களையும் எல்லா
வலைப்பட்டார். நாம் சூஸ்திரமென்று சொல்லப்பட்ட சகிசே
ஷங்களை பறிந்து அதன் பிரகாரம் நடந்து விசுவாசிகளாவதே நலம்
வேதவியாசனால் ஏற்படுத்திய ஞாபகசின்னங்களை இணைத்தால் எம்
மதத்திலுமில்லாத சிலுவையினடையாளத்தைக் காணலாம் மகமது
மார்க்கத்தாரும் விசுவாசிப்பது சரியென்றாலும் அவர்கள் ஒரு அல்
தமாகக் காட்டுகின்றார்கள். அவர்கள் வேதம் நாலு பிரிவுகள் உள்
ளது. அதின் விபரம் நாலுபாகங்களாக பசுவின் பாலில் உவமை
சொல்லுகிறார்கள். அதாவது ஐந்துபாகங்களாகச் செய்தால்தான்
தெளிவாகும். எப்படியென்றால் முதலாவது பால்வெள்ளை, இரண்
டாவது தயிர்வெள்ளை, மூன்றாவது மோர்வெள்ளை, நாலாவது வெ
ண்ணை வெள்ளை, ஐந்தாவது நெய் உருக்கி முகத்தைப் பார்த்தால்
நான்காம்பாகத்தில் தெளிவில்லை. ஆகையால் நாலாம் வேதமாகிய
மகமது மார்க்கம் நிலையற்றது. அதுதான் சதுர்மறைபொய்யென்
பதும் இந்து வேதங்களாகிய ருக், எஜுர், சாமம், அதர்வணம்
என்ற நான்குவேதங்களை நீக்கி பிரணவமென்று சொல்லப்பட்ட
சத்தியவேதத்தில் சொல்லியிருக்கிற குமார அவதாரக்காட்சியில்
காயங்கள் ஐந்தாகையால் உறுதியாக நெய்யில் முகமும் சகல
குறிப்புகளும் தெரிவதால் உறுதியானகாயங்களைத்தும் அதன்
மூலமாகத்தெளிவாகிறபடியால் சமஸ்த மதங்களையும் நீக்கி இயா
சாதனம் அடையத்தக்க சாசனத்தை யேற்படுத்திய கர்த்தராகிய
இயேசுக்கிறிஸ்து சுவாமியைப்பின்பற்றி அவர் மந்தையாகியபேழை
யிலடங்கிடக்க ஆயத்தப்பட்டு தாங்கள் கட்டுப்பட்டுக்கிடந்த சாத்
தானுடைய வலையை அறுத்து பிடிவாதத்தை நீக்கி மனந்திரும்பி
குணப்பட்டு ஜீவகாலமெல்லாம்சர்வஜீவதயாபரானகிறிஸ்து சுவாமி
யின் பாதாரவிந்தங்களில் சரணம் புகவும் சுபம். சுபம். இதுதான்
ஆதிவஸ்துவாகிய கடவுள் ஏற்படுத்திய சித்தத்தின் அடையாளம்.

## ஜெபம்.

எங்கள் ஜீவனின் அதிபதியும் மகிமையின் ராஜாவும் நித்ய
பிரதான ஆசாரியராயும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியுமாயிருக்கிற

அன்புள்ள ஆண்டவரே, பாவிகளும் நீசரும் அற்பருமான எங்களை பொல்லாதவர்களின் மத்தியிலிருந்து தெரிந்தெடுத்து நாங்கள் எங்கள் ஜீவகாலபரியந்தம் உம்மை விசுவாசித்துப்போற்றி உமது நாமத்தை மற்றவர்களுக்குப்போதித்து அவர்களையும் உம்மண்டைக்குக்கொண்டுவந்து உமது இரத்த காயத்தின் அடைக்கலம் புகுந்து கடைசியில் நாங்களும் அவர்களும் உமக்குள்ளும் உமக்கென்றும் மரித்து நீர் எழுப்பும்போது நாங்கள் ஆவிக்கென்று பிழைத்திருக்க எழுந்து உம்மோடு பரமசந்தோஷத்தை அநுபவித்துக்கொண்டிருக்கக் கிருபைசெய்தருளும். தேவரீர், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதுபோல பூமியாவும் என்னை அறிகிற அறிவால் நிறைந்திருக்குமென்று திருவாக்கருளியதை நிறைவேற்றியருளும். எங்கள் கறுப்பு நிறைந்த இவ்விந்தியா தேசம் எத்தனையோ மார்க்கபேதம், ஜாதிபேதம், விக்கிராகாதனைக்கட்டு என்னும் பலபாவங்களினால் நிறைந்திருக்கிறது. ஆண்டவரே அவையாவும் நீங்கி மெய்மார்க்கமாகிய உமது மார்க்கம் சூரியனைப்போல் பிரகாசிக்க தேவ ஆவியானவரைக்கொண்டு கட்டளையிட்டருளும். மார்க்க அபிவிர்த்திக்குத் தடையாயிருக்கிற எங்கள் பாவங்களையெல்லாம் நீக்கிமன்னித்து எங்களை உமது பரிசுத்தாவியால் நிரப்பியருளும் இரக்கமுள்ள கர்த்தாவே பலமான சோதனைகளால் நிறைந்த இக்காலத்தில் தேவரீர் எங்கள் திருச்சபைக்கு நற்சீரைத்தந்து கிறிஸ்தவர்கள் மெய்யாய்க்குணப்படவும் மற்றவர்கள் உமக்கு முன் முழங்கால்படியிடவும், நாங்கள் எங்கள் நடக்கையினாலும் வார்த்தையினாலும் உமது திருச்சித்தத்தை நிறைவேற்றி உமது [illegible] அடைந்த பேரின்ப சிலாக்கியத்தைப்பெற்று அனுபவிக்க எங்கள் கர்த்தரும் எங்கள் மத்தியஸ்தருமாய் எங்களுக்காகப் பரிந்துபேசிக்கொண்டே பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற எங்கள் இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் மனத்தாழ்மையோடு கெஞ்சிக்கேட்டுக்கொள்கிறோம் சுவாமி. ஆமென்.

இந்துக்கள் தாங்கள் வேதமாகக் கொண்ட பகவத்கீதையில் 229-ம் பக்கம் 9-வது மாயாவிகார அத்யாயத்தில் சொல்லப்பட்டதாவது:—



இப்போது பகவான் அவிவிவேகிகள் தம்முண்மையையுணராது சாதாரண மனிதனாக எண்ணுவதைப்பற்றி அருளிச்செய்கிறார். ஏ! பார்த்தா சச்சிதானந்த சொரூபியாகவும் சர்வப்பிராணிகளிடத்தும் ஆன்மநாயகமாகவும் உள்ள என்னை காலதேசவஸ்து பரிச்சேதமற்ற பரமேசுவரனாக அறியாத அவிவிவேகிகள் சாதாரண மனிதனென எண்ணி அவமதிப்பார்கள். அவர்கள் மனதின்கண் ஆசைபொருந்தியவர்களாய்க் கருமங்களைச்செய்து நரகங்களில் சஞ்சரிக்கத்தக்கவர்களாகிய இராக்கதர் முதலியோராவர்.

2. இனி தம்மையறிந்து பூஜிப்போர் இத்தகையோரென்று பகவான் அருளுகிறார்:—

விவேக ஞானத்தால் என்னைப் பரிபூரணசொரூபியாகிய பரமேசுவரனென உணர்ந்து மனதையடக்கி புலன்வழிகள் செல்லவொட்டாது தடுத்து சதா என்னையே ஸ்மரித்துக்கொண்டிருப்போர் *தேவர்களாகக் கருதப்பட்டவராவர்.

---

நமது இயேசுபகவான் நாமம் இக்கீதையில் வழங்குகிறதை இந்துக்கள் அறிந்தும் அதின் வாக்யசாராம்சங்களையும் மர்மமான [illegible]களையும் உணராது மயங்கி அவருடைய முழு அம்சங்களுடன் [illegible] விசேஷங்களை அறிந்துகொள்ளாமல் தங்கள் குருக்கள் கற்பிக்கிறபடியே மார்க்கவிரோதம் பேசி ஜீவிக்கிறார்கள். ஆகையால் இயேசுபகவான் நாமம் சகல மார்க்கங்களிலும் வழங்குகிறது.

* தேவகிரியைகளைச் செய்துவருகிற பக்தியுள்ள அடிமைகள் என்பவராவர்.

1. இரவில் சஞ்சரிக்கக்கூடிய வஸ்துக்களும் துன்மார்க்கரும்.

இன்னும் தங்களுடைய உபநிஷத மந்திரத்தில் சொல்லப்பட்[illegible] [illegible]ருந்து, மந்திரம்:—

ஏக்ஷிரைபவிதம் பௌத்ரபௌத்ரர்
பிரஜாபத்திரியம் சகசம் புஸ்தகோக
அபேஸ் மக்ரியம பிரதி மந்தி
சப்தமம் ஏக்ஷிரைபவிதம் பமேர
ஸ்துதிஸ்கே சகா.

இதின் தாற்பரியம் அறியாமல் அதை தரித்துக்கொள்ள கூடாதென்றி அதை அறிந்தால் நமது இயேசுநாதரால் மரித்த அடையாளத்தைக் காட்டக்கூடியதாகவும் தன் ஜீவனத்தை நிலைமையின் ஞாபகத்தைக்கூடியதாயிருக்கிறது. ஏக்ஷிரைபவிதம் என் பாதத்திலவரை வணங்குதல், பௌத்ரபௌத்ரர் என்றால் கடவுளுடைய புத்திரபௌத்திரரானவர். பிரஜாபத்திரியம் என்பது உல கத்துக்கும் பிரஜாபதியாக ஏற்பட்டு தங்குமியின் ஒருவரும் ... ஆட்சிக்குட்பட்டாகி ஜெயம்பெற்றவரென்பது, சகசம் புஸ்தகோக என்பது எல்லோருக்கும் தெரியும்படி நட்டு பிரசங்கம் செய்யவேண்டுமென்பதே, அபேஸ்மக்ரியம் என்பது ... மரித்ததைக்காட்ட தன்னுடைய ஜீவனைக்குறிக்கும் என்பதே, பிரதியம்நி சப்தமம் என்பது, பிரதி என்பது தன் பக்தர்களுக்கு அன்புள்ளவரென்றும், மந்தி என்பது நல்ல என்றும், சப்தமம் என்பது பரிசுத்தம் பொருந்திய பரம குமாரன் என்பது ஏக்ஷிரைபவிதம் என்பது முன்பாதி காட்டுவனை வணங்... என்பதும் தன்நெஞ்சில் கொழுந்துவிட்டெரியவர் என்பது, பமே என்பது திடனை என்பதும், ஸ்துத்திக்க என்பது ... இடைவிடாமல் ஜெபம் செய்தால் மோட்சசாயுஜ்யம் பெறுவார் என்பதே. இப்படி இயேசுநாதரை சதம் வழங்குவது அறிவார்கள். இவைகளை உண்டாக்கிய கிரந்தகர்த்தா பாவம்ரம்ம.

---

முற்றிற்று.

221337